பெரியாரிய நோக்கில் மு.வ.



இரா. அறவேந்தன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பெரியாரிய நோக்கில்

மு.வ.

இரா. அறவேந்தன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

டாக்டர் மு. வரதராசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர்: பலர்)

வரிசை எண்: 18

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Periyāriya nōkkil Mu.Va.
Author	:	Dr. R. Aravendan (Thamotharan) Professor & Head Centre for Periyar Studies Bharathidasan University Thiruchirappalli - 620 024
General Editor	:	Dr. A. Sathish Senior Research Fellow Faculty of Sociology, Art and Culture International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113 Ph.: 22542992
Publication No.	:	739
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2012
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	x + 110
No. of Copies	:	1200
Price	:	Rs.55/- (Rupees Fifty Five Only)
Printed by	:	Lakshmi Agencies 23/11, Perumal Mudali Street, Royapettah Chennai -600 014
Subject	:	Criticism

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் கோ. விசயராகவன்
எம்.ஏ., எம். ஃபில்., பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

> எந்தக் கலைஞன் மனித குலத்திற்கு நன்மை பயக்கும் உயர்ந்த எண்ணங்களை மக்கள் மனத்தில் ஊட்டுவதற்குப் படைப்பு ஆற்றலைப் பயன்படுத்துகின்றானோ அவனே உண்மையான கலைஞன் ஆவான்.
>
> - மைக்கோல்ஷோலகோவ்

தமிழ்ச் சமூகத்தின் குறியீடாக விளங்கியவர் பெரியார். 17.09.1879இல் பிறந்து 95 ஆண்டுகாலம் இம்மண்ணில் வாழ்ந்தவர். மானமும் அறிவும் பெற்ற சமுதாயத்தை உருவாக்கத் தம் வாழ்நாள் முழுமையையும் அளித்தவர். பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரின் இயக்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டு களம்கண்டவர் பலர். பெரியாரியத்தைப் பறைசாற்றியோர் சிலர். அச்சிலருள் பேராசிரியர் மு.வ. அவர்களும் ஒருவர் என்பதை அடையாளப்படுத்துவதே இந்நூல்.

இலக்கியம் சமுதாயத்தின் வெளிப்பாடாக இருக்கின்றதென்றால் இலக்கியப் படைப்பாளன் சமுதாயப் பாதிப்புக்குள்ளானவனாக இருப்பான் என்பதும் உண்மையே. இன்றளவும் நம் சமூக மரபால் ஏற்படும் தொழில் வணிகப் புரட்சிகள், வர்க்க முரண்கள், நீதி, பொதுவாழ்வில் சமயம் ஆகியவற்றால் ஏற்படுகின்ற தாக்கத்தின் எதிர் விளைவுகள் போன்றவற்றை எந்த எழுத்தாளரும் பெறாமல் இருக்க முடியாது என்பது திறனாய்வாளர்களின் கருத்து. அந்த அடிப்படையில் மு.வ. அவர்களிடம் ஏற்பட்ட பெரியாரியப் பாதிப்புகளை அவரின் எழுத்துகளைக் கொண்டு அணுகுவது பொருத்தமானதாக அமையும்.

பெரியாரின் கருத்துகள் எதிர்-எதிர் நிலையில் ஏற்பு மறுப்பு என்ற வகையில் அரசியல் கொள்கைகளாக, கலை வடிவங்களின் வெளிப்பாடாகச் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தின. பெரியாரின் சமகாலத்தவரான மு.வ.வின் படைப்புகளிலும் இதனைக் காணலாம். அவ்வகையில் பெண்ணுரிமை - சாதி - சமயம் - கல்வி- மொழி-

இலக்கியங்கள் போன்ற பலவற்றிலும் இருவருக்குமான கருத்து நிலைகளை இந்நூல் வெளிப்படுத்துகிறது. பெரியாரியச் சிந்தனைகளை மு.வ. அவர்கள் தம் படைப்புகளில் வெளிப்படுத்தினாரெனினும் மாறுபடும் இடங்களும் உள. குறிப்பாக, கடவுள் மறுப்பு, பிராமண எதிர்ப்பு போன்றவற்றைச் சுட்டலாம். இவ்வகைக் கருத்து நிலைகளையும் இந்நூல் தொட்டுச் செல்வது சிறப்பு.

பெரியாரிய நோக்கில் மு.வ. என்ற தலைப்பிலான இந்நூல் டாக்டர் மு. வரதராசனார் அறக்கட்டளையின் 18வது வெளியீடாக வருவது மகிழ்ச்சி. ஏற்கெனவே 'பெரியாரிய நோக்கில் குறுந்தொகை ஆய்வு இயல்புகள்' என்ற நூலை எழுதியதன்வழி பெரியாரையும் பெரியாரியத்தையும் உள்வாங்கியுள்ள முனைவர் இரா.அறவேந்தன் அவர்கள், இப்பொழிவினை நிகழ்த்துதல் சிறப்பு. அவருக்கு எனது பாராட்டுகள்.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்து தக்கதொரு சிறந்த நூல் வெளிவரத் துணைநின்ற சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் அ. சதீஷ் அவர்களுக்கும், நூலாக்கத்திற்கும் அறக்கட்டளைப் பொழிவிற்கும் வேண்டியன செய்த நிறுவனத்தின் சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் ஆ. மணவழகன் அவர்களுக்கும் பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, தொல்லியல், விளையாட்டு (ம) இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி, சட்ட அமைச்சர் என்.ஆர். சிவபதி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இவ்வறக்கட்டளையின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் பாராட்டுகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஒரு சொல்

தமிழ் ஆய்வாளர்களின், படைப்பாளர்களின் சிந்தனைப் போக்கில் அடிப்படை மாற்றங்களை உருவாக்கிய காரணிகளில் பெரியாரியத்திற்கு முக்கிய இடமுண்டு. புராணங்களுக்கும் வரலாறுகளுக்கும் இடைப்பட்ட வேறுபாடுகள் தெரியாமல், புனைவியல் கொண்ட இலக்கியக் கருத்துகளுக்கும் வரலாற்று நிகழ்வுகளுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியாமல் எல்லா வற்றையும் 'நிகழ்ந்தவை யாக' வாசித்து அர்த்தப்படுத்தி வந்த தமிழ் ஆய்வு உலகில் பெரியாரியம் ஒரு திருப்பு முனையை உருவாக்கியுள்ளது. *குறுந்தொகைப்* பாடலுக்கும் *திருவிளையாடல் புராணத்திற்கும்* தொடர்பு உண்டு என்ற கருத்தியலை முதலில் உடைத்தவர் மு.வ.

இத்தகு மு.வ.வின் அரும்பணியை அறிந்த காலம் முதல், சமூக வரலாற்றியல் நோக்கில் ஆய்வு மேற்கொண்டு வந்த என்னுள் பெரியாரியத்தை ஓர் ஆய்வு அணுகு முறையாகக் கருதவேண்டும் என்ற கருத்து உருக்கொண்டது. அந்த முயற்சியில் இரண்டாவது படைப்பு, படிக்கல் இந்நூல்.

தமிழறிஞர் மு.வ. அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடி முடிக்கும் இந்நேரத்தில், அவர்தம் ஆய்வுகளுக்கென ஆய்வடங்கல் வெளிவந்து நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்ட இந்நேரத்தில் இந்நூல் வெளிவருகின்றது. மு.வ.வின் படைப்புகளை மையமிட்டுப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. பல ஆய்வேடுகள் எழுதப் பெற்றுள்ளன. அவற்றில் மு.வ. சுட்டும் முற்போக்குத் திறன்கள் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. எனினும், மு.வ.வின் இலக்கியப் படைப்பாற்றல் முறைக்குப் பெரியாரியம் எனும் இயக்கப் பின்புலம் தூண்டு கோலாகவும் அடிப்படையாகவும் அமைந்திருந்தது தனி ஆய்வில் சுட்டிக்காட்டப்பெறவில்லை. அப்பணியை இந்நூல் செய்துள்ளது.

இந்நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மு.வ. அறக்கட்டளைப் பொழிவின் வெளியீடாக வெளி வருகின்றது. இந்த வாய்ப்பை வழங்கிய முன்னாள் இயக்குநர் முனைவர் கா.மு. சேகர் அவர்களுக்கும் இந்நாள் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் இந்நிறுவன உதவிப் பேராசிரியர் முனைவர் அ.சதீஷ் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி.

பெரியாரியத்தில் ஈடுபடுகின்றேன் என்பது அறிந்ததும் தோழர் வே. ஆனைமுத்து தொகுத்த *பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்* எனும் நூல் தொகுதிகளையும் திராவிடர் கழகத் தலைவர், விடுதலை ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் எழுதிய *பெரியாரியல் ஆய்வுரைகள்* எனும் நூலினையும் தம் அரிய நூல் சேகரிப்பில் இருந்து எனக்காகக் காரைக்குடிவரை தம் கையில் சுமந்துவந்து அளித்து ஊக்கப்படுத்தியவர்கள் என் பேராசிரியர் க.ப. அறவாணன் மற்றும் அம்மா தாயம்மாள் அறவாணன் ஆகியோர் ஆவர்.

என்னுடைய பெரியாரிய ஈடுபாடு தொடர்பாகச் செய்தி அறிந்ததும் தொலைபேசிவழி பலவாறு ஊக்கப்படுத்தியவர் என் முனைவர்பட்ட நெறியாளர் பேராசிரியர் சு. இராசாராம் ஆவார். இதுபோன்று தொடர்ந்து ஊக்கத்தை நல்கியோரில் குறிப்பிடத் தக்கவர்கள் பேரா. அ. அறிவுநம்பி, பேரா. எஸ். சுப்பையா, பேரா. பெ. கோவிந்தசாமி, பேரா. பொ. வேணுவனலிங்கம் ஆகியோர் ஆவர்.

இந்த நூல் எழுதும் பணி 2012 ஜனவரியில் தொடங்கிற்று. பல ஆயிரக்கணக்கான பக்கங்களை உடைய மு.வ.வின் படைப்பு களை ஒரு முறையேனும் படித்தே தீருவது என்று முடிவு செய்தேன். மலைப்பாக அமைந்த இப்பணிக்குப் பெரிதும் துணை செய்தவர் என் மனைவி முனைவர் நித்தியா அறவேந்தன். மு.வ.வின் நாவல்கள் அனைத்தையும் படித்துத் தேவைப்படும் இடங்களில் கோடிட்டு அவர் அளித்ததால் வேகமாகக் குறிப்பு களைச் சேகரிக்கவும் சில நாவல்களை வேகமாகப் படிக்கவும் முடிந்தது. குறிப்புகளை எடுத்து எழுதுவதிலும் நூல் பகுதிகளை

நான் சொல்லச் சொல்ல எழுதி அளிப்பதிலும் பெரிதும் துணை நின்றவர் பெரியார் உயராய்வு மைய முனைவர்பட்ட ஆய்வாளர் திரு. மூ. அய்யனார் ஆவார். எழுத்துப்படிகளை ஒருமுறை வாசித்துக் கருத்து வழங்கியவர் மற்றோர் ஆய்வாளர் திரு. ம. லோகேஸ்வரன் ஆவார். மெய்ப்புத் திருத்தி, விரிவான நிலையில் கருத்து வழங்கி உதவியவர் கோவை கற்பகம் பல்கலைக்கழகத் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் மு. முனீஸ்மூர்த்தி ஆவார். மின்அஞ்சல்வழி வந்த மெய்ப்புப் பகுதியைப் பதிவிறக்கம் செய்தலுடன் மெய்ப்பையும் மூலத்தையும் என்னுடன் ஒப்பிட்டு வாசிக்கத் துணைநின்றதுடன் மெய்ப்பில் குறிக்கப் பெற்ற திருத்தம் ஒவ்வொன்றும் சரிசெய்யப் பெற்றுள்ளனவா என்பதனைச் சரி பார்த்து அளித்தவர் ஆய்வாளர் திரு. ம. புகழேந்திர சோழன் ஆவார். பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிட்ட குடியரசுத் தொகுதிகள் பலவற்றை அன்பளிப்பாக அளித்து ஊக்கப்படுத்தியவர் திருச்சிபெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி முதல்வர் திரு. கலைச்செல்வன் ஆவார். திருக்குறள் மாநாடு தொடர்பாக விடுதலையில் வெளிவந்த செய்திகளை அளித்து உதவியவர் பெரியாரிய எழுத்தாளர் திரு. பசுகௌதமன் ஆவார்.

இவர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

நிறைவாக, நான் நெஞ்சில் நிறுத்தி நன்றி கூறத்தக்க பெருந்தகையர், பெரியார் உயராய்வு மையத்தில் பணியாற்று வதற்குரிய அரிய வாய்ப்பை எனக்கு நல்கிய எம் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் திருமதி கோ. மீனா ஆவார்.

1940களில் 21-ஆம் நூற்றாண்டைய தமிழகம் எவ்வாறு அமையும், அமைய வேண்டும் என்பதனைத் தம் சொற்பொழிவின் வழி பெரியார் வெளிப்படுத்த, அப்பொழிவு பின்னர் *இனிவரும் உலகம்* என நூலாக வெளிவந்தது. இதேபோன்று கி.பி. 2000-இல் தமிழகம் எவ்வாறு அமையும், அமைய வேண்டும் என்பதனை அதே தலைப்பில் 1947இல் மு.வ. தனி நூலாக்கி அளித்துள்ளார். பெரியார், மு.வ. இருவருமே பொது உறைவிடங்

களையும் பொதுச் சமையலகங்களையும் வலியுறுத்துகின்றனர். இவைபோன்று ஏராளமான ஒத்த கருத்துநிலைகளை ஒப்பிட்டுக் காட்டித் தனிநூல்கள் எழுதுவதற்கும் வாய்ப்புகள் பல உள்ளன. இந்நூலிலுள்ள ஒவ்வொரு தலைப்பு தொடர்பாகவும் தனித் தனியே பல நூல்களை, தொகுதிகளை எழுதலாம். சுருக்கம் கருதி மையமான கருத்தியல்களே இந்நூலில் கவனப்படுத்தப் பெற்றுள்ளன; மு.வ.வின் சிந்தனைகளுக்குப் பெரியாரியம் அடிப்படையாக அமைந்துள்ளது என்பதனைச் சுட்டிக் காட்டும் முயற்சியே மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

பெரியாரின் கருத்துகள் உருக்கொண்ட காலக்கட்டத்தின் முதன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பதால், பெரியாரியல் அறிஞர்கள் தொகுத்தளித்துள்ள தொகுதிகளை அடியொற்றி இந்நூலில் *குடிஅரசு, விடுதலை* இதழ்களுக்கான நாள்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

- அன்புடன்

இரா. அறவேந்தன்

ஆசிரியர் குறிப்பு



முனைவர் இரா. அறவேந்தன் விழுப்புரம் மாவட்டம் சாத்தனூரைச் சேர்ந்தவர். தமிழில் பி.லிட்., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி. ஆகிய பட்டங்களைப் பெற்றவர். புதுக்கோட்டை, திருச்சி, காரைக்குடி ஆகிய ஊர்களில் பேராசிரியராகப் பணியாற்றி 15 ஆண்டுகள் பயிற்றுவித்தல் அனுபவம் பெற்றவர். தற்போது திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பெரியார் உயராய்வு மையத்தில் பேராசிரியர் மற்றும் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், சேக்கிழார் மன்றம் ஆகியவற்றில் பரிசுகளையும் குடியரசுத் தலைவரின் 'இளம் தமிழறிஞர்' (2005-2006) விருதினையும் பெற்றவர்.

இதுவரை 14 நூல்களையும், 122 கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பெரியாரிய நோக்கில் குறுந்தொகை ஆய்வு இயல்புகள், குறுந்தொகை பதிப்பு வரலாறு, செவ்வியல் அழகியல், தமிழ் அணியிலக்கண மரபும் இலக்கண மறுவாசிப்பும் போன்றவை இவரின் குறிப்பிடத்தக்க நூல்கள்.

உள்ளே

1.	மு.வ.	1
2.	பெண்ணுரிமை	6
	கடவுள் நம்பிக்கையும் பெண்ணடிமைத்தனமும்	7
	பெண் கற்பு	10
	பெண் இயல்பு	13
	கல்வியும் பொருளீட்டும் திறனும்	15
	திருமணம்	18
	கணவன் மனைவி உறவு	22
	கடமைகள்	27
3.	சாதி	30
4.	சமயம்	36
	மு.வ. கட்டமைக்கும் கடவுள் கருத்தியல்	42
	வழிபாட்டுச் சடங்குகளை எதிர்த்தல்	43
	சாமியார்களை எதிர்த்தல்	46
	மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்தல்	46
	ஊழ்-எதிர்ப்பு	50
	கோவிலில் நிகழும் கொடுமைகளைச் சுட்டுதல்	52
	கோவிலில் சாதி	53
	கோவிலில் தமிழ்	54
	மு.வ. சுட்டும் வழிபாட்டு முறைமை	55
	மு.வ.வின் நம்பிக்கைக்கான அடிப்படை	58
5.	கல்வி	62
6.	மொழி	70
7.	இலக்கியம்	79
	திருக்குறள் நேயம்	84
8.	பொருள்	90
9.	நிறைவுரை	97
பின்னிணைப்புகள்		
	1. கால நிரலில் மு.வ.வின் படைப்புகள்	100
	2. சாதிஒழிப்பு (மு.வ.வின் கட்டுரை)	102
	3. சுருக்க விளக்கம்	105
	4. திருமணம் : பெரியாரின் கருத்துநிலை	106
துணை நூல்கள்		107
பொருளடைவு		109

1

மு.வ.

களை என்றுமே களைதான், பெருச்சாளி என்றுமே இடையூறுதான், ஆனால் மனிதரில் தீயவன் நல்லவனாக முடியுமே! திருந்தமுடியுமே! (மண். ப. 445).

கருத்து இல்லாத சமுதாயம் கருத்துக்கொண்டு உருவாக வேண்டும்; கருத்து உடைய சமுதாயம் நல்ல கருத்துகளை உருவாக்க வேண்டும். இந்த இரண்டும் செய்யாமல் மக்கள் உறங்கிக் கிடந்தால் 'ஏய்ப்பாருக்கு ஏவல் செய்யும்' நிலையே இருக்கும். ஆகவே, சமுதாயத்தின் குறை, பொறுப்பு உணராக்குறை, கடமையைச் செய்யாக்குறை என்றுதான் எனக்குத் தெளிவாகத் தோன்றுகிறது. சமுதாயத்திற்கு நல்ல கருத்து உருவாகிவிட்டால், அதன் பிறகு தீய அரசாங்கம் ஏற்பட முடியாது. ஏற்பட்டாலும் நிலைக்க முடியாது. அதனால்தான் நான் அரசாங்கத்தைப் பழிக்க முடியாமல் சமுதாயத்தைக் குறை கூறுகிறேன் (நண். ப. 67).

தந்தை பெரியார் 17.09.1879-இல் பிறந்து 95 ஆண்டுகாலம் வாழ்ந்து 25.12.1973-இல் இம் மண்ணுலகை விட்டுப் பிரிகின்றார். இந்த இடைப்பட்ட காலத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இலக்கியவாதியாக மு.வ. திகழ்கின்றார். தந்தை பெரியார் காங்கிரசு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த தீவிரமான காலக்கட்டத்தில் 25.04.1912-இல் பிறந்து பெரியார் மறைந்த ஓராண்டுக் காலத்திற்குள் 10.10.1974-இல் இவ்வுலகைவிட்டு மு.வ. மறைகின்றார். அதாவது பெரியாரின் கருத்தாக்கங்கள் வெளிப்படத் தொடங்கி வளர்ந்த ஆண்டுகளின் எண்ணிக்கையே மு.வ.வின் வயதிற்குரியதாக அமைகின்றது.

தந்தை பெரியார் 1925 முதல் *குடிஅரசு* ஏட்டை வெளியிட்டு வந்தார். 1928 முதல் தம் நூல்களையும் வெளியிட்டு வந்தார். இதற்குச் சற்றொப்ப 10 ஆண்டுக் காலத்திற்குப்பின்னர் 1939 முதல் மு.வ.வின் எழுத்துகள் வெளிவரத் துவங்கியுள்ளன. 1973 வரை மு.வ. எழுதிய படைப்புகள் 85 ஆகும். படைப்பிலக்கியத்திலும் கட்டுரையாக்கத்திலும் தமக்கென ஒரு தனி இடத்தைத் தமிழ் வாசகரிடத்தே மு.வ. பெற்றிருந்தார் என்பது உலகம் அறிந்த செய்தி.

தந்தை பெரியார் கூட்டங்கள், மாநாடுகள், போராட்டங்கள் நடத்தி அவற்றின்வழி தம் சிந்தனை வளத்தை இந்நாட்டு மக்களுக்காக முன்வைத்த பெருந்தகையர். எவ்வெவ் நோக்கங் களுக்காகப் போராட்டங்களை நிகழ்த்தினாரோ அவை நிறைவேறி அரசியல் தீர்வு கண்டு சமூகத்தில் மலர்ந்ததைத் தம் கண்ணால் கண்டு, காதால் கேட்டு மகிழும் அரிய பேறுபெற்றவர். காங்கிரசு, நீதிக்கட்சி எனும் கட்சிசார் நிலைகளில் இயங்கித் 'திராவிடர் கழகம்' எனும் இயக்கத்தைத் தோற்றுவித்தவர். சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்தவர். அவ்வியக்கத்தின் வழி இன இழிவை நீக்குவதற்கு எனச் சில கொள்கைகளை வகுத்துக்கொண்டு தம் இறுதி மூச்சுவரை போராடியவர். அவர்தம் கொள்கைகள், கருத்துகள் மக்கள் மத்தியில் வெகுவாகப் பரவி ஒரு சலசலப்பை, விழிப்புணர்வை உருவாக்கி இருந்தன. தமிழ்நாட்டுக்கு அப்பால் வடநாட்டினரோடும் கொள்கையால் நட்புறவு கொண்டிருந்தார். இத்தகு மிகப்பெரிய ஆளுமையின் வீச்சு தமிழ்நாட்டில் உருக்கொண்ட எல்லாக் கலைகளிலும் ஒரு வகையான தாக்குதலை ஏற்படுத்திற்று.

உணர்வு நிலையில் நின்று சிந்திக்கும் நிலைக்கு மாறாக அறிவுக்கண்கொண்டு எதனையும் அணுகும் முறை தமிழ் உலகில் அழுத்தமாகக் கால் ஊன்றிற்று. வரலாறு வேறு, புராணம் வேறு என்று தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகள் முதலானோர் பேசினர். தாய்மொழிக் கல்வி, தாய்மொழி இசை எனும் கருத்தாக்கங்கள் செயலாக்கம் பெற்றன. தமிழ் ஆராய்ச்சி உலகில் *திருவிளையாடல் புராணக்* கதைக்கும் *குறுந்தொகை* எனும் இலக்கியப் படைப்பிற்கும் தொடர்பில்லை என்று சுட்டும்நிலை உருவாயிற்று. திராவிட இயக்கக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களைப் படைத்தல் என்ற நிலையோடு திராவிட இயக்கத் தாக்கத்தாலும் இலக்கியங்கள்

படைக்கப்பெற்றன. இந்த மாபெரும் இயக்கத்திற்கு ஆதரவாகவோ எதிராகவோ கருத்துகளை வெளிப்படுத்தும் வகையில் நூல்கள் வெளியிடப்பெற்றன. சுருங்கச் சொன்னால் பெரியாரியச் சிந்தனைகள், அவர்தம் இயக்கச் செயல்பாடுகள் ஏதேனும் ஒருவகையில் தமிழ்நாட்டில் உருக்கொண்ட கலைகளில் கலைஞர்களிடத்தில் தாக்கத்தை உருவாக்கின எனலாம். இதற்கு மு.வ. என்ற இலக்கியப் படைப்பாளி மட்டும் விதிவிலக்கு இல்லை.

மு.வ. சாதி தொடர்பான ஒரு கட்டுரையில் பெரியாரின் பணியைத் 'தொண்டு' என்றே குறிப்பிடுகின்றார். தோழர் குத்தூசி குருசாமி என்பவருக்கும் தமக்கும் ஏற்பட்ட நட்பை மு.வ. பதிவு செய்துள்ளார். குருசாமிக்கான இரங்கல் உரையில் அவர்தம் உயர்ந்த கருத்துகளை, செயல்பாடுகளை நினைந்து பேசுகின்றார். மணியம்மையார் தொடர்பான வழக்கு ஒன்றிற்கு அரசாங்கத்தின் சார்பாகப் பாரதிதாசனும், மு.வ.வும் சாட்சி சொன்னதாக மங்கள முருகேசன் குறிப்பிடுகின்றார். இவைபோன்ற அரிதான சான்றுகளே மு.வ.விற்கும் திராவிட இயக்கத்திற்குமான நேரடியான வெளிப் படையான உறவை அறிய உதவுகின்றன. எனினும் மு.வ.வின் படைப்புகளில் வெளிப்படும் கருத்துகளுக் கெல்லாம் பெரியாரியம் அல்லது திராவிட இயக்கத்தின் தாக்கம் தான் காரணமாக இருத்தல் வேண்டும் என்பதனை இந்நூல் விவரிக்கின்றது.

பெரியார், மு.வ. ஆகிய இருவருமே தம் சமகாலச் செல் நெறியில் மனநிறைவு அடையவில்லை. சமூகம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற பெரியாரின் கருத்து மு.வ.விடமும் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது. பழங்கால வாழ்க்கை முறைக்கும் தம்கால வாழ்க்கை முறைக்கும் உள்ள வேற்றுமையை வாய்ப்பு நேரும் போதெல்லாம் சுட்டிக்காட்டி மு.வ. மாற்றத்தை வலியுறுத்து கின்றார். விலங்குகளும் பறவைகளும் நூற்றாண்டுக் கணக்கில் மாற்றம் இன்றி வாழ்ந்துவருகின்றன. ஆனால், மனிதர் வாழ்க்கை முறை காலந்தோறும் மாறிவருகின்றது என்பதனைப் பெரியார் சுட்டிக்காட்டி மாற்றத்தை வலியுறுத்துவார். (குடி 25.5.1935, விடுத 27.3.1951). இதே பாணியிலேயே மாற்றத்தை வலியுறுத்தும் போக்கைப் பல நூல்களில் மு.வ.விடம் காணமுடிகின்றது (வாழ்.ப.229, மண்.ப.446, நெஞ்.ப.429). எதையும் ஆராய்ந்து பார்த்து ஏற்க வேண்டும். தம்முடைய கருத்திலும் உடன்பாடு இருந்தால் மட்டும் ஏற்கலாம் என்று மேடைதோறும் பெரியார்

சுட்டுவார். மு.வ.வும் ஆராய்ந்து பார்ப்பதுடன் எதிரியின் கருத்திலும் உண்மை இருக்கும் என்பதனைப் பதிவு செய்கின்றார் (நெஞ்.ப.421). பொது நலத்திற்காகச் செயல்படுவோர் பழி யில்லாமல் வாழ முடியாது (நண்.ப.88). பொது நலத்திற்காகக் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், தொண்டு செய்தல் என்பனவற்றைப் பெருமையாகக் கொள்ள வேண்டும் (தம்.ப.64). மனிதர்கள் மட்டுமின்றித் தெய்வங்களும் எளிய நிலையில் காட்சி தர வேண்டும் (நண்.ப.131). விஞ்ஞானத்தை உயர்வாகப் போற்ற வேண்டும் (கரி.81). சாதிப் பிரிவுகள் செயற்கையானவை (இல.ப.44). உணர்ச்சிவயப்படக்கூடாது (மலர். ப. 89, அன்.ப.38). பழமையிலிருந்து தேவையானவற்றை மட்டும் கற்க வேண்டும் (அன். ப.15). அறிவுவளர்ச்சி வேண்டும் (அன்.ப.64). வாழ்க்கைக் குறைகளை எண்ணிப் பார்க்க வேண்டும் (அன்.ப.49-50). தொழில்களுக்கிடையே ஊதிய வேறுபாடுகள் இருத்தல் கூடாது (அன். ப.61). பண்பையும் திறனையும் வளர்ப்பதாகக் கல்வி அமைதல் வேண்டும் (நெஞ். ப.95). சில நிலைகளில் நெகிழ்ச்சித் தன்மை வேண்டும் (நெஞ். ப.426). அழகைவிடக் குணத்திற்கும் அறிவிற்குமே முதன்மை அளிக்க வேண்டும் (மலர். ப.54). பொங்கல் விழாவைக் கொண்டாட வேண்டும் (மலர். ப.414, நெஞ்.ப.115). புராணக் கதைகளெல்லாம் நடந்தவைகள் அல்ல (நெஞ். ப.117). சமூகத்தின் செயல்பாடு தனிமனிதனைப் பாதிக்கும் (வாழ்.ப.251). உயர்ந்த கருத்துகளைப் படிப்பதால் வாழ்க்கை செம்மைப்படும் (கி.பி. ப.21) என்றெல்லாம் மு.வ. எழுதிச் செல்லும் கருத்தாக்கங்களைப் பெரியாரியத்தில் இருந்து பிரித்துப் பார்ப்பது எளிதானதுமன்று; பொருத்தமுமன்று. ஒரு மாபெரும் இயக்கம் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில், அதிலும் செல்வாக்கோடும் வீரியத்தோடும் செயல்பட்டுக் கொண்டி ருக்கும் ஒரு சமூகத்தில் அதே கருத்துடைய அல்லது ஒத்த கருத்துடைய படைப்பாளி உருவாகிறார் என்றால் படைப்புகள் வெளிவருகின்றன என்றால் இயக்கத்தின் தாக்கம் இலக்கியத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிகழ்ந்துள்ளது என்று கருதுவதுதான் பொருத்தமுடையதாக அமையும்.

ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் தாக்கம் குறிப்பிட்ட படைப்பாளியின் படைப்புகளில் இடம்பெற்றுள்ளது என்று அடையாளப்படுத்துகையில் இயக்கத்தின் எல்லாக் கூறுகளும்

இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கருதமுடியாது. அதே போன்று படைப்பாளிக்கென எவ்வகையான தனித்தன்மையும் இல்லை என்ற புரிதலோடு இயக்கச் சார்பில் அணுகவும்முடியாது. அணுகுவதும் தவறு. இந்தப் புரிதலின் அடிப்படையில் பெரியாரியத்திலிருந்து மு.வ. எங்கெல்லாம் விலகுகின்றாரோ, வேறுபடுகின்றாரோ அவையெல்லாம் அவர்தம் தனிப்பட்ட கருத்து நிலைப்பாட்டிற்குரியவையாகக் கருதத்தக்கவை ஆகும்.

②

பெண்ணுரிமை

வீட்டில் நான் அரசியாக வாழ்ந்தேன். அவர் அரசராக வாழ்ந்தார். அவர் ஆளும் முறைவந்தபோது நான் அமைச்சுத் தொழில் மேற்கொண்டு ஆலோசனை கூறிவந்தேன். நான் அரசியாக இருந்து கடமையைச் செய்யும்போது அவர் அரசராக இருந்து துணைசெய்து வந்தார் (அந். 40).

'உலகம் இருவகை. ஒன்று ஆளும் பகுதியான அரசியல்; மற்றொன்று வாழும் பகுதியான சமூக அமைப்பு. இந்த இரண்டையும் படித்துத் தேர்ந்தால் எனக்கு நீயும் உனக்கு நானும் துணையாக வாழ்ந்து மகிழலாம் என்று சொல்லி நூல்களையும் பத்திரிகைகளையும் வாங்கி வீட்டை நிரப்பினார். அவற்றைக் கற்றது வீணாகப் போகவில்லை. இன்று ஒருவாறு திறமையும் இருக்கிறது (அந். ப. 47).

பழங்காலத்தில் ஆண்களுக்கு உரிமை மிகுதியாக இருந்தது. மனைவி கணவனைத் தெய்வமாகத் தொழுது வந்தாள். ஒரு பெண் அப்படி வாழ்ந்தால்தான் சமுதாயத்தில் அவளுக்கு மதிப்பு இருந்தது. அந்தக் காலத்தில் அதுதான் நாகரிக வழக்கம். பேஷன் (Fashion) என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதுபோல், இந்தக் காலத்தில் ஒத்த உரிமை வளர்ந்துவருகிறது. கணவனும் மனிதன்; வாழ்க்கைக்குத் துணையானவன். ஆகையால் இருவரும் ஒத்துப்போவது நல்லது (மண். ப.64).

தந்தை பெரியார், மு.வ. இருவருமே தம் சமகாலப் பெண்களின் வாழ்வியல் முறையில் மனநிறைவு பெறவில்லை என்பதனை அவர்களின் எழுத்துகள்வழி அறியமுடிகின்றது. கருத்து வெளிப்பாட்டு நிலைகளில், முறைகளில் வேறுபாடு நிலவினும் இருவர்தம் கருத்தியல்களில் பெண் விடுதலையும், பெண்களுக்குரிய கடமைகளை வரையறுப்பதும் மையம்

கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது. கடவுள் நம்பிக்கைக்கும் பெண்ணடிமைத்தனத்திற்கும் இடைப்பட்ட உறவு, பெண் கற்பு, பெண் இயல்புகள், பெண் கடமைகள், பெண்ணுக்குத் தேவையான கல்வி அறிவு, சுதந்திரம், பொருளீட்டும் திறன் எனப் பல்வேறு கோணங்களில் இருவருமே சிந்தித்துள்ளனர்.

கடவுள் நம்பிக்கையும் பெண் அடிமைத்தனமும்

ஆண்கள் பெண்விடுதலை வேண்டுமென்று பேசுவதில் பெரியாருக்கு உடன்பாடு இல்லை. ஆண்கள் பேசுவது என்பது, பாசாங்குத்தனமாக, சூழ்ச்சியானதாக, ஏமாற்றுத்தனமானதாக அமையும் என்று விமர்சிக்கின்றார். 'நரிகளால் ஆடு கோழி களுக்கு விடுதலை கிடைக்குமா? பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைக்குமா? முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை கிடைக்குமா? பார்ப்பனர்களால் மற்றவர்க்குச் சமத்துவம் கிடைக்குமா? வெள்ளையர்களால் இந்தியர்க்கு வளம் கிடைக்குமா? என்று பல்வேறு கோணங்களில் வினாக்களைத் தொடுத்து, 'கிடைக்கவே கிடைக்காது' என்று அழுத்தம் திருத்தமாகத் தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார் (குடி.12.8.1928). இந்த விமர்சனத்தை 1928இல் முன்வைக்கும் பெரியார் தொடர்ந்து பெண் விடுதலைக்குத் தீவிரமாகக் குரல்கொடுத்து வருகின்றார். செங்கல்பட்டில் நடந்த (1929) முதலாவது சுயமரியாதை மாநாட்டில் பெண் விடுதலை தொடர்பான தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பெற்றன. இந்த மாநாடு நிகழ்வதற்கு 40 நாள் களுக்கு முன்னர் வேலூரில் 1929 ஜனவரி 5,6 ஆகிய நாள்களில் வடஆற்காடு மாவட்டப் பார்ப்பனர் அல்லாத வாலிபர் மாநாடு நடைபெற்றது. அதில் திருமதி வடிவாம்பிகை தாமோதரம் தலைமையில் நிகழ்ந்த பெண்கள் மாநாட்டில் பெண்ணுரிமைக்குக் குரல்கொடுக்கும் வகையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன (விடுத. 23.5.2012). தந்தை பெரியாரும் பங்கு கொண்ட அம்மாநாட்டில் நிறைவேற்றப்பெற்ற முக்கியத் தீர்மானங்களுள் சிலவருமாறு :

(அ) நமது பெண்மணிகளுக்குக் குடும்பச் சொத்தில் ஆண் களைப் போலவே சரிபங்கு இருக்க வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஆ) விதவைகள் என்பவர்களுக்கும், அவர்களின் புருஷர் களுக்குள்ள சொத்துக்கள் முழுவதிலும் பூர்ண சுதந்திரம் இருக்க வேண்டும்.

(இ) பாகம் பிரியாத குடும்பங்களிலும் புருஷர்களுக்குக் கிடைக்கக்கூடிய சொத்துக்களின் உரிமை முழுவதும் அவர்கள் இறந்த பிறகும் அவர்களின் மனைவிகளுக்குக் கிடைக்க உரிமை இருக்க வேண்டும்.

(ஈ) ஆண்கள் தங்கள் மனைவிகள் காலம் சென்றுவிட்டால் மறு விவாகம் செய்துகொள்ள உரிமை இருப்பது போலவே எல்லாப் பெண்களுக்கும் புருஷன் இறந்து போனால் மறுவிவாகம் செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டும்.

(உ) ஜாதி வித்தியாசம் இல்லாமல் ஒவ்வொருவரும் தங்களுக்கு இஷ்டமான வகுப்பில் கலியாணம் செய்து கொள்ளப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமஉரிமை இருக்க வேண்டும். இவ்விஷயங்களை ஒவ்வொரு வாலிபரும் பிரச்சாரம் செய்வதோடு சட்டசபை அங்கத்தினர்களையும் இந்தக் கொள்கைக்கு ஏற்றபடி அரசாங்கத்தில் சட்டம் இயற்றும்படி செய்ய வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

(ஊ) ஒவ்வொரு வாலிபரும் கூடுமான வரை தங்களுக்கு ஏற்ற விதவைப் பெண்ணையே விவாகம் செய்து கொள்ள முயற்சி செய்ய வேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

(எ) பெண்களுக்கு 18 வயதும் ஆண்களுக்கு 24 வயதும் சென்றபிறகே கல்யாணம் செய்ய வேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

இவ்வளவு தீவிரமாகப் பெண்விடுதலை பேசும் பெரியார் ஆண்கள் பேசுவது பாசாங்குத்தனமானது என்று விமர்சனம் செய்ததன் நோக்கம் என்ன? எனும் வினா எழுகின்றது. ஆண்களை விமர்சிப்பது பெரியாரின் முதன்மை நோக்கமன்று; பெண்கள் தங்கள் பிரச்சினைகளுக்காகப் போராட வேண்டும்; அதற்கேற்ற சமூகச்சூழல் உருவாக வேண்டும்; பெண்கள் தங்களுக்குத் தாங்களே தடையாக அமைந்து விடுகின்ற இழி மனநிலைகள் மாறவேண்டும்; ஆண் மக்களின் சொத்துகள் என்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும், அவர்களின் கோபத்திற்கு ஆளாகக்கூடாது என்றும் கருதுகின்ற பெண்களின் மனநிலையில் மாற்றம் வேண்டும் என்பவைதாம் பெரியாரின் முதன்மை நோக்கங்கள்.

பெண் மக்கள் உண்மை விடுதலை பெற்று உண்மைச் சுதந்திரம் பெற வேண்டுமானால், 'ஆண்மை'யும் 'பெண் அடிமையும்' கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்பதற்குப் பொறுப்பாயுள்ள கடவுள் தன்மையும் ஒழிந்தாக வேண்டும் (குடி - 12.8.1928)

கற்புக்காகப் புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாய வேண்டும் (பெண் ஏ.அ.1934).

இந்த விமர்சனத்தின்வழி 'கடவுள்-மதக்கொள்கை' என்பவைதாம் பெண்ணடிமைத்தனத்திற்கான ஆணிவேர் என்பதனை அடையாளம் காணுகின்றார்; காட்டுகின்றார். பிறவி அடிப்படையில் மனிதர்களுக்கிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் இந்துமதக் கொள்கையைச் சுட்டுப் பொசுக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதேபோன்று, பெண் அடிமைத்தனத்திற்கு வழிவகுக்கும் இந்துமதக் கொள்கை யையும் பொசுக்க வேண்டும் என்கிறார். தமிழ்ப்பெண்களின் மனநிலையைக் கட்டமைப்பதில் கடவுளும் மதமும் பெரும் பங்கு வகிக்கின்றன என்ற பெரியாரின் கண்டறி திறன்தான் அவரை ஏனைய பெண்ணியவாதிகளிலிருந்து பிரித்துத் தனித்துவம் உடையவராகக் காட்டுகிறது. மு.வ.வும் தம் இலக்கியப் படைப்புகளில் போராடி வெற்றிபெறும் பெண்கள் கடவுளைத் துணையாகக் கொண்டதாகப் படைக்கவில்லை. அப்பெண்களிடம் இருக்கும் கடவுளை நம்பிக்கை உருவ வழிபாட்டிற்கு உரியதாகவோ, இந்துமதம் சார்ந்ததாகவோ அமையவில்லை; அறநெறிவழிப் பட்டதாகவே அமைகின்றது.

மு.வ. தம் படைப்புகளில் இரு தலைமுறைகளுக்குரிய பெண்களைப் படைப்பதை ஒரு படைப்பாக்க முறையாகவே கொண்டுள்ளார். மூத்த தலைமுறைப் பெண்கள் சமூகத்தில் நிலவும் சராசரி கடவுள் தன்மையை ஏற்றவர்களாகவும் மூட நம்பிக்கைகளுக்கு உரியவர்களாகவும் படைக்கப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகள் கல்வி அறிவு பெற்றவர்களாகவும், துணிச்சலுக்குப் பெயர்போனவர் களாகவும், தனித்துநின்று பொருளீட்டும் மனவலிமை உடையவர் களாகவும் படைக்கப் பெற்றுள்ளனர். இவர்கள் தம் தாய்மார் களிடம் இருக்கின்ற மூடநம்பிக்கைகளை வெறுக்கின்றனர். அறியாமையைக் கண்டு மனம் வருந்துகின்றனர். செந்தாமரை நாவலில் வரும் பெண் கதைமாந்தரின் மனநிலைகளை இதற்குத் தக்க சான்றுகளாகச் சுட்டலாம்.

கண்ணால் கண்டதை நம்புகிறவள் அன்னை. "கண்ணால் கண்டதும் பொய், காதல் கேட்பதும் பொய், தீர எண்ணித் தெளிந்ததே மெய்" என்னும் பழமொழி அவளிடம் செல்லாது. காரண காரியங் களை எண்ணிப்பகுத்து உணரும் வல்லமை, படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குக்கூடப் பலருக்கு இல்லையே. குடும்ப இன்ப துன்பம் என்ற பாடம் தவிர வேறு படிப்பு அறியாத தாய்க்கு விளக்கம் எங்கிருந்து வரும்? (செந். ப.37).

பெண் கற்பு

பெண்களுக்கு என்றே சமூகம் வரையறுத்த நாணம் முதலான பண்புகளைப் பெரியார், மு.வ. இருவரும் மறுதலித் தாலும், கற்புக் கருத்தியலைச் சிலவகை வரையறைகளுடன் ஏற்றுக்கொள்கின்றனர். பெண்ணுக்கு மட்டுமானதாகக் கற்பு வலியுறுத்தப்பெறும் நிலையைப் பல்வேறு கோணங்களில், காரண காரிய அடிப்படையில் கடுமையாக விமர்சிக்கின்றார் பெரியார். ஆண்வழிப்பட்ட சொத்துரிமையும், பெண்களுக்குச் சொத்துரிமை இன்மையும் கற்புக் கருத்தியல் பெண்களுக்கு மட்டுமானதாக வலியுறுத்தப்பெறும் நிலையை உருவாக்கி விட்டது என்கிறார்.

ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்க மென்பதோ கற்பென்பதோ ஆண் பெண் இரு பாலாருக்கும் சொந்தமானதே யன்றிப் பெண்களுக்கு மட்டுமல்ல. கற்பு என்பதைச் சுகாதாரத்தையும் சரீரத்தையும் பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும், இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை. ஆண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை. ஆதலால் அந்த அதாவது 'ஒரு பிறவிக்கு ஒரு நீதி' என்கின்ற கற்புமுறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் (குடி 1.3.1936).

பெரியாரின் இக்கருத்து விரிவுபடுத்தப்பெற்று, சற்று வேறு ஒரு தொனியில் மு.வ.-விடமிருந்து வெளிப்பட்டுள்ளது. கரித்துண்டு நாவலில் (ப.212) பெண்ணுக்கு மட்டும் வலியுறுத்தப்பெறும் கற்பு நிலைபற்றி விவரிக்கின்றார். தமிழில் மரபாகச் சொல்லப் பெற்று வந்த பெண்கற்புக் கருத்தியலுக்கு மாறான நடப்பியல் உலகுக்கு ஏற்ற கற்புக் கருத்தியலை முன்வைத்துள்ளார்.

கணவன் மனைவி எனச் சேர்ந்து வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் உண்மையானவர்களாக வாழ்ந்தால் அதுவே கற்பு என வரையறுத்து அளிக்கின்றார். வாழ்நாள் முழுவதும் ஒருவன் ஒருத்தியாக வாழ்வதுதான் கற்பு என்பது பழங்காலத்திற்கு மிகப்

பொருந்தும். அன்றைய தொழில் முறைக்கு ஏற்றதாக அது அமைந்திருந்ததால் அக்கருத்தியலைப் பின்பற்றுவது மிக எளிதாக இருந்தது. ஆனால் இந்தக் காலத் தொழில்முறை வளர்ச்சியில் அக்கற்புக் கருத்தியலில் இருந்து பிறழ்வு நேர்கின்ற சூழல்கள் உருவாகின்றன என்று சொல்லி, அச்சூழல்களை மறுதலிக்காமல் கற்புக்குரியதாகவே கருதவேண்டும் எனும் கருத்தைக் கீழ்வருமாறு விளக்கியுள்ளார்.

> *ஒருவனை விட்டு இன்னொருவனுடன் வாழும்படியாக நேரலாம். ஒருவனை விடாமல் இன்னொருவனுடன் வாழ்வதுதான் தவறு. எப்போது, எவனுடன் வாழ்கின்றாளோ அவனுக்குத் துரோகம் செய்யாமலிருந்தால் போதும். அதுதான் கற்பு. அமெரிக்காவில் அப்படித்தான் போற்றுகிறார்கள். நம் நாட்டில் ஆண்களைப் பொறுத்தவரையில் இதை ஒப்புக்கொள்கிறார்கள். பெண்களைப் பற்றி மட்டும் உடன்படுவதில்லை. பெண்ணடிமை இன்னும் இந்த நாட்டில் உள்ளது என்பதற்கு இதுவே சான்று (கரி.ப.212).*

இதுபோன்ற நிலைப்பாட்டால்தான் 'உண்மையான கற்பை, இயற்கைக் கற்பை, சுதந்திரக் கற்பைக் காணலாமேயொழிய நிர்ப்பந்தங்களாலும், ஒரு பிறப்புக்கொரு நீதியாலும் வலிமை உடையவன் வலிமையற்றவனுக்கு எழுதிவைத்த தர்மத்தாலும் ஒருகாலும் உண்மையான கற்பைக் காண முடியாது என்கிறார் பெரியார் (பெண்.ஏ.அ. 1934). இந்தக் கருத்தியலை ஒட்டித்தான் பெண்கள் விவாகரத்துப் பெறும் உரிமை வேண்டும் என்கிறார். 'குரூர குணமுள்ள புருஷன், குடிகாரப் புருஷன், குஷ்டரோகியான புருஷன் முதலிய எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் அவனுடைய கொடுமைகளைச் சகித்துக்கொண்டு அவனுடன் கூடப் பெண் வாழ வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவது ஜீவகாருண்யமாகாது' என்றார் (குடி. 16.6.1935). பெண்களுக்கு மறுமணம் செய்வது தவறு அல்ல என்ற கருத்தை முன்வைக்கும் பெரியார், ஆண்கள் எவ்வாறு மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதனையும் வரையறுத்து விளக்குகின்றார். 'ஒருவன் இரண்டாவது திருமணம் செய்துகொண்டால் அவனைப் போன்றே கல்யாணமாகிக் கணவன் தவறிப்போன பெண்ணையே திருமணம் செய்துகொள்ள வேண்டும்' என்று குறிப்பிடுவதன் வழி பெண்ணின் மறுமண வாழ்க்கையை எளிமைப் படுத்துகின்றார். 'எந்தெந்தக் காரணத்தால் புருஷனுக்குப் பெண் பிடிக்கவில்லையோ–ஒத்துவரவில்லையோ, அந்தக் காரணங்களால் பெண்ணுக்குப் புருஷன் பிடிக்காதபோது,

இப்போது புருஷனுக்கு இருக்கவேண்டுமென்று சொல்லப்படும் சுதந்திரமும், சவுகரியமும் போலப் பெண்களுக்கும் ஏற்படுத்த வேண்டும்' என்று வலியுறுத்துகின்றார் (பெண். ஏ.அ. 1934). பெண்ணிற்கு மறு திருமணம் செய்யாமல் விதவையாகவே வாழவைப்பது 'விபச்சாரம் எனும் பிள்ளையைப் பெற்றெடுத்து வளர்க்கின்றது' (குடி.16.6.1935) என்று அதனால் விளையும் தீங்கையும் சுட்டிக்காட்டுகின்றார்.

பெண்ணின் பாலியல் வாழ்க்கையில் அறியாமல் நிகழும் தவற்றைப் பெரிதுபடுத்தக்கூடாது. எப்படி ஆணின் பிறழ்வை ஏற்கின்றோமோ அதுபோன்றே பெண்ணின் பிறழ்வை ஏற்க வேண்டும் எனும் பொருளில் இது தொடர்பாகக் குறிப்பிடத் தக்க வரையறையை வழங்குகின்றார் மு.வ..

> *திருமணம் ஆவதற்கு முன் பெண்கள் தடுமாறித் தவறு செய்தால் அது மன்னிக்கத்தக்க குற்றம் என்றும், திருமணமான பின் கணவனை ஏமாற்றித் தவறாக நடப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள் (வாடா. ப.344).*

ஒரு கட்டத்தில் கன்னிப் பெண்களையே மனைவியாகத் தேடும் ஆண்களைப் பிற்போக்கானவர்கள் என்றும், மூடநம்பிக்கைக்கு உரியவர்கள் என்றும் விமர்சிக்கின்றார் (கரி.ப.210). இக் கருத்துகளுக்கு ஏற்ற பாத்திரப் படைப்புகளைச் 'செந்தாமரை' நாவலிலும் 'நெஞ்சில் ஒரு முள்' நாவலிலும் படைத்துக் காட்டவும் செய்கின்றார். செந்தாமரை எனும் கதைமாந்தர் தான் தூய்மை அற்றவள் என்று கருதி வேதனை அடைவதாகப் படைக்கப் பெற்றாலும் அவள் மற்றோர் ஆடவனான இளங்கோவை விரும்புவதற்கும் வாய்ப்பு அளிக்கப்பெற்றுள்ளது. நெஞ்சில் ஒரு முள்ளில் வரும் தந்தை தன் மகளிடம் பேசுவது முற்றிலும் பெரியாரியப் பெண்ணுரிமைச் சிந்தனை வழிப் பட்டதாக அமைகின்றது. திருமணத்திற்கு முன்பு நிகழ்ந்து விட்ட மகளின் பாலியல் உறவை அறியும் சராசரித் தந்தை எவனும் அவளை ஏசுவதும் வேதனை அடைவதும் குழம்பிப் போகும் பொது வாழ்க்கை முறைக்குரியது. ஆனால், நெஞ்சில் ஒரு முள்ளில் மு.வ.வால் படைக்கப்பெற்றுள்ள தந்தை சற்றுக்கூட உணர்வுவயப்படாமல் முற்றிலும், அறிவு நிலையில் இருந்து பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்றார். அவர்தம் நிலைப்பாடு வருமாறு அமைகின்றது :

'நீ ஏன்மா' இப்படி நடுங்குகிறாய்? பயப்படாதே அம்மா. நான் சொல்கிறபடி கேட்க வேண்டும். நாம் வெளிநாட்டுக்கு வந்திருக்கிறோம். இந்த இடத்தில் எந்த வைத்தியரையும் நம்ப முடியாது. திறமையான வைத்தியர்களும் இல்லை. உங்கள் அம்மா ஏதோ மருந்து கொடுத்து என்னமோ செய்ய வேண்டும் என்று சொல்கிறாள். அப்படி எதுவும் செய்தால் உன் உயிருக்கு ஆபத்து ஆனாலும் ஆகும். அதனால் இப்போது சொல்கிறேன். அவள் மருந்து எதுவும் கொடுக்கக்கூடாது. அவள் கொடுத்தாலும் எதுவும் சாப்பிடக் கூடாது. என் சொல்லை மீறி ஏதாவது செய்தால், இரண்டு பேரையும் என் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு, என்னையும் சுட்டுக்கொண்டு இந்தப் பர்மா மண்ணில் அழிந்து விடுவேன் என்று சொல்லி அலமாரியில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக்காட்டி, எங்கள் இருவரிடமும் வாக்குறுதி கேட்டார். ஒன்றும் செய்வதில்லை என்று அம்மா கைபோட்டுத் தந்தாள்; நானும் அவ்வாறே செய்தேன். அதன் பிறகு 'பிறக்கும் குழந்தையை நான் காப்பாற்றுவேன் அம்மா. அதன்பிறகு உனக்கும் திருமணம் செய்து வைப்பேன். நான் உயிரோடு உள்ளவரையில் நீ பயப்படாதே'' என்று சொன்னார் (நெஞ். ப.123).

எனவே, பெரியார், மு.வ. இருவர் தம் கற்புத் தொடர்பான சிந்தனைகள் 'ஒரு பிறவிக்கு ஒரு நியதி' என்று வரையறுக்கும் சமகாலச் சமூகச் செல்நெறிக்கு எதிரானவையாக, இயற்கையான உண்மையான கற்பு நெறிக்குரியவையாக, ஆணுக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளையும் பெண்ணுக்குப் பெற்றுத் தருபவையாக, சமூக ஒழுங்கு முறைக்கும், பொது ஒழுக்க முறைக்கும் ஏற்றவையாக அமைந்துள்ளன எனலாம்.

பெண் இயல்பு

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' 'அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த, நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப' எனும் தொல்காப்பியக் கருத்தியலை (களவி.7,8) நன்கு கற்று உணர்ந்தவர் தாம் மு.வ., ஆனால், பெண்களுக்குரியதாகச் சொல்லப் பெறும் நாணம் எனும் பண்பு இயற்கையானது அன்று; கற்பிக்கப் பெற்றது என்று விளக்குகின்றார். பறவைகளிலும் விலங்கு களிலும் பெண்ணுக்கு நாணம் இல்லை. அது இயற்கையானது அன்று; பிறர் கற்பிக்கக் கற்றுக்கொள்ளும் பண்பு அது. இயற்கையான பண்பாக இருந்தால், தமிழர்க்கு மிகுதியாகவும் இன்னொரு வகையார்க்கு மற்றோர் அளவாகவும் நாணம் வேறுபடக் காரணம் இல்லை என்கிறார். இயற்கையானதாக

இருந்தால், முற்காலத் தாரைவிட இக்காலத்தார்க்குக் குறைவாக இருக்கக் காரணம் என்ன? என்று வினா எழுப்புகின்றார். எனவே, நாணம் என்பது பார்த்துக் கற்கும் பண்பே, மாற்றிக் கொள்ளக் கூடிய பண்பே என்று குறிப்பிடுவதுடன் இப்பண்பு பெண்களின் முன்னேற்றத்துக்கு ஒரு வகையில் தடையாகவும் உள்ளதாகக் கருதுகின்றார் (பெண். ப.57). பெண்களால் சிலவகையான தொழில்களைச் செய்ய இயலாது, ஆண்களால் மட்டுமே செய்ய இயலும் என்பதிலும் மு.வ.வுக்கு உடன்பாடு இல்லை. பழங் காலத்தில் உடல்வலிமை உள்ளவர்களே பொருளீட்ட இயலும். அதனால், சில வகையான பணிகளை ஆண்களுக்கு உரியவை என்றும் சிலவகையான பணிகளைப் பெண்களுக்கு உரியவை என்றும் வரையறுத்து வைத்தனர். ஆனால், இன்றைய நிலை மாறியுள்ளது என்கிறார்.

> *இக்கால விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக உடல்வலி மிகுதியாக இல்லாமலே பொருள் தேட முடியும்; யந்திரங்களைக் கொண்டே தொழில்களைச் செய்துமுடிக்க இயலும். ஆதலின் இன்றைய நிலையில் பெண்ணும் வெளியுலகக் கடமைகளுக்கு ஏற்றவளாக இருக்கிறாள். பழைய குறை மாறுவதற்கு இடம் உள்ளது (தங்.ப.32).*

என்று குறிப்பிடுகையில் பழைய ஆண், பெண் வேறுபாட்டு மரபைக் 'குறை' என்றே குறிப்பது கவனத்திற்குரியது. நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படாதவற்றைப் பழைமையானவை என்பதற்காக நாம் போற்ற வேண்டியது இல்லை என்ற பெரியாரின் கருத்து இங்கு நினைக்கத்தக்கது. இந்த அடிப் படையில்தான் தாம் மிக உயர்வாகக் கருதிப் போற்றி மாநாடுகள் நடத்திய பெரியார் திருவள்ளுவரின் பெண்ணியல் சிந்தனைகளையும் புறம் தள்ளுகின்றார்; மறு ஆய்வுக்கு உட்படுத்துகின்றார்; 'தெய்வம் தொழாஅள்' என்ற வள்ளுவரின் குறட்பாவை மறுதலிக்கவும் செய்கின்றார்.

நடப்பவற்றை விதிப்பயன் என்று கருதி ஒதுக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் மரபுரீதியான பெண் இயல்புக்கு அப்பாற்பட்ட இயல்புகளை உடைய பெண் கதை மாந்தர் களையும் மு.வ. படைத்துக் காட்டுகின்றார். பெண்கள் பெறும் விஞ்ஞானப் படிப்பும் மற்ற நூல்களின் படிப்பும் படித்தவர்களின் நட்பும் பெண்களிடம் காரண காரிய ஆராய்ச்சி உணர்வை உருவாக்குவதாகவும் எதனையும் 'விதிப்பயன்' என ஏற்கும் மன

நிலையை வளர்க்காததாகவும் மு.வ. கருதுவதனை நெஞ்சில் ஒரு முள் நாவல்வழி (ப.15) அறிய முடிகின்றது.

கல்வியும் பொருளீட்டும் திறனும்

படித்துப் பட்டம்பெறும் பெண்களும் பொருளீட்டும் திறன் வாய்ந்த அல்லது பணிக்குச் செல்லும் பெண்களும் ஆண்களுடன் பழகும் பாங்கில் குறைபாடு உடையவர்களாகக் கருதுவது சமூக மரபு. இந்தப் பொதுப்புத்திக்குப் பதிலளிக்கும் வகையில் அல்லி எனும் நாவலில் குறிப்பிட்ட சூழல் ஒன்றைப் படைத்துள்ளார் மு.வ. அல்லி படித்துப் பட்டம் பெற்றவள். அவளுக்குத் திருமண ஏற்பாடு நிகழ்கின்றது. அப்பொழுது அவளின் தந்தையாரிடம் எதிர்க்கடைக்காரர் ஒருவர் கீழ்வருமாறு பேசுகின்றார் :

> *நீ நல்ல புண்ணியம் பண்ணியிருக்கின்றாய் அய்யா. படித்த பெண்கள் சொன்னபடி கேட்கமாட்டார்கள். நாம் ஒரு மாப்பிள்ளை சொன்னால், படித்த பெண் வேறு ஆளைச் சொல்வாள். நாம் ஒப்புக்கொள்ளவில்லையானால் சொல்லாமல் வீட்டைவிட்டுக் கிளம்பிவிடுவாள். இப்படித் தான் உலகத்தில் நடக்கின்றது. ஆனால் உன் மகள் உன் பேச்சைத் தட்டாமல் நடந்து கொண்டது வியப்பாக இருக்கிறது. பெண் பத்தரை மாற்றுத் தங்கம். கொடுத்து வைத்த ஆள் நீ (அல். ப.42).*

இச் சூழல்வழி, அறிவையும் துணிவையும் நம்பிக்கை யையும் தருவது மட்டுமல்ல கல்வியின் நோக்கம் நல்ல பண்பையும் பழகும் பாங்கினையும் அளிக்கும் எனும் கருத்தை வாசகர் மனத்தில் பதிய வைக்கின்றார் மு.வ.. இத்தகு கல்வியைப் பெறும் பெண்களைக் கண்டு முரடர்களும் அஞ்சுவர் எனும் சிந்தனைப் போக்கு உடையவராகவும் மு.வ. திகழ்கின்றார். *கள்ளோ காவியமோ* எனும் நாவலில் வரும் பெண் கதைமாந்தர் படித்த பெண்களின், படிக்காத பெண்களின் நிலையைக் கீழ்வருமாறு ஒப்பிட்டுப் பேசுகின்றார்.

> *அந்தக் காலத்திலும் என் உடம்பில் பட்டும் பொன்னும் இல்லை. இந்தக் காலத்திலும் இல்லை. என் படிப்பையோ அறிவையோ நான் பெருமையாகக் காட்டிக் கொள்வதில்லை. ஆனால் அந்தப் படிப்பும் அறிவும் என்னை அறியாமல் என் கண்பார்வையில் வெளியாகும் என்று எண்ணுகிறேன். என்னை விழித்துப் பார்த்து வந்த முரடர்கள் இப்போது என் கண் பார்வையில் எதிரே அவ்வாறு பார்ப்பதில்லையே! அன்று என் பார்வை என் அறியாமையைக் காட்டிக் கொடுத்திருக்கும். இன்று என் பார்வை அறிவைக் காட்டும்போல் தெரிகின்றது. ஆம் ஆம்! அதுதான் காரணமாக இருக்க வேண்டும். பக்கத்து வீட்டில் வேலை செய்யும் படிக்காத பெண்ணின் பார்வைக்கும் என்*

பார்வைக்கும் வேறுபாடு தெரிகிற தல்லவா? அது இந்த வேறுபாடுதானே? (கள். ப.33).

ஆண், பெண் வாழ்க்கை முறையில் அமையும் பாலினக் கவர்ச்சியும் அறிவு நிலைப்பட்டதாக அமைதலே சிறப்புடைத்து என்கிறார் மு.வ.. அறிவு நிலைப்பட்ட தொடர்பே உரிமை வாழ்விற்கு வழிவகுக்கும் என்கிறார். ஆண்களை உள்ளத்தால் கவரும் பெண்கள் உரிமை வாழ்வு எய்துவர் என்கிறார். உடலால் கவரும் பெண்கள் உடல் அழகிலும் வடிவிலும் மாற்றம் பெறுகையில் காலப்போக்கில் ஆண்களுக்கு அடிமைகளாகி விடுவர் என்கிறார். இதற்காக இங்கிலாந்து முதலான நாடுகளில் வாழும் பெண்களின் வாழ்க்கை முறையையும் எடுத்துக்காட்டி விளக்குகின்றார். அக்கருத்து :

பெண்களைப் பொறுத்தவரையில் கூறத்தக்கது இது; தம் உடம்பைக் கருவிகளாகக் கொண்டு, ஆண்களைக் கவர்கின்ற வரைக்கும் பெண்கள் அடிமைகளாக வாழ நேரும். தம் உள்ளத்தைக் கருவிகளாகக் கொண்டு ஆண்களைக் கவர முடியுமானால் ஒத்த உரிமையோடு உயர்வு பெற முடியும். இங்கிலாந்து முதலான நாடுகளில் பெண்கள் தம் உடம்பை அழகுபடுத்துவதில் எவ்வளவோ கவலை கொள்கிறார்கள்; ஆனால் அதேநேரத்தில் தம் உள்ளத்தாலும் ஆண்களைக் கவர்கின்றார்கள், மூலை வீட்டில் ஆண் மகன் நாடும் கருவியாக மட்டும் அங்கே பெண்கள் வாழ்ந்துவிடவில்லை (பெண். ப. 31).

மு.வ.வின் இக்கருத்தியல்கள் பெரியாரின் பெண்கல்விச் சிந்தனைகளுடன் பெரிதும் ஒத்துப்போகின்றன. 'பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டு விட்டால், சொத்து சம்பாதிக்கும் சக்திவந்துவிடும். பிறகு, தங்கள் கணவன்மார்களைத் தாங்களே தெரிந்தெடுக்கவும், அல்லது பெற்றோர்களால் தெரிந்தெடுக்கப்பட்டாலும் கணவனோடு சுதந்திரமாய் வாழ்க்கை நடத்தவும் கூடிய தன்மை உண்டாகி விடும், *(பெண்.ஏ.அ.1934)* என்று பெரியார் சுட்டும் கருத்தியலுடன் மு.வ.வின் கருத்தியல் ஒத்துச் செல்கின்றது. பொதுவாகவே வாழ்க்கை முறையை எளிமையாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை மு.வ., பெரியார் என இருவருக்குமே உண்டு. இந்த எளிமையாக்கத்தின் அடிப்படையில்தான் பெரும்பாலான பெண் கதைமாந்தர்களை மு.வ. படைத்துக் காட்டுகின்றார். அதுவும் படித்த பெண்கள்

எளிய வாழ்வியலை மேற்கொள்வதாகக் காட்டுகின்றார். இந்த எளிய வாழ்வியலுக்கு அப்பால் பெரியார் பெண்களின் உடைமுறைக்கு எனத் தனிக்கவனம் செலுத்தி யுள்ளதைக் கீழ்வரும் அவர்தம் கருத்துவழி அறியமுடிகின்றது.

> *பெற்றோர்கள் தங்கள் பெண்களைப் பெண் என்றே அழையாமல் ஆண் என்றே அழைக்க வேண்டும். பெண்களும் ஆண்கள் பெயர் களையே இடவேண்டும். உடைகளும் ஆண்களைப் போலக் கட்டுவித்தல் வேண்டும். சுலபத்தில் 'இது ஆணா? பெண்ணா? என்று மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாத மாதிரியில் தயாரிக்க வேண்டும். பெண்ணும், தன்னை, 'பெண் இனம்' என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கவே கூடாது (குடி.21.9.1946).*

பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்பதனை வலியுறுத்தும் நிலையில் பெரியார், சுயமரியாதைக்காரர்கள் எல்லாம் படித்த பெண்களையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுவார். மேலும், ஏற்கெனவே திருமணம் செய்துகொண்ட பெண்கள் எல்லாம் ஏதேனும் ஒருவழியில் கல்வி கற்றே தீர வேண்டும். அவ்வாறு கற்கத் தவறும் பெண்களைவிட்டு ஆண்கள் பிரியலாம் என்று உச்சகட்ட அளவில் பெண் கல்வியை வலி யுறுத்திப் பேசியுள்ளார். மு.வ.வின் படைப்பில் இடம்பெறும் இளைஞன் தன்னுடைய வாழ்க்கைத் துணைவிக்கு அழகு மட்டும் போதாது என்று பேசுகின்றான். 'அழகு இருக்கின்றது. கவர்ச்சியான பார்வையும் இருக்கின்றது. நகைகளுக்கும் குறைவு இல்லை. ஆனால், இவ்வளவுதானா ஒரு பெண்? எனக்குத் துணைவியாக வந்து வாழ்க்கையை நடத்தும் பெண்ணுக்குக் கல்வியறிவு வேண்டாமா' (கள்.ப.42) என்று வினா எழுப்பு கின்றான். இந்தக் கல்வி அறிவும் 'புத்தகப் புழுவாக' அமைந்து விடுவதை மு.வ. விரும்பவில்லை. 'ஒரு பென்சில் செய்யத் தெரியாமல், மிளகுநீர் சுவைபட வைக்கத் தெரியாமல், உணவுப் பொருட்களை எவ்வெவ்வாறு கலந்து உண்ண வேண்டும் என்று பாட்டிமார் அறிந்த அளவும் அறியாமல், குழந்தை வளர்க்கத் தெரியாமல், பூதநூல், இரசாயன நூல், மரநூல், உடல்நூல், உளநூல், அளவைநூல் ஆகியவற்றைத் தேர்வுக்காகப் படித்து மறுவாரமே எல்லாவற்றையும் மறந்துவிட்டு, நாட்டு வாழ்க்கைக்கும் உண்மை வாழ்க்கைக்கும் வேண்டாதவற்றை மறக்காமல் வளர்த்துக் கொண்டு இருப்பவர்களை வாழ்க்கைத் துணையாகத் தெரிவுசெய்தால் அது கண்மூடி வழக்கமாகவே

அமைந்துவிடும்' என்கிறார் (கள். பக்.55-56). ஆனால், பெரியாரைப் பொறுத்தவரையில் பெண்களுக்குக் குழந்தை வளர்ப்பிலிருந்தும், சமையல் அறையிலிருந்தும் விடுதலை வேண்டும் என்று வலியுறுத்தும் இயல்புடையவராக உள்ளார். இப்பணிகள் பெண்களுக்கு மட்டுமே உரியவை அல்ல என்பது ஒரு நிலையென்றால், இப்பணிகளுக்காக ஒதுக்கும் நேரத்தில் வேறு பணிகளில் பெண்கள் ஈடுபடுகையில் அவர்களின் வாழ்வியல் மேம்படும் என்று கருதுகின்றார். அரசுப்பணிகள் யாவும் பெண்களுக்கு மட்டுமே வழங்குவதாலும், படித்த பெண்கள் பணிக்குச் செல்லாமல் இருப்பதைத் தேசியக் குற்றமாக அறிவிப்பதாலும் பெண் கல்வியையும் பொருளீட்டும் திறத்தையும் வளர்த்தெடுக்க இயலும் என்கிறார். எனினும் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் வாய்ப்பு பெண்களுக்கே தரப்பெற வேண்டும் என வலியுறுத்துகின்றார். மு.வ.வின் *'கி.பி. 2000'* எனும் நூலில் அமையும் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் யாவரும் பெண்களாகவே படைக்கப் பெற்றுள்ளனர் என்பது இவண் நினைக்கத்தக்கது.

திருமணம்

தந்தை பெரியார் சீர்திருத்தம் மேற்கொண்ட மிகமுக்கியத் துறைகளில் திருமணம் ஒன்றாகும். குழந்தை மணத்திற்கு எதிர்ப்பு, மறுமணம்-விதவைமணம் ஆதரிப்பு, சடங்குகளற்ற திருமண முறையை அறிமுகப்படுத்துதல் எனப் பெரியாரின் திருமணம் தொடர்பான சிந்தனைகள் பரந்து விரிந்து காணப்படுகின்றன. காதல் மணம், கலப்புமணம் தொடர்பான பெரியாரின் சிந்தனைகள் சராசரிப் புரிதலிலிருந்து வேறுபட்டு அமைகின்றன. வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொள்ளுகின்ற நிலையில் அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம் ஆகியவற்றுக்கே முதன்மை அளிக்க வேண்டும் என்கிறார் (பார்க்க : பின்னிணைப்பு 4). உடல் கவர்ச்சி அடிப்படையில் அமைகின்ற விருப்பத்தைக் காதல் என்று சுட்டுவதையும் அது நிலைத்த தன்மையினது என்று சுட்டு வதையும், மிக உயர்வானது என்று சுட்டுவதனையும் பெரியார் ஏற்கவில்லை. இவை அனுபவ அடிப்படையில், அறிவு வளர்ச்சி அடிப்படையில் மாறக்கூடியவை என்பதனால் காதல் திருமணத்தை உயர்வற்றதாகக் கருதவேண்டும் என்கிறார். அதே நேரத்தில் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடைப்பட்ட அன்பு,

ஆசை முதலானவற்றை மூன்றாமவர்கள் பேசுவதற்கும், நிர்ணயிப்பதற்கும், நிர்ப்பந்திப்பதற்கும் சிறிதுகூட உரிமை கிடையாது என்கிறார். இவற்றால் நடைமுறையிலுள்ள காதல்மண முறைகளைப் பெரியார் வெறுக்கின்றாரே தவிர ஓர் ஆணும் பெண்ணும் தமக்குரிய முடிவைத் தாமே எடுத்தல் வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளார் என்பது தெரியவருகின்றது. மு.வ.வைப் பொறுத்தவரையில் பெரியார் அளவுக்குப் பரந்துபட்ட விவரத்தைக் காதல் மணம் தொடர்பாக அளிக்காவிட்டாலும், தம் படைப்பு களில் பெருவாரியாகக் காதல் மணத்தைப் படைத்துக் காட்டா விட்டாலும், பெற்றோர் வழியான திருமண முறையைப் படைத்துக் காட்டினாலும் உண்மையான காதல் மணத்திற்கு எதிரானவர் இல்லை என்பதற்குக் குறிப்புகள் கிடைக்கின்றன. திருமணத்தைப் பொறுத்தவரை அவரவர் பொறுப்பை அவரவர்களே உணரவேண்டும் என்கிறார். சமுதாயக் கட்டுப்பாட்டால் உண்மையான காதலைத்தடுத்து நிறுத்த முடியாது என்கிறார் (கள்.பக். 45, 51).

கலப்புத் திருமணத்தைப் பெரியார் விமர்சிக்கும் முறை தனித்துவம் வாய்ந்தது. கலப்பு மணம் அதிசயமான ஒன்று அன்று என்று கூறுவதுடன் இந்துச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள பார்ப்பனர்கள் தொடர்பான கலப்புமண விவகாரத்தையும் பதிவு செய்துள்ளார். கலப்பு மணம் என்பது உண்மையில் கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும் என்கிறார்.

> *உண்மையில் கலப்புத் திருமணம் என்று கூறவேண்டு மானால் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் இருவருக்கும் நடைபெறும் திருமணம்தான் கலப்புத் திருமணம் என்று கூற வேண்டும். சாதிகளுக்குள் மிக உன்னத சாதி என்றும் கடவுளுக்கு அடுத்த அந்தஸ்து உடைய சாதி என்றும் கூறப்படும் பார்ப்பனர் சாதிதான் தலைதூக்கி நிற்கிறது. பார்ப்பனர் அல்லாத சூத்திரச் சாதி என்று கூறப்படுகிற சாதிதான் சமுதாயத்தில் மிகவும் கீழானது என்றும் சமுதாயத்தில் கடைச்சாதி என்றும் நிலை நாட்டப்பட்டுள்ளது. இந்த வேற்றுமை ஒழிய வேண்டும். இவ்விரண்டு சாதிகளுக்கும் திருமணம் நடைபெறுவதைத்தான் கலப்புத் திருமணம் என்று கூறலாம் (விடுத. 4.7.68).*

மு.வ.வைப் பொறுத்தவரையில் கலப்புமணத்துக்கு எதிரான கருத்துடையவர் அல்லர். தம் படைப்புகளில் இடம்பெறுகின்ற

திருமணங்களைச் சாதிய அடிப்படையில் ஆண், பெண் பார்ப்பதாக அமைக்கவில்லை. ஒரு சில கதைமாந்தர்கள் தம் பிள்ளை களுக்குச் சாதிய வட்டத்தில் நின்று வாழ்க்கைத் துணையைத் தேடுபவராகவும் இதனை ஒரு சில கதைமாந்தர்கள் எதிர்ப்ப தாகவும் தம் படைப்புகளைப் படைத்துள்ளார் (விரிவான செய்தி களுக்கு இந்நூலிலுள்ள சாதி எனும் பகுதியைப் பார்க்க).

திருமணம், கலியாணம், கன்னிகாதானம், தாராமுகூர்த்தம் எனும் சொற்களெல்லாம் ஏதேனும் ஒரு வகையில் பெண்ணடிமைத் தனத்தோடு தொடர்புடையனவாக உள்ளன என்பதனை விரிவாக விளக்கும் பெரியார், வள்ளுவரின் வாழ்க்கைத் துணைநலம் (ஒப்பந்தம்) எனும் சொல்லாட்சியையே சிறந்த சொல்லாட்சி யாகத் தெரிவிக்கின்றார். திருமண உறவு சொத்துக்காக அமைதலைவிட உண்மையான தனிப்பட்ட ஆண்பெண் விருப்பு அடிப்படையில் சுதந்திரமாக அமையவேண்டும் என்கிறார். அத்தகு திருமணமுறையில்தான் சுயமரியாதைத் தன்மை இடம் பெறும் என்பதால் சுயமரியாதைத் திருமணம் என்றும் பெயரிட்டு அழைக்கின்றார். இதுபோன்று திருமணப் பெயராராய்ச்சியில் மு.வ. ஈடுபடாவிட்டாலும் தம் படைப்புகளில் 'சுயமரியாதைத் திருமணம்' எனும் சொற்றொடரைப் பயன்படுத்தாவிட்டாலும் பெரியார் போன்றே திருவள்ளுவர் வழிப்பட்ட வாழ்க்கைத் துணைநலத்தைப் படைத்துக் காட்டுகின்றார். 'சிலர் இப்படித் தான் வாழ வேண்டும் என்று வாழ்வர். சிலர் எப்படியாவது வாழலாம் என்று வாழ்வர். இந்த முரண்பட்ட பண்புடையவர் களுக்கிடையே மணஉறவு அமையக்கூடாது' (அல்லி. ப.285) என்கிறார். பொதுவாக மு.வ.வின் படைப்புகளில் திருமண நிகழ்வுகள் பெரிய அளவில் வருணிக்கப்பெறுவதில்லை. நிகழும் திருமணங்களில் பிராமணர்களோ, சமயவழிப்பட்ட சடங்கு முறைகளோ இடம்பெறுவதில்லை. திருமணங்கள் எளிய முறையில் நிகழ்த்தப் பெற வேண்டும் என்பதனைப் பெரியார் போன்றே மு.வ.வும் வலியுறுத்துகின்றார். செந்தாமரை எனும் நாவலில் இடம்பெறும் பெண் கதை மாந்தர் தன்னுடைய திருமணம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனைக் கீழ்வருமாறு சுட்டுகின்றார் :

> *என் திருமணத்தில் அந்தக் காமத்துப்பாலையும் மந்திரமாக ஓதவைக்க வேண்டும். திருமணம் எளிய முறையில் நடக்க வேண்டும். வேறு யாரும் வேண்டா, மருதப்பனும் அவர் மனைவியும்*

போதும். மந்திரக்காரனும் தந்திரக்காரனும் வேண்டா. ஆடம்பரமும் ஆரவாரமும் வேண்டா, மருதப்பன் போதும்; ஆரத்தி சுற்றி வாழ்த்துவான். இதற்குமேல் செய்தால் என் மனம் என்னைச்சுடும். எல்லாம் தெரிந்தும் ஆரவார வெறிபோக வில்லை என்று சுடும் (செந். பக். 119 - 120).

திருமணத்திற்கு நூற்றுக்கணக்கானவர்களை, ஆயிரக் கணக் கானவர்களை அழைத்து அழைப்பு அனுப்புவது ஆடம்பர மூட நம்பிக்கை, மூட வழக்கம் என்றெல்லாம் குறிப்பிட்டு வெறுக்கும் மு.வ. அவ்வழக்கம் தொலைய வேண்டும் என்று குறிக்கின்றார். நாமே காலத்திற்கு ஏற்பப் பழக்க வழக்கங்களை மாற்றி அமைக்க இயலவில்லை யென்றால் வேறு யார்தான் செய்வார்கள் என்று வினா எழுப்புவதுடன் நாள்பார்த்துத் திருமணம் செய்யும் முறையையும் தவிர்க்க வேண்டும் என்கிறார். இதற்காக மக்கள் மனத்தில் நிலவும் நாள் பார்த்தல் தொடர்பான, தீய நாள் தொடர்பான அச்சத்தை அகற்ற வேண்டும். 'எந்த மாதத்தில் எந்தநாளில் திருமணம் செய்தாலும் நன்றாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்க முடியும். பிறந்த மக்கள் எல்லோரும் நன்றாக வாழமுடியும். உள்ளத்தில் அன்பு கொண்டு உடம்பால் உழைப்புக்கொண்ட அனைவர்க்கும் தக்கதொழிலும் நல்ல வாழ்வும் உண்டு என்ற சமூக நிலை உருவாகிவிட்டால் இந்த நாள் பார்க்கும் பழக்கம் தீரும்' என்று கருதுகின்றார் (பழ.ப.26).

சுயமரியாதைத் திருமணங்களை நிகழ்த்தி வைத்து மணமக்களுக்குப் பெரியார் சுட்டும் அறிவுரைகள் வருமாறு : *(நன்னன், 1998; 531)*

- உயிர் நண்பர்கள் போல் பழகுக, கணவன் என்ற ஆணவம், மனைவி என்ற அடிமைத்தனம் வேண்டாம், விட்டுக் கொடுத்து வாழ்க.
- திருமணம் நடந்து 3 ஆண்டுகளுக்குப் பின்னர்க் குழந்தை பெற்றுக் கொள்ளலாம்.
- வரவுக்கேற்ற வகையில் செலவு செய்க; கடன் வாங்கக் கூடாது; ஒரு காசாவது மீதப்படுத்தவும். இதுதான் ஒழுக்கம்.
- மற்றவர்களுக்கு உதவும் வகையில் வாழ்க.
- மறு உலகத்தை மறந்து, இப்போதைய வாழ்க்கைக்கு வேண்டியதைச் செய்யுங்கள்.

- எந்தக் கஷ்டத்திலும் மற்றவரிடம் உதவிபெற வேண்டாம்.
- கோயிலுக்குப் போகக்கூடாது. பகுத்தறிவற்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. தீபாவளி கொண்டாடக்கூடாது.
- துணைவர்கள், கூட்டாளிகள் என்று சம அந்தஸ்துடன் வாழ்க.

இவைபோன்ற அறிவுரைகளைத் தனித்த நிலையில் மு.வ. தொகுத்து அளிக்காவிட்டாலும், அவர்தம் படைப்புகளில் இவ் வறிவுரைகள் ஆங்காங்கு ஏதேனும் ஒரு கதைமாந்தர்வழி வெளிப்படுவதனைக் காணமுடிகின்றது. சுருங்கச் சொன்னால் உண்மையான அன்பு நிறைந்த, மணமக்களின் மணநிறைவு பெற்ற, சமயம்சார் சடங்கு களற்ற, எளிய முறையிலான திருமண முறையையே பெரியாரும் மு.வ.வும் வலியுறுத்தியுள்ளனர் எனலாம்.

கணவன் மனைவி உறவு

கணவன் மனைவி உறவில் ஒத்த அன்பும் உரிமையும் நிலவும் நிலை உருவாக வேண்டும் என்பது பெரியாரின் கொள்கை. மு.வ.வும் பெரியார் கொள்கையை ஒட்டியவராகத் திகழ்ந்தாலும் விட்டுக்கொடுத்துப் போதல் எனும் கருத்தையும் உடன்வைக் கின்றார். மேலும், மனைவியால் கணவனைத் திருத்தமுடியும் எனும் கருத்தும் மு.வ.வின் எழுத்துகளில் பதிவாகி உள்ளது. பெரியாரைப் பொறுத்தவரையில் ஒத்துச்செல்லா நிலையில் அடிமை வாழ்வு வாழ்வதைவிடப் பிரிவதே சிறந்தது என்பார். மு.வ.வின் எழுத்துகளில் 'கணவன் ஒழுங்காக இல்லையானால் மனைவி அவனைவிட்டு விலகவேண்டும், ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற நிலை மாறவேண்டும்' (வாடா. ப.345) என்ற கருத்தும், 'கணவன் தெய்வம் அன்று, மற்ற மனிதர் களைப் போன்று அவனும் குற்றம் செய்யும் இயல்புடையவன் தான், மற்றவர்களைக் கடிந்து திருத்துவது போல் அவனையும் கடிந்து திருத்த வேண்டும்' (கள்.ப.49) என்ற கருத்தும் 'வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் வெற்றிபெற முடியாது. சில துறையில் தோல்வி நேரும்... மனைவியிடத்தில் தோல்வியை இயல்பாக ஏற்பதே நன்று' என்ற கருத்தும் (மண்.ப. 229) இடம்பெற்றுள்ளன. அதாவது மு.வ.வின் கருத்தில் இயன்றவரை குடும்பம் என்ற அமைப்பைக் காப்பாற்றும் தன்மை கோலோச்சுகின்றது. இதனால் தான் வேறு ஓர் இடத்தில்

ஆண், பெண் என இருவரிடமும் விட்டுக் கொடுத்துச் செல்லும் பண்பு வளரவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார். 'ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் தியாகம்தான் பெரிய தியாகம். விட்டுக்கொடுப்பது என்ற அந்தப் பெருந்தன்மை இல்லாவிட்டால், கணவன் மனைவி கூடி வாழ முடியாது' (கள்.ப்.125) என்கிறார். இதற்காகக் 'கண்ணகி மனம்' என்ற கருத்தியலையும் உருவாக்கி அளிக்கின்றார்.

பழங்காலப் பெண்களைப்போன்று அடங்கி நடப்பது நன்றா? இக்காலத்துப் பெண்களைப் போன்று உரிமை உணர்ச்சியோடு வாழ்வது நன்றா? என்று வினாத் தொடுத்து இதற்கான விடையைத் தெளிவாக மு.வ. முன்வைத்துள்ளார். பெண்களை மையமிட்டதாக வினா அமைந்திருப்பினும் விடை ஆண் பெண் இருவருக்கும் உரிய பொதுநெறியைச் சுட்டுவதாக அமைகின்றது.

அடங்கியும் நடக்க வேண்டும் உரிமையோடும் வாழ வேண்டும் என்று பொது நிலையில் விடையளிக்கும் மு.வ. தாமரை மொட்டு விரிவதுபோன்று தம் விடையை மெல்ல மெல்ல, ஒவ்வொன்றாக, படிப்படியாக அளித்துச் செல் கின்றார். அடங்கி நடக்கலாம். நாமே அன்புள்ளவர்களின் அன்புக்கு அடங்கி நடக்கலாம். ஆனால் பிறருடைய அடக்கு முறைக்கு அஞ்சி இறையாகக் கூடாது என்கிறார். உரிமை வாழ்க்கை வேண்டும். ஆனால் அது மனம்போன போக்காய் அமைந்துவிடக் கூடாது. கடமையை ஒழுங்காகச் செய்து உரிமையைக் காத்துக்கொள்ள வேண்டும் என்கிறார் (தங். ப.22). இந்த உரிமை, அடங்கி நடத்தல் என்பனவற்றை இரண்டு தண்டவாளங்களாக ஆக்கி அவற்றின்மேல் விட்டுக் கொடுத்தல் என்ற பொறுமை என்ற இரயில்களை இயக்கிக் காட்டு கின்றார். கணவன் மனைவி வாழ்க்கையை ஒருவர் மற்றொரு வருக்காக விட்டுக்கொடுப்பது, நகை முகத்தோடு அன்போடு சொல்லுவது, விரும்பத்தகாத பேச்சைத் தொடாமல் விடுவது, தோற்றுப்போதல் சில நாள்கள், சில ஆண்டுகள் சில வற்றிற்காகக் காத்திருத்தல் என்பவை கண்ணகியின் வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ளத்தக்கவை (தங். பக்.37-38) என்று குறிப்பிடும் மு.வ. உலகம் எவ்வளவு மாறினாலும் மாறாத தன்மை உடையதாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யைச் சித்திரித்துக் காட்டுகின்றார். திருமண முறைகள் மாறலாம், இல்வாழ்க்கைமுறை கூட மாறலாம் ஆனால் ஆண் பெண் துணை தேடும்போதும் பெண் ஆண்துணை

தேடும்போதும் விட்டுக்கொடுத்தல் மனப்பான்மை மட்டும் மாறாமல் இடம் பெற்றுவிடும் என்கிறார். அதாவது உலக இயற்கையில் எங்கும் எவர்க்கும் சமத்துவமான தன்மை இடம்பெற்றுவிடுவதில்லை. மக்கள் வெவ்வேறு வகையான ஆற்றல்களுடன், பண்புகளுடன் பிறந்து வளர்கின்றனர். இந்த நிலையில்தான் மனிதன் அன்பால் அல்லது சட்டத்தால் சமத்துவத்தைப் படைத்துக் கொள்கிறான். இந்தச் சமத்துவத்திற்கு அடிப்படையாக அமையும் மனநிலையை, அன்பு மனத்தைத் தெய்வமனம் என்றே குறிப்பிட்டுச் சுட்டு கின்றார். இத்தகு மனநிலையைச் சிலர் பழிக்கக்கூடும் எனும் எதிர்நிலையைக் குறிப்பிடும் மு.வ. அது காலப்போக்கில் முனைப்பு அடங்கிவிடும் என்பதால் புறந்தள்ள வேண்டும் என்கிறார்.

இந்தக் கண்ணகி மனம் தொடர்பான கருத்தியலைத் தங்கைக்கு மடல் எழுதுதல் வழி அண்ணன் சொல்வதாக மு.வ. மடல் இலக்கியத்தில் படைத்துக் காட்டுகின்றார். இதனால் பெண்ணைப் பார்த்துப் பேசுவது போன்று, பெண்பேசுவது போன்று கருத்தியல்கள் வெளிப்பட்டுள்ளன. இத்தன்மையால் வாசகரோ படைப்பில் இடம்பெறும் தங்கையோ பெண்களுக்கு மட்டுமே கண்ணகி மனம் வலியுறுத்தப்பட்டு உள்ளது என்று எண்ணி விடக்கூடாது என்பதற்காக இரண்டு இடங்களில் மிகத் தெளிவாகக் கண்ணகி மனம் ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது என்பதனைப் பதிவு செய்துள்ளார். அவ்விடங்கள் வருமாறு :

1. *அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி உரிமைக்காகப் போராடிக் காலம் கழிக்காதே என்று நான் சொல்வேனானால், அது உனக்கும் உன்னைப் போன்ற பெண்களுக்கும் சொல்லும் அறிவுரை என்று எண்ணாதே! என்னுடன் பழகும் நண்பர்களான ஆண்கள் பலருக்கும் இதையே நான் சொல்லியிருக்கிறேன் (தங். ப.23).*

2. *நண்பர் அருளப்பரின் தம்பிக்கு நான் சொன்னது என்ன தெரியுமா, அவனுடைய மனைவி இசையிலும் ஓவியத்திலும் ஆர்வம் உடையவள் என்று அறிந்தேன். அதனால் அவனும் அந்த இரண்டு கலையிலும் பயிற்சி பெற வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னேன். இப்படித்தான் நான் எதைச் சொன்னாலும் இருபாலருக்கும் பொதுவாகச் சொல்வதாக எண்ணிக்கொள் (தங். ப.71).*

இதுபோன்று வலியுறுத்தி ஒரு கருத்தைச் சொல்லுகையில் மு.வ. திருக்குறளைச் சான்று காட்டுவது பெரிதும் வழக்கம். கண்ணகி மனநிலை விளக்கத்தில் திருக்குறளுடன், ஒருவர் பொறை, இருவர் நட்பு எனும் நாலடியாரின் கருத்தை இல் வாழ்க்கைக்கு ஏற்ற பொன்மொழியாகப் பதிவு செய்கின்றார். பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதாலும் உயர்ந்த புலவர்க்ளின் காப்பியங்களைப் படிப்பதாலும், உயர்ந்த உணர்வுடைய சான்றோர்களின் படைப்புகளைப் படிப்பதாலும் ஒருவர் தம்முடைய வாழ்க்கையின் மாற்றங்களை உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதை வெளிப்படையாகக் குறிப்பிடும் மு.வ. தம் கற்பனைக் கடிதங்களை அறிவுறுத்தும் தன்மை வாய்ந்தன வென்றே நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அறிவுரைகளும் அறவுரைகளும் வற்புறுத்தி ஊட்டும் உணவுக்கு நிகரானவையாகக் குறிப்பிடுகின்றார். பெரியோரின் வாழ்க்கை முறையைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுதலைக் குழந்தைகள் தாமே விரும்பி உண்ணும் பழத்திற்கு நிகரானதாகவும் உயர்வானதாகவும் குறிக்கின்றார். முன்னது வற்புறுத்தப் பெறுவதால் செரிப்பதற்குக் காலம் பெரிதும் எடுத்துக் கொள்கிறது. பின்னது விருப்பத்தோடு அமைவதால் எளிதில் செரித்துவிடுகின்றது. ஆனால் எல்லோர்க்கும் எல்லாவற்றையும் பார்த்துக் கற்கும் வாய்ப்பு அமைவதில்லை. எல்லாவற்றையும் அனுபவித்தே தெரிந்து கொள்கின்ற வாய்ப்பு சாத்தியமற்ற ஒன்று. இதனை உணர்ந்த மு.வ. கண்ணகி மனம் பெறுதற்கு, பெரியோர் கருத்தியலைப் பின்பற்றுவதற்கு ஏற்ற உணர்வுத் தூண்டுதலை உருவாக்கும் ஓர் ஒப்பீட்டுக் குறுஞ் செய்தியைக் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> *ஆராய்ச்சி! விஞ்ஞானத் துறையில் யாராவது ஒருவர் இருவர் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தால் போதும், அதைப்பற்றி மேலும் ஆராயாமல் அந்த ஆராய்ச்சியின், பயனை அனைவரும் பெறுகிறோம். வானொலிப் பெட்டியை அனைவரும் பயன்படுத்துகின்றோம். ஆனால் மார்க்கோனி செய்த அந்த ஆராய்ச்சியையே நாம் செய்து காலம் கழிக்கிறோமோ? இல்லை. வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சியை மட்டும் தனித்தனியாக ஒவ்வொருவரும் செய்ய விரும்புகிறோம். திருவள்ளுவர் ஆராய்ச்சி செய்து முடிவுகளை எழுதி வைத்திருக்கிறார். திருக்குறளை வீடு தோறும் பயன்படுத்தினால் போதும் என்று அமைவதில்லையே! ஒவ்வொருவரும் தனி யாராய்ச்சிகள் நடத்திய பிறகே முடிவுக்குவர வேண்டுமா?*

விஞ்ஞானத் துறையின் கண்மூடி நம்பிக்கை! அறநெறியில் அவ்வப்போது ஆராய்ச்சிகள்! (தங். ப. 60)

ஒரு கருத்தை வலியுறுத்துகையில் அதற்கு எதிரான கருத்தையும் உருவாக்கி அதற்கும் விடையளிக்கும் வகையில் தம் கருத்தை நீட்டித்துச் சொல்லுவது மு.வ.வின் கருத்து விளக்க முறைகளுள் ஒன்று ஆகும். அறிஞர் வாழ்வியலைப் பார்த்தும் அறிஞர் கருத்துகளை வாசித்தும் மனிதர்கள் உருவாக்கிக் கொள்ளும் விட்டுக்கொடுத்தல் எனும் மனப்பான்மை கணவன் மனைவி என்ற இல்லற வட்டத்திற்குள் சுருங்கிவிடக் கூடாது. ஏழைகளையும் பிறரையும் நேசிக்கும் பரந்துபட்ட மனமாக அது விரிவடைதல் வேண்டும் என்று கருதுகிறார். கணவனாக இருந்தாலும் அடுத்தவராக இருந்தாலும் மனம் மாறவேண்டும் என்பதற்காகப் பல கோவில்களில் பல தெய்வங்களிடம் உருகி உருகி வழிபட்டாலும் அது ஈடேறாது. மனம் மாற்றமடைய மாட்டார்கள். ஆனால் நம்முடைய மனத்தை நாம் மாற்றிக் கொள்வதன் வழி அதனைச் சாதிக்க முடியும் என்கிறார் மு.வ. மேலும்,

1. ஏழைகளின் முன்னேற்றத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.
2. சுற்றுப்புறம் சீர்பெற வழிவகுக்க வேண்டும்.
3. ஆடம்பர மோகத்தை அகற்ற வேண்டும்.
4. தம் குறையைத் தாமே உணர வேண்டும்.

(தங். ப.87) எனும் நான்கும் மனித வாழ்க்கையில் பொருந்திவராத நிலையில் உலகப்படைப்பை அறிதல், உலக வரலாற்றைப் படித்தல், காவியங்களைக் கற்றல், கடவுளை வழிபடுதல் என்பன எல்லாம் பயனற்றவையாகவே அமைந்துவிடும் என்று கருதுகின்றார்.

பெண் விடுதலை பேசும், வலியுறுத்தும் சான்றோர்க்கெல்லாம் அவர்தம் பண்பாட்டு மரபு ஒரு தடைக்கல்லாக அமைவது உண்டு. அத்தடைக்கல்லைச் சற்று நகர்த்தி வைத்துப் பெண்விடுதலை பேசுவர் ஒரு சாரார். தடைக்கல்லை வெல்ல வழியில்லாமல் தாண்டுவதற்கேற்ற அல்லது தடைக் கல்லையே முதுகில் சுமந்துகொண்டு நகரும் வகையிலான பெண்விடுதலை பேசுவர் ஒரு சாரார். மற்றொரு சாரார் தடைக் கல்லைச் சுக்கு நூறாக நொறுக்க வேண்டும். கல் மண்ணாக

வேண்டும் என்று பெண் விடுதலை பேசுவர். மு.வ.வைப் பொறுத்தவரையில் பெண் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக அமையும் பண்பாட்டுக் கூறுகளை இடத்திற்கும் சூழலிற்கும் ஏற்ப நொறுக்கவும் செய்கின்றார்; நகர்த்தவும் செய்கின்றார். பெண்ணின் பணி நிலையில் மாற்றம் வேண்டும் என்பதனைப் பழமையை விட்டுக் கொடுக்காமல் அதே நேரத்தில் அது மாற்றப்பட வேண்டும் என்பதனைத் தமிழ்ப் பண்பாட்டுத் தளத்திலிருந்து கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *ஆண் உடல் வலிமை மிகுந்தவன்; ஆகையால் அவன் வெளியுலகில் அலைந்து பொருள் தேடுக என்று அமைத்தனர். பெண் உடல் வலிமை குறைந்தவள்; ஆக்க வேலையில் ஆர்வம் நிறைந்தவள். ஆதலால் வீட்டிலிருந்து அமைதியைக் காத்து வருக என்று அமைத்தனர். அலைவுக்கு ஏற்றது ஆண் உடல்; அமைதிக்கு உரியது பெண் உடல் என்று அவர்கள் வகுத்த முறை இயற்கையோடு இயைந்த முறையாக இருந்தது. அதற்கு ஏற்ற வாறே ஆண் வயதில் மூத்தவனாக இருக்குமாறும் பெண் இளையவனாக இருக்குமாறும் ஏற்படுத்தினர். இந்த ஏற்பாட்டில் தவறு காண முடியவில்லை, இன்றைக்கும் உலகில் பெரும்பான்மையோர் இதையே போற்றி வருகின்றனர்.*
>
> *இக்கால விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக உடல் வலி மிகுதியாக இல்லாமலே பொருள் தேட முடியும்; யந்திரங்களைக் கொண்டே தொழில்களைச் செய்து முடிக்க இயலும். ஆதலின் இன்றைய நிலையில் பெண்ணும் வெளியுலகக் கடமைகளுக்கு ஏற்றவளாக இருக்கிறாள் (தங். ப. 32).*

கடமைகள்

பெண்கள் கோவிலுக்குச் செல்லக்கூடாது. அதுவும் பல்வேறு பெண்களுக்குரிய தலைவனாகத் திகழும் கடவு ளர்களின் கோவிலுக்குப் போகவே கூடாது. பார்ப்பனர்களுக்குக் கோவிலிலோ பிற சடங்கு நிலைகளிலோ ஒரு பைசாவும் அளிக்கக்கூடாது, எதனையும் பகுத்தறிவுவழி சிந்தித்துச் செயல்படவேண்டும் என்று பெண்களைப் பார்த்துச் சொல்லும் பெரியார், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு சிலவற்றையும் சுட்டிக் காட்டு கின்றார். கல்வி அறிவில் விருப்பம் கொள்ளுதலும் வீரப் பெண் களாக வாழ்வதும் பெண்களின் விருப்பங்களாக இருத்தல் வேண்டும் என்கிறார் (குடி. 5.6.1948). பெண்கள் ஆண்களைப் போன்று உயர் தகுதி வாய்ந்த வேலைகளைச் செய்தல் வேண்டும்; பொம்மை களாகவும் நகைமாட்டும் 'ஸ்டாண்டுகளாகவும்' பெண்கள் இருந்து விடக்

கூடாது என்கிறார். மேலும், குழந்தை வளர்ப்பு, சமையல் முதலான பணிகளையும் பெண்கள் மேற் கொள்வதற்கும் பெரியார் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். இது தொடர்பான அவர்தம் கருத்துவருமாறு :

> *நகைக்கும் துணிக்கும் போடும் பணத்தைப் பாங்கியில் போட்டுக் குறைந்த 'வட்டியாவது வாங்கி, குழந்தை பிறந்தவுடன் அதை எடுத்து அந்த வட்டியில், ஓர் ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக் கொள்ளச் செய்தால், அன்பு குறைந்து விடுமா? பெற்ற தகப்பன் குழந்தையைத் தன்னுடன் கூடவே வைத்துத்தானா அழகு பார்க்கின்றான்? அன்பு காட்டுகின்றான்? கொஞ்சி விளையாடு கின்றான்? ஆகையால், குழந்தையை ஆட்கள்மூலம் வளர்க்க வேண்டும். சமையல் ஆட்கள் மூலம் செய்விக்க வேண்டும் (குடி. 21.9.1946).*

பெரியாரின் இக்கருத்து மு.வ.விற்கும் உடன்பாடாகவே உள்ளது. தம் படைப்புகளில் குழந்தைகளுடனான குடும்பத்தைப் படைத்துக் காட்டுதல், தாய் இல்லாத நிலையில் குழந்தைகள்படும் துன்பத்தைப் படைத்தல் என்ற சராசரிப் படைப்பாக்க முறை களுக்கு அப்பால் 'குழந்தைகள் வீட்டில் வளர்வதைவிட ஊரார் பிள்ளைகளுடன் சேர்ந்து வளர்வது நல்லது. குழந்தைகள் விடுதி பல ஏற்பட்டு அவற்றில் குழந்தைகள் வளர்ந்துவந்தால் கடமை உணர்ச்சி ஏற்படும்' (குழ.ப.70) என்று குறிப்பிடுவதுடன் அளவு கடந்து குழந்தைகளிடம் அன்பு காட்டுவது, மிகுதியான பாசம் தீமைக்கு வழிவகுக்கும் (குழ.ப.80) என்றும் குறிப்பிடுகின்றார். மேலும், *கி.பி. 2000* எனும் நூலில் அமைக்கப்பெற்றுள்ள பொது சமையலகம், குழந்தைகளகம் என்பன போன்ற மு.வ.வின் சிந்தனைகள் பெரியாரின் சிந்தனைகளுடன் மிக நெருக்கமாகவே அமைகின்றன.

பெண்களுக்குரிய இன்றியமையாத் தகுதியாகவும் கடமை யாகவும் சமைத்தல், சமையல் கருதப்பட்டு வருகின்றது. பெண்கள் உரிமையற்று வாழ்வதற்கும் அறிவுத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமைக்கும் மிக முக்கியத் தடையாக இருப்பது சமையல் என்கிறார் மு.வ. சமைக்கின்ற நேரம் மட்டுமின்றி அது தொடர்பான முன்பின் வேலைகளும் பெண் களின் பெரும்பகுதி நேரத்தை விழுங்குவதாகக் கருதுகின்றார். தாம் கட்டமைக்கும் புதிய கனவு உலகில் ஊருக்குப் பொதுவான உணவு விடுதிகள் இயங்குவதாகப் படைத்துள்ளார்.

> *ஊருக்குப் பொதுவான நெசவாலையும் காய்கறிப் பண்ணையும் அமைந்திருக்கவில்லையா? அவைபோலவே வீடு தோறும் இருந்த*

சமையலறையும் அதற்கான தொல்லைகளும் தீர்ந்து ஊருக்குப் பொதுவான உணவு விடுதிகள் ஏற்பட்டிருந்தன (கி.பி. ப.50).

சமையலால் பெண்களுக்கு நேருகின்ற கேடுகளையும் அதிலிருந்து விடுவிப்பதால் அவர்கள் அடைகின்ற நன்மை யினையும் கீழ்வருமாறு விளக்குகின்றார் :

புத்தகம் படிக்கவோ, புத்துலகம் காணவோ, பொதுத் தொண்டு செய்யவோ ஆற்றலும் அமைதியும் இல்லாதவர்களாக ஆக்கி அடிமைப்படுத்துவதைவிட, அந்தத் தெருவில் உள்ளவர்கள் எல்லாரும் கூட்டுறவு முறையாய் ஒன்றுபட்டு, ஒரே சமையலறையை வகுத்து, அங்கும் தகுதி பெற்ற ஒரு சிலரை அந்தத் தொண்டுசெய்ய அமைத்து, மற்றவர் வேறுவகையில் வாழ்ந்தால் ஓய்வுக்கு இடம் உண்டு, உரிமைக்கும் இடம் உண்டு, உயர்வுக்கும் இடம் உண்டு அல்லவா?

வீடுதோறும் ஆசிரியர் இல்லை; வீடுதோறும் மருத்துவர் இல்லை; வீடுதோறும் துணி வெளுப்பவர் இல்லை; வீடுதோறும் நெசவாளர் இல்லை; வீடுதோறும் வியாபாரிகள் இல்லை; வீடுதோறும் நீர் கொணர்வோர் இல்லை; வீடுதோறும் விளக்கேற்றுபவர் இல்லை; வீடுதோறும் தெருப்பெருக்குவோர் இல்லை; வீடுதோறும் அச்சுக் கூடம் இல்லை; வீடுதோறும் நாடக அரங்கு இல்லை; இவற்றை எல்லாம் கூட்டுறவு முறையில் ஊருக்குப் பொதுவாக்கி எளிய முறையில் உழைப்பையும் வாழ்வையும் பொதுவாக்கிப் பங்கிட்டு உயரக் கற்றுக்கொண்ட மக்கள், சமையல் என்ற ஒன்றை அவ்வாறே ஒழுங்குபெறச் செய்தது பெரிய வெற்றிதான். அந்த வெற்றியே சமையலறை அடிமைகளை நாட்டுத் தாய்மார்களாக ஆக்கியிருக்கக் கண்டேன். பெண்ணுரிமை பிறக்க உதவும் வழி அது என்பதை அங்குக் கண்டேன் (கி.பி. ப. 52)

எனினும், பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது என்பது ஓர் அடிப்படையான தேவை அன்று. பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால், உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிடவர்க்கம் பெருகா விட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும். (குடி *12.8.1928*) என்று பெண்ணை ஓர் உயிரினமாகப் பார்க்கும் பெரியாரின் பார்வை மு.வ.விடம் இல்லை. ஒரு குடும்ப உறுப்பினராகப் பார்க்கும் பார்வைதான் மேலிட்டு உள்ளது.

3

சாதி

வேலையில்லாத் திண்டாட்டத்தையும், எதிர்காலம் பற்றிய அச்சத்தையும், பொருள் பற்றிய கவலை யையும் ஒழித்து நம்பிக்கையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். சாதியை ஒழிக்க விரும்புவோர் இதை முதலில் செய்ய வேண்டும். சுருங்கச்சொன்னால், பொருட் கவலை இல்லாத பொது வுடைமைச் சமுதாயத்தில்தான் சாதி ஒழிய முடியும்.

நாட்டில் தீண்டாமை குற்றமாக்கப்பட்டதுபோல், சாதிப் பெயர்கள் சட்டப்படிக் குற்றமாக்கப்பட வேண்டும். ஆட்களின் பெயர்களில் வால்போல் சாதி அடை இருந்து வந்ததைப் பலர் நீக்கி வருகிறார்கள். அது போலவே, சாதியால் ஏற்பட்டுள்ள தெருப் பெயர்கள் (வேளாளர் தெரு, செட்டித்தெரு முதலியவை) மாற வேண்டும். தொழில் நிலையங்கள், கல்விக் கூடங்கள் முதலியவற்றிற்குச் சாதிப் பெயர்கள் இருந்தால் அவை மாற வேண்டும்.

சாதியை இன்று எந்த ஏட்டிலும் குறிக்காதவாறு தடுக்க வேண்டும். பள்ளி, அலுவலகம் முதலியவற்றின் ஏடுகளில் அவை இடம்பெறக்கூடாது.

பழைய வரலாற்று நூல்களில் சாதிபற்றிய குறிப்புக்கள் இருந்தால், புதிய நூல்களில் அவை நீக்கப்பட வேண்டும். பழைய இலக்கியங்களில் வரும் சாதி பற்றிய செய்திகளுக்கு மதிப்புத் தராமல் ஒதுக்க வேண்டும்.

சாதியின் பெயரால் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் முதலியன பதிவுப்பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும். சாதித் தொடர்பு உடைய எந்தப் புதிய பதி வுக்கும் இடந்தரக் கூடாது (மண்ணி. பக். 80,81)

குறிப்பிட்ட ஒரு மனிதரை மனிதராக மதிக்க மறுக்கும், ஏற்க மறுக்கும் நிலை இருவகைச் சூழல்களில் இடம்பெற்றி ருப்பதாகப் பெரியார் அடையாளம் கண்டார். பெண்ணைப்

பெண் என்பதற்காகவே மதிக்க மறுக்கின்ற சூழல் ஒரு வகை யானது ஆகும். குறிப்பிட்ட சாதியில் பிறந்துவிட்டார் என்பதற் காகவே அவர்தம் பிறப்பு அடிப்படையில் அவரை மனிதராக மதிக்க மறுப்பது மற்றொரு நிலைக்குரியது ஆகும்.

தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு என 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் தலைவர்கள் பலர் குரல் கொடுத்து வந்திருப்பினும், போராடி இருப்பினும் தந்தை பெரியாரின் குரலும், போராட்டமும் தனித்துவம் மிக்கனவாகத் திகழ்கின்றன. பள்ளர், பறையர் என்ற சாதிப் பெயர்களுக்கும், சூத்திரர் எனும் வருணாசிரமப் பெயருக்கும் இடையே நிலவும் வேறுபாடுகளைத் தெளிவாக்குகின்றார். சூத்திரர் எனும் பெயருக்கு அடிப்படையாக உள்ள புராணத் தன்மைகள் மனிதர்களை எந்த அளவிற்கு இழிவுபடுத்துகின்றன என்பதனை விரிவாக விளக்கி யுள்ளார். திராவிடர்க்கு உள்ளேயே காணப்படும் சாதிய வேறுபாடுகளையெல்லாம் எடுத்துக்காட்டி, அதனால் ஒற்றுமையின்மை உருவாவதை விளக்கிப் பிராமணரல்லாத அனைத்துச் சாதியினரையும் திராவிடர் அல்லது தமிழர் என்று பெயரிட்டு அழைப்பதே பொருத்தமுடையது என்கிறார். இவைபோன்ற விளக்கங் களை மு.வ.வின் கருத்துக்களில் காணமுடியாவிட்டாலும் சாதியை ஒழிக்க வேண்டும் எனும் கருத்து அவர்தம் இலக்கியப் படைப்புகளிலும் கட்டுரை நூல்களிலும் அழுத்தமாகவும், பரந்து பட்ட நிலையிலும் பதிவு செய்யப் பெற்றுள்ளது. இதுபோன்ற சாதியெதிர்ப்பு நிலையில்தான் சாதிஒழிப்பு எனும் அவர்தம் கட்டுரை *குடிஅரசு* இதழில் வெளிவந்துள்ளது. அக்கட்டுரையில் தான் தந்தை பெரியாரைப் பற்றி அவர்தம் சாதிஒழிப்புப் போராட்டம் பற்றி விரிவாகப் பேசியுள்ளார் (பார்க்க : பின்னிணைப்பு - 2).

காந்தியடிகள், திரு.வி.க. முதலான தலைவர்களும் சாதி ஒழிப்புப் பற்றியும் பேசியுள்ளனர். திரு.வி.க., காந்தி ஆகிய இருவரையும் மிக உயர்வாகக் கருதும் மனநிலையுடையவர் மு.வ.. எனினும் மு.வ.வின் சாதிவேறுபாட்டுக் கருத்தியலிலும் பெரியாரின் சாதிவேறுபாட்டுக் கருத்தியல்தான் இடம் பெற்றுள்ளது. கடவுள் நம்பிக்கையும், இந்து மதமும், புராணமும், மனுதர்மமும், வருணாசிரமக் கொள்கையும் சாதி எனும் மனநிலையைப் பெற்றெடுத்து நீரூற்றி வளர்ப்பதாகப்

பெரியார் கருதுகிறார். இதனால் இவற்றை ஒழிக்காமல் சாதியை ஒழிப்பது இயலாத காரியம் என்று கருதுகிறார். ஆனால் காந்தியடிகளோ வருணாசிரமக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, இராமராஜ்யம் எனும் இந்துமதக் கொள்கையை ஏற்றுக்கொண்டு தீண்டாமை ஒழிப்புப்பற்றிப் பேசும் இயல்புடையவர். பொதுப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இடமளிப்பதை விடப் பொதுஇடங்களில் அவர்களுக்கு உரிமை அளிப்பதை விடத் தாழ்த்தப்பட்டவர்களுக்கெனத் தனிப் பள்ளிகளையும், புழங்கு இடங்களையும் உருவாக்குவதே சிறந்தது எனும் கருத்துடையவர் காந்தி. ஆனால் பெரியாருக்கு இதில் உடன்பாடு இல்லை. மறுத்து எழுதவும் செய்கின்றார். மு.வ.வைப் பொறுத்த வரையில் இந்து மதம் சார்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர் இல்லை. வருணாசிரமக் கொள்கையிலும் உடன்பாடு அற்றவர். தம் படைப்புகளில் தாயுமானவர், வள்ளலார், விவேகானந்தர் பற்றியெல்லாம் குறிப்பிடுகின்றாரே தவிர இராமனைப்பற்றிக் குறிப்பிடுவதில்லை. இராமனை ஒரு வழிபடு கடவுளாகச் சித்திரிப்பதில்லை. எனவே, மு.வ.விடம் காணப்படும் சாதி ஒழிப்புக் கருத்தியலுக்குப் பெரியாரின் சிந்தனைகளே அடிப்படையாக அமைகின்றன எனலாம். எனினும் பிராமண எதிர்ப்பு என்ற கருத்து அவர் படைப்புகளில் இடம் பெறுவதில்லை. மதம், புராணம் சார்ந்த நம்பிக்கைகளை அழிப்பதாலும் இட ஒதுக்கீட்டிற்கு வழிசெய்வதாலும் கலப்புத் திருமணங்களாலும் சாதியை ஒழித்துவிடலாம் என்ற பெரியாரின் கருத்து முழுமையாக மு.வ.வின் படைப்புகளில் இடம் பெறவில்லை. இடஒதுக்கீடு பற்றிய குறிப்புகள் இல்லை. 'கையால் உழைப்பது, தாழ்வு என்ற எண்ணம் இந்தச் சமூகத்தில் என்று தோன்றியதோ அன்றுமுதல் உயர்ந்தசாதி தாழ்ந்தசாதி என்ற மனப்பாங்கு தோன்றிவிட்டதாகக்' கருதுகின்றார் (நெஞ். ப.463). சாதி ஒரு பொய். சாதி வேறுபாடு பொய்யின் அடிப்படையில் நிற்கின்றது. அறிவு வளர்ச்சி வளர வளர அது இருக்குமிடம் இல்லாமல் மறைந்துவிடும் என்கிறார். பொய்யான சாதிவேறுபாட்டைச் சட்டத்தால் மறைத்துவிட இயலும் என்று தம்பிக்கு மடல் எழுதுகின்றார் (தம். ப. 28). சாதிஒழிய வேண்டும் என்ற கருத்தைச் சொல்பவரும் அதைக் கடைப்பிடிப்பவராக இருத்தல் வேண்டும் என்று கருதும் மு.வ. சாதிவேறுபாட்டை மூட நம்பிக்கை என்று குறிப்பிடுகின்றார். மேலும் ஊரும்,

சேரியும் பிரிந்திருக்கும் நிலையை ஊருக்கு ஊர் பாகிஸ்தானாகத் திகழ் கின்றது என்று குறிப்பிட்டுக் கீழ்வருமாறு வினாத் தொடுக்கின்றார்.

> *நம்மோடு பிறந்து, நம்மைப்போல் வளர்ந்து, நம் மொழியே பேசி, நமக்காக உழைத்து, நம்மை நம்பி வாழ்கின்ற ஒரு கூட்டம் - ஒரு திருக்கூட்டம் - உண்டு என்றால் அது சேரியில் வாழும் மக்களின் கூட்டமே ஆகும். அப்படிப் பட்ட நல்ல மக்களை என்ன காரணம் பற்றியோ மூடநம்பிக்கை கொண்டு ஒதுக்கினோம். உடன் வாழ வேண்டிய மக்களுக்கு ஒதுக்கிடம் கொடுத்தோம். ஊரை அடுத்தது சேரி என்றோம். உங்களுக்கு வேறு குளம் என்றோம். உங்களுக்கு வேறு வழி, எங்களுக்கு வேறுவழி என்றோம். உங்களுக்கு வேறு சுடுகாடு, எங்களுக்கு வேறு சுடுகாடு என்றோம். இதைவிடக் கொடிய பிரிவினை முறை வேறு எந்த நாட்டிலாவது உண்டா? (மொழி. ப.120).*

சாதிவேறுபாடுகளைப் பொய்யானவை, செயற்கையானவை என்று கருதும் மு.வ. விழுமிய கல்வி அறிவால் அவற்றைப் போக்கிவிட இயலும் (மண்ணி.ப.70) என்கிறார். இக்கருத்திற்கு ஏற்பவே தம் படைப்புகளில் சாதிவேறுபாட்டை வெறுக்கின்ற கதை மாந்தர்களைப் படைத்துக் காட்டுகின்றார். *வாடாமல்லியில்* வரும் *கதைமாந்தர்* 'உனக்கு ஊர் உலகம் ஒன்னும் தெரியாதுடா கண்ணு. உங்க அப்பாவுக்குச் சாதியென்றால் பிடிக்காது' (வாடா. ப.40) என்று தன் மகளிடம் பேசுகின்றார். சாதிக்கு அப்பாற்பட்ட நிலையில் திருமணங்கள் நடப்பதையும் தம் படைப்புகளில் நிகழ்ச்சியாகப் படைத்துள்ளார். *கள்ளோ? காவியமோ?* புதினத்தில் வரும் தந்தை தன் மகனுக்குத் தன் சாதிக்குள்ளேயே திருமணம் செய்ய விரும்பவில்லை.

சாதிவேறுபாடுகளால் விளையும் தீங்குகளைப் பற்றியும் மு.வ. சிந்தித்து உள்ளார். 'இனம், வகுப்பு, நிறம், மதம், நாடு ஆகியவற்றின் பெயரால் விதைத்த வித்துக்கள் பகை வித்துக்களாக மாறிக் கொலையாய், கொள்ளையாய், போராய் முளைக்கின்றன' (அற. ப.32). இதனால் அரசியல் கட்சிகளில் சாதி உணர்வு இடம் பெறுவதையும் தடுத்து நிறுத்தவேண்டும் என்கிறார் (மண்ணி.ப.42). ஒவ்வொரு சாதியினரும் தம் சாதிக்குள் இருந்து ஓர் அரசியல் தலைவர் வரவேண்டும், பதவிபெறவேண்டும் என்ற எண்ணங்கள் தேர்தலின்போது தம் சாதியார்க்கே தம் ஓட்டு என்ற எண்ணத்தை உருவாக்கிவிடுகின்றன (மண்ணி.ப.72). இதன் தொடர்ச்சியாக நீதி வழங்குகின்ற முறையிலும் தன்னுடைய

சாதியானைக் காப்பாற்ற வேண்டும்; உயர்த்த வேண்டும் என்பனவற்றுக்காக நேர்மையில்லா நிலையில் மனச்சான்றுக்கு மாறாக நடப்பதற்கு ஏற்ற பண்பு நிலையும் உருவாகிவிடுகின்றது (மண்ணி.ப.49). இவைபோன்ற பல்வேறு தீங்குகளை விளைவிக்கும் சாதியை ஒழிக்க வேண்டும் என்ற கருத்து கல்லூரிப் பருவத்திலேயே இளைஞர்களிடம் வரவேண்டும். அதுவும் பெண்பிள்ளைகளிடம் அவ்வுணர்வு வளர்ந்தால் நன்மை மிகுதியாக விளையும் என்று மு.வ. கருதுவதனைக் கீழ்வரும் சான்றால் அறியலாம்.

> *கல்லூரியில் படிக்கிற பிள்ளைகள் நாங்கள் எத்தனையோ காலமாய்ப் பாடுபடுகிறோம். சாதியை ஒழிக்கவேண்டும் என்று உறுதியெல்லாம் செய்துகொண்டோம். கல்லூரியை விட்ட பிறகு நான் மறந்தேன்; மருதப்பன் மறந்துவிட்டான். மற்ற நண்பர்களும் மறந்துவிட்டார்கள். ஆனால் என் தங்கை செய்து காட்டிவிட்டாள். இனிமேலாவது நான் அவள் இருக்கிற இடத்துக்குப் போய் அந்தத் தொண்டு செய்ய வேண்டும். அதைவிட்டுவிட்டு அவளை இங்கே அழைத்துக் கொண்டு வருவது ஏன்? இப்படி நான்கு பெண்கள் சாதியை விட்டால் நாற்பது ஆண்களுக்குப் புத்திவரும் (செந். ப. 93).*

கோவிலுக்குள் தீண்டத்தகாதவர்களை அனுமதிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் மு.வ. பல்வேறு இடங்களில் பேசி யுள்ளார் (பார்க்க : இந்நூலின் சமயம் எனும் பகுதியை). எனினும், 'தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் தாழ்த்தப்பட்டவர்களின் மனத்தைவிட்டு அகல வேண்டும். மற்றவர்களைச் சாமி என்று அழைப்பதைத் தவிர்த்தல் வேண்டும். இவற்றின்வழி நாமும் மனிதர்தான் என்ற சுயமரியாதை உணர்ச்சி உள்ளவராக மாற வேண்டும். கஷ்டப்படவும் கட்டுப்பாட்டை உடைத்து எறியவும் உயிரை விடவும் தயாராய் இல்லாமல், எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. வேறு ஒருவர் உங்களுக்கு உதவி செய்வார் என்று எதிர்பார்ப்பது பெரிய முட்டாள்தனம். உங்களையே நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளத் துணிவு கொள்ள வேண்டும்' (குடி 25.4.1926, 16.6.1929) என்று தாழ்த்தப்பட்ட மக்களைத் தன்னம்பிக்கை ஊட்டிப் போராடத் தூண்டும் பெரியாரின் சிந்தனைப் போக்கு மு.வ.வின் உரையாடல்களிலோ கட்டுரை களிலோ இடம்பெறவில்லை. செல்வம், கல்வி, திறமை, செல்வாக்கு, கட்டுப்பாடு, ஒற்றுமை இன்மையே தீண்டாமைக் கொடுமைக்கு வழிவகுப்பதாக ஓர் இடத்து (குடி. 8.5.1932) பெரியார் குறிப்பிட்டாலும்

மற்றோரிடத்தில் இவற்றை அடைவதால் மட்டும் சாதிக் கொடுமையை ஒழித்துவிடமுடியாது என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

> *படிப்பினாலும் பணம் சம்பாதிப்பதாலும் குளிப்பதனாலும் குடிக்காமல் இருப்பதாலும் மாமிசம் சாப்பிடாது இருப்பதினாலும் இவ்விழிவு போய்விடுமென்று சிலர் உங்களுக்கு உபதேசம் சொல்லுகின்றார்கள். நான் அவைகளை ஒப்புக்கொள்ள மாட்டேன் (குடி.16.6.1929)*

என்று குறிப்பிடும் பெரியார், இத்தன்மைகள் உள்ள மற்றவர்கள் இழிநிலை அடையாததைச் சுட்டிக்காட்டுகின்றார். அதாவது பெரியாரைப் பொறுத்தவரையில் கலப்புமணம், இடஒதுக்கீடு, கல்வி அறிவு பெறுதல், பொருள் சேர்ப்பு, பதவிபெறுதல் என எல்லாமும் தாழ்த்தப்பட்டவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவரப் பயன்படுமே தவிர, தீண்டாமையை ஒழிக்கப் பயன்படா என்று கருதுகின்றார். தாழ்த்தப்பட்டவர்கள் மனத்தளவில் தன்னம்பிக்கை பெறுவதுடன் கடவுள்-மதம் -புராணம் ஆகியவற்றை நம்பாமல் புறக்கணிப்பதன் வழியும், கடவுள் முதலானவற்றைச் சமூகத்தி லிருந்து ஒழித்துக்கட்டுவதன் வழியும் மட்டுமே தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க முடியும் என்று கருதுகின்றார். இத்தகு புரிதலுக்கு மு.வ.வின் எழுத்துகளில் இடமில்லை. பார்ப்பனர் களைச் சாதியக் கொடுமைக்குக் காரணமானவர்களாகச் சித்திரிக்கும் முறையும் அதற்காக அவர்களை எதிர்க்கும் முறையும் மு.வ.விடம் இல்லை.

4

சமயம்

மக்களிடையே வேறுபாடு உண்டாக்குவது, மக்களைப் பிரித்துப் பூசல் விளக்கைத் தூண்டுவது எதுவாக இருந்தாலும் அதற்கும் கடவுள் நெறிக்கும் தொடர்பு இல்லை என்று ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு சமயத்திற்கும் தனித்தனியே ஒரு கடவுள் இல்லை என்ற தெளிவு வேண்டும். ஒரு பரம்பொருள் உண்டே தவிர வெவ்வேறு தெய்வங்கள் இல்லை (நல். ப. 19).

பணத்தைத் தருவதாலோ, பணத்தைச் செலவுசெய்து சில சடங்குகள் செய்வதாலோ சில பொருள்களைத் தருவதாலோ, கடவுளின் அருளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை மூடநம்பிக்கை ஆகும் (நல். ப. 21).

பெரியார் பழுத்த சமயப் பின்புலம் மிக்க குடும்பச் சூழலில் பிறந்து வளர்ந்தவர். பெரியாரின் பெற்றோர் சமய அடிப்படையில் எண்ணற்ற தர்மங்களைச் செய்ததற்கு அவர்தம் வாழ்க்கை வரலாற்றில் சான்றுகள் பல உள்ளன. பெரியாரும் பல்வேறு தேவஸ்தானத் தலைமைப் பொறுப்பை 20 ஆண்டு களுக்கு மேலாக வகித்து வந்துள்ளார். *குடிஅரசு* இதழின் தொடக்கவிழா தவத்திரு ஞானியார் அடிகளின் பங்கேற்புடன் நிகழ்ந்துள்ளது. தொடக்கக்காலக் *குடிஅரசு* இதழின் நோக்கங்களில் சமயமும் இடம்பெற்று இருந்ததாகக் குறிப்பர் (இராசாங்கம், 1998). எனினும், கடவுள் - சமயம் - மத எதிர்ப்பாளராகப் பெரியார் முற்றிலும் பின்னர் மாறியுள்ளார். மதங்களைப்பற்றியும் கடவுளைப் பற்றியும் விமர்சனம் செய்கையில் அவற்றைப் பற்றித் தாம் நன்கு அறிந்த, புரிந்த பின்னரே விமர்சனம் செய்வதாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

'கடவுளை உண்டாக்கியவன் முட்டாள், கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன், கடவுளை வணங்குகிறவன் காட்டு மிராண்டி, கடவுள் - சமயம் - மதம் தொடர்பான கருத்தியலை எடுத்துரைப்பவன் கைதேர்ந்த பித்தலாட்டக்காரன், கடவுள் நம்பிக்கையைப் பரப்புவது தந்திரத்தனமானது; மோசடித்தன மானது; முட்டாள்தனமானது; அயோக்கியத்தனமானது; ஆபாச மானது' என்றெல்லாம் மிகக் கடுமையாகவும் வெளிப்படை யாகவும் தம் கண்டனத்தைத் தெரியப்படுத்துகின்றார். 'கடவுள் இல்லை கடவுள் இல்லவே இல்லை' எனும் முழக்கத்தைத் தம் வாழ்நாள் முழுவதும் சொல்லிவந்தார். பக்தி இலக்கியத்தின் பிதாமகன்களாகச் சொல்லப்பெறும் நாயன்மார்களையும் ஆழ்வார் களையும் 'அயோக்கியர்' என்றே குற்றம் சாட்டுகின்றார். கடவுள், இந்து மதம் எனும் சொல்லாட்சிகள் தமிழ் மொழிக்கு உரியவை அல்ல; வடமொழியிலோ வேதங்களிலோ இச்சொற்களைக் காண முடியவில்லை. அதாவது கடவுள் என்ற சொல்லுக்குத் தற்காலத்தில் உள்ள பொருள் புரிதல் பழங்காலத்தில் இல்லாத ஒன்று என்று விளக்கம் அளித்து, கடவுள் நம்பிக்கை இயற்கை யானது அன்று, கண்டுபிடிக்கப்பட்டதும் அன்று, உண்டாக்கப் பெற்றது ஆகும் என்று தம் கருத்தைப் பதிவு செய்கின்றார். இதன் தொடர்ச்சியாகக் கடவுளால் மனிதன் படைக்கப் பெற வில்லை, மனிதனால் தான் கடவுள் படைக்கப்பெற்றார் என்ற முடிவுக்கு வருகின்றார். இக்கருத்தாக்கத்தை ஒட்டி, 'உலகத்தில் இருக்கின்ற எண்ணற்ற சீவராசிகளிடம் கடவுள் நம்பிக்கை இல்லை, மனிதர் களிடம் மட்டும் கடவுள் நம்பிக்கை இருப்பதற்குக் காரணம் என்ன' என்ற வினாவைத் தொடுத்து, கடவுள் உருவாக்கப் பெற்றவரே என்ற விடையையும் அளிக்கின்றார்.

கடவுள் நம்பிக்கை சமூகத்தில் உருவாக்கப் பெற்றதற்கான காரணத்தையும் பெரியார் சுட்டிக்காட்டுகின்றார். மக்களின் சுய நலத்தன்மையும் அவர்களிடம் எழுந்த பயமும் சந்தேகமும் பேராசையும் ஒரு சில பழக்கவழக்கங்களும் அவர்களின் வாழ்விடச் சூழலும் மக்களிடம் கடவுள் நம்பிக்கை உருவாகவும் நிலைபெறவும் காரணங்களாக அமைகின்றன என்கிறார். 'உள்ளதைப் பங்கிட்டு உண்பது, உழைப்பைப் பங்கிட்டுச் செல்வது என்ற நிலை சமூகத்தில் ஏற்பட்டு விட்டால், அறிவு வளர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் சமூகத்தில் ஏற்பட்டு விட்டால் கடவுள் நம்பிக்கை குறையும் சூழல் உருவாகும்' என்றும் நம்புகின்றார்.

கடவுள், சமயம், மதம் ஆகியவற்றைக் கடுமையாக விமர்சிக்கையில், இந்நம்பிக்கைகளை முற்றிலும் ஒழித்தே தீர வேண்டும் என்று விளக்குகையில் ஆங்காங்குப் பல்வேறு காரணங்களைப் பெரியார் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அவற்றைத் தொகை வகைப்படுத்திக் கீழ்வருமாறு சுட்டலாம்.

- குறிப்பிட்ட மக்களைப் பிறப்பு அடிப்படையில் இழிவு படுத்துகின்றது; இழிவுபடுத்தக் காரணமாக அமைகின்றது.
- மனித உயிர்களில் பெண்ணை அடிமைப்படுத்தக் காரணமாக அமைகின்றது.
- மனிதன் சுயமரியாதை உணர்வுடன் வாழவும் தன்னுடைய இழிநிலைக்கான காரணத்தை அறியவும் காரணம் அறிந்த பின்னர் அதனை எதிர்த்துப் போராடவும் கடவுள் நம்பிக்கை தடையாக அமைகின்றது.
- குறிப்பிட்ட மக்களைக் கோவிலில் சேர்க்காமல் இருப்பது, அனைவரையும் கருவறைக்குள் அனுமதிக்காமல் இருப்பது, மக்கள் மொழியில் வழிபாடு நிகழ்த்த மறுப்பது எனப் பெரும்பான்மையான மக்கள் புறக்கணிக்கப் பெறுவதற்குக் காரணமாக அமைகின்றது.
- இலட்சக்கணக்கான மக்கள் ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாமல் துன்பம் உற்று வாழுகின்ற சூழலில், அபிஷேகம் எனும் பெயரில் உணவுப் பொருட்களை வீணடிக்க வழி வகுக்கின்றது.
- மனிதர்களின் ஒப்பற்ற நேரமும் உழைப்பும் வீணடிக்கப் பெறுகின்றன.
- கோவில்களுக்கு வரும் இலட்சக் கணக்கான ரூபாய் பயனுள்ள காரியங்களுக்குச் செலவிடப்படுவதில்லை. அறிவு வளர்ச்சிக்குச் செலவிடப்பெறுவதில்லை.
- முயற்சியின்றிச் சோம்பேறித்தனம் மக்களிடம் உருவாக வழிவகுக்கின்றது.
- நாடு விடுதலை அடைய முடியாததற்கும் ஒருவகையில் காரணமாக அமைகின்றது.

இத்தகு தீங்குகளை எல்லாம் சமூகத்தில் உருவாக்கும் கடவுள் நம்பிக்கை முற்றிலும் அழிக்கப்பெற வேண்டும் என்பது

பெரியாரின் கருத்து. கடவுள் நம்பிக்கை செயலாக்கம் பெறக் களம் அமைத்து அளிக்கும் மதமும் சீர்திருத்தம் செய்யப்பெற வேண்டும். இந்து மதம் சமூகத்திலிருந்து ஒழிக்கப்பெற வேண்டும் என்றெல்லாம் கடவுளோடு தொடர்புடைய மதத்திலும் மதக் கொள்கையிலும் தம் கவனத்தைச் செலுத்தியுள்ளார் பெரியார். மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கு ஏற்றதாக இல்லாமல், கால வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்ததாக இல்லாமல், மதத்தை மனிதன் காப்பாற்ற வேண்டும் மதத்திற்காகத்தான் மனிதன் பிறந்துள்ளான் (குடி 25.1.1931) என்று சுட்டும் நிலை முற்றிலும் மாறவேண்டும் என்கிறார்.

'ஒரு பொதுச் சங்கமோ ஒரு வாசக சாலையோ ஒரு வியாபாரச் சங்கமோ உருவாக்கப் பெற்றால் அதற்கெனச் சில விதிமுறைகளை வகுப்பது அடிப்படைத் தேவையாகும். அவ் விதிகள் அந்த அமைப்புகள் சரிவர இயங்குவதற்கும் விதிகளை உருவாக்கிய மனிதர்கள் நலம் பெறுவதற்கும் ஏற்ப உருவாக்கப் பெறுகின்ற அமைப்பிற்கு அல்லது அவ் விதிகளுக்குப் பெயர் கொள்கை என்றாலும் திட்டம் என்றாலும் மதம் என்றாலும் மார்க்கம் என்றாலும் ஒன்றுதான்' (குடி. 2.8.1931) என்று மதத்தைப் பெரியார் விளக்குகின்றார். இந்த வரையறைக்கு ஏற்றபடி மனிதனின் கூட்டு வாழ்க்கைக்கும் அதற்கேற்ற ஒழுக்கத்திற்கும் விதிகளைக் கொண்டிருக்கின்ற மதங்களைப் பற்றிச் சுய மரியாதை இயக்கம் கவலைப்படுவதில்லை. தேவைப் பட்டால் அம்மதங் களுக்குச் சுயமரியாதை இயக்கம் உதவும் என்கிறார். ஆனால், மனிதச் சமூகத்தின் அறிவைப் பாழ்படுத்தும், தன்மான உணர்ச்சி அறவே இல்லாமல் செய்யும், மக்களைப் பிரித்து வைத்து உயர்வு தாழ்வு கற்பிக்கும், மனித சமூக ஒற்றுமையைக் கெடுக்கும், பொது முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் கெடுக்கும் தன்மை வாய்ந்த கொள்கைகளை உடைய மதங்களை ஒழிக்கச் சுயமரியாதை இயக்கம் பாடுபடும்' (குடி. 19.12.1937) என்றும் தம் நிலைப் பாட்டைத் தெளிவுபடுத்துகின்றார்.

மேற்சுட்டப்பெற்ற தன்மைக்கு ஏற்ப மதங்கள் சீர்திருத்தம் செய்யப் பெற வேண்டும். அதற்கான வழியைத் தேடுங்கள் என்று குறிப்பிட்டுப் பகுத்தறிவு மார்க்கத்தின் நிலையை முத்தாய்ப்பாகக் கீழ்வருமாறு சுட்டுகின்றார்.

எக்காலத்திற்கும் ஏற்ற மதமென்றால் - காலத்திற்கு ஏற்றபடி தானாகவே மாறவோ, மாற்றிக் கொள்ளவோ, சவுகரியமாக இருக்கும் என்பதில் பயமோ, அவநம்பிக்கையோ கொள்ளாதீர்கள்! இருட்டானால் விளக்கைப் பற்ற வைத்துக் கொள்ளுங்கள். பகலானால் விளக்கை அணைத்துவிடுங்கள் என்றுதான் பகுத்தறிவுள்ள மார்க்கம் சொல்லி யிருக்கும். ஆகவே, காலப்போக்குடன் கலந்து கொள்ளப் பயப்படா தீர்கள் (குடி. 01.02.1931).

இக்கருத்து இசுலாம் மதம் தொடர்பான விமர்சனத்தின் போது பெரியார் தெரிவித்தது ஆகும். பெரியாரைப் பொறுத்த வரையில் ஏனைய மதங்களைவிட இசுலாம் மதத்தில் பகுத்தறிவுத் தன்மை கூடுதலாக உள்ளதாகக் கருதுகின்றார். இந்து மதத்தை விட, கிறித்துவ மதத்தைவிட, சாதிக் கொடுமை இல்லாத் தன்மை, சாதிப் பிரிவினை இல்லாத் தன்மை, தீண்டாமைக் கொடுமை இல்லாத் தன்மை இசுலாமியத்தில்தான் அதிகமாக உள்ளதாகச் சுட்டிக் காட்டு கின்றார். தாழ்த்தப்பட்டவர்கள் இம்மதத்தைத் தழுவுவதால் சமூகச் சமத்துவம் கிடைத்துவிடும் என்கிறார் (குடி. 19.05.1929). இந்தக் கருத்தாக்கத்திற்குரிய ஒரு உண்மை நிகழ்வையும் எடுத்து விளக்கியுள்ளார். வைக்கத்தில் நிகழ்ந்த அந்நிகழ்வு வருமாறு:

வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஆரிய சமாஜத் தீயர்களையும் கிறித்துவப் புலையர்களையும் தெருவில் நடக்க விடவில்லை. இஸ்லாமானவன் தாராளமாய் விடப்பட்டான். பாலக்காட்டிலும் அப்படியே நடந்தது. ஒருநாள் பாலக்காட்டில் 'செருமான்' என்கின்ற இழிவுபடுத்தப்பட்ட சாதியாயிருந்த தீண்டப்படாதவன் ஒருவன், இஸ்லாம் ஆகி, தடுக்கப்பட்ட தெருவழியாகப் போனான். அப்போது அவனைச் சவுளிக்கடைப் பார்ப்பனரும், வெற்றிலைக்கடை நாயரும் தெருவுக்கு வந்து நின்று பார்த்தார்கள். உடனே அங்கு இருந்த மாப்பிள்ளை (இஸ்லாம்) 'எந்தடா' பன்னிக் கூத்தச்சி மகனே, அவனே நோக்குன்னு?' என்று கேட்டான். அதாவது 'என்னடா பன்றித் தேவடியாள் மகனே, அவனைப் பார்க்கிறாய்?' என்று கேட்டான். செருமானாயிருந்த முஸ்லிம் சிரித்துக் கொண்டே போனான். பார்ப்பனரும், நாயரும் தலைகுனிந்து கொண்டார்கள். இது உண்மையில் நடந்த சம்பவம் (குடி. 02.08.1931).

மதமாற்றம் தொடர்பான தம் கருத்தினைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து பார்த்துத் தீண்டத்தகாமை எனும் இழிவு நீங்கினால் போதும் என்ற நிலையில் மதத் தழு வலைக் கீழ்வருமாறு நியாயப்படுத்துகின்றார்.

சட்டம் செய்வது கஷ்டம்; செய்தாலும் நடைமுறையில் வருவது கஷ்டம். சத்தியாக்கிரகம் செய்வதும் கஷ்டம்; செய்தாலும் வெற்றி பெறுவது சந்தேகம். இவற்றால் துன்பமும் தோல்வியும் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால், ஆதிதிராவிடர்களுக்கு - இஸ்லாம் கொள்கையை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்வதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ ஏதாவது உண்டா? அல்லது, அன்னியருக்கு ஏதாவது கஷ்டம் உண்டா? அவன் ஆத்திகனாய் இருந்தால் என்ன? நாத்திகனாய் இருந்தால் என்ன? உண்மை இஸ்லாம் ஆனால் என்ன? பொய் இஸ்லாம் ஆனால் என்ன? யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் - வேண்டுமானால் எவ்வித மனமாறுதல்கூட இல்லாமல், தன்னுடைய இழிவையும் கஷ்டத்தையும் விலக்கிக்கொள்ள ஆசையும் அவசரமும்பட்ட ஒரு மனிதன் மாலை 5 மணிக்கு இஸ்லாம் மதக் கொள்கையை ஏற்றுக் கொண்டதாய்ச் சொல்லி, 5.30 மணிக்குத் தீண்டாதவன் என்கின்ற இழிவிலிருந்து மீண்டு, தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனாவதில் என்ன மற்றவர்கள் ஆட்சேபிக்க வேண்டும்? கேவலம் வயிற்றுச் சோற்றுக்காக 100-க்கு 90 மக்கள் என்னென்னமோ - அவரவர்களாலேயே இழிவான குற்றமான காரியம் என்று சொல்லப்படுவதை எல்லாம் செய்கின்றார்கள். அப்படி இருக்க, இதில் என்ன இழிவோ குற்றமோ இருக்கின்றது? உலகில் மதங்கள் ஒழிக்கப்படும்போது இஸ்லாம் மதமும் ஒழியும் (குடி. 02.08.1931).

இதுபோன்று, பௌத்த சமயம் சார்ந்து அம்மதத்தைத் தழுவி வாழ்வதையும் பெரியார் தீண்டாமை ஒழிப்பிற்கான வழிமுறைகளுள் ஒன்றாகச் சுட்டுகின்றார். இந்த நிலையில்தான் பெரியாரின் கடவுள் மறுப்பு, இந்து மத ஒழிப்பு தொடர்பான சிந்தனைகளை செயல்களை அர்த்தப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு உருவாகின்றது; பெரியாரின் சமயம் தொடர்பான கருத்தியலை வரையறுத்துக் கொள்ள வழி ஏற்படுகின்றது. அவ்வரையறையைக் கீழ்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம்.

மனித இழிவு அல்லது மனிதனை இழிவு படுத்தும் முறை ஒழிய வேண்டும். அதற்கு இரண்டே வழிமுறைகள் உள்ளன. அவை:

1. *கடவுள் நம்பிக்கையையும் அது தொடர்பான புராண இதிகாச நம்பிக்கைகளையும் மூடநம்பிக்கைகளையும் மத நம்பிக்கை களையும் சமூகத்திலிருந்து அகற்றியே தீருவது. இந் நம்பிக்கைகளுக்குப் பாதுகாப்பாக விளங்கும் பார்ப்பனர்கள், சமயத்துறவியர்கள் என யாராக இருந்தாலும் அவர்களை எதிர்த்தே தீர்வது.*

2. இசுலாம் அல்லது புத்த மார்க்கங்களைத் தழுவிக் கொள்வது; இந்து அல்லது இந்துத் தன்மை வாய்ந்த அடையாளங்களை இழப்பது; அழிப்பது.

மு.வ. கட்டமைக்கும் கடவுள் கருத்தியல்

பெரியாரின் கடவுள் தொடர்பான சிந்தனைகளை மூன்று பெரும் மையங்களுக்கு உரியனவாக வகைப்படுத்திக் கொள்ளலாம். 1. கடவுளை மறுப்பது 2. கடவுள் நம்பிக்கையை அடிப்படை யாகக் கொண்டவற்றை மறுப்பது 3. மதத் தழுவல் (அ) மத மாற்றம். இந்த மூன்று நிலைப்பாடுகளுமே மனிதரைப் பிறவி அடிப்படையில் வேறுபடுத்தும் இழிநிலையை ஒழித்தல் என்ற கருத்தியலை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப் பெற்றவை தாம். மு.வ.விற்கும் மனிதர்களைப் பிறவி அடிப்படையில் வேறுபடுத்தும் இழிநிலையில் உடன்பாடு இல்லை (விரிவிற்குப் பார்க்க இந்நூலின் 'சாதி' எனும் பகுதியை). சமூகத்தில் வழக்கில் இருக்கும் கடவுள் நம்பிக்கைதான் தீண்டாமைக்கு அடிப்படை என்கின்ற பெரியாரின் கருத்தும் மு.வ. விற்கு உடன்பாடானதுதான். அதனால்தான் தம் சமகால வழிபாட்டு முறையில் எண்ணற்ற சீர்திருத்தங்கள் தேவை என்று கருது கின்றார். எனினும், தீண்டாமையை ஒழிக்கக் கடவுள் நம்பிக்கையை ஒழிப்பதே வழி எனவும் மதமாற்றம் மற்றொரு வழி எனவும் பெரியார் குறிப்பது போன்று மு.வ. குறிப்பிட வில்லை; மதத்தை, சமயத்தைச் சீர்திருத்தம் செய்வதன் வழி யாகத் தீண்டாமையை ஒழித்து விடலாம் என்ற கருத்துடைய வராகவே திகழ்கின்றார். இந்நிலைப்பாட்டால்தான் பெரியார் கடவுள் இல்லவே இல்லை என்று சொன்ன சமூகத்தில் வாழ்ந்த மு.வ. 'அறநெறி' எனும் கருத்தியலைக் கடவுள் நிலைக்கு உரியதாகக் கருதிக் கடவுள் உண்டெனும் கருத்துடையவராகத் திகழ்கின்றார்.

மனிதர்களால் படைக்கப் பெற்றவர், உண்டாக்கப் பெற்றவர் தான் கடவுள் என்று பெரியார் உரத்துச் சொல்ல, இவ்வுலக உயிர்களைக் கடவுள்படைத்தார், மொழிகளையும் அவரே படைத்தார் எனும் பொருள்பட மு.வ. தம் கருத்து களைப் பதிவு செய்துள்ளார். 'புலி, பசு, ஓநாய், மான் என எல்லாத் தன்மை வாய்ந்த மனிதர்களும் நாட்டில் வாழ்வதற்குக் கடவுள்தான் பொறுப்பு' (மண்.ப.407) என்றும் மொழிகள் கடவுளால் ஏற்படுத்தப் பெற்றவை (மண்.ப.98) என்றும் மு.வ.

படைப்புகளில் கதை மாந்தர்கள் பேசுகின்றனர். இவைபோன்ற இடங்களில் இக்கருத்துகளை மறுத்துப் பேசும் சூழல்கள் மு.வ.வின் படைப்புகளில் படைக்கப்பெறவில்லை. 'உலக இயக்கம், உயிர் இயக்கம், உடல் வாழ்தல் என்பனவற்றுக்கு எல்லாம் அடிப்படையாக ஒரு மெய்ப்பொருள் இருத்தல் வேண்டும். அதுவே எல்லா வற்றிலும் கலந்து நின்று எல்லாவற்றையும் இயக்குகின்றது என்பது தெளிவு' என்று *திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்* (பக்.291-292) எனும் நூலில் குறிப்பிடவும் செய்கின்றார். மேலும், சீர்திருத்தத்திற்கு உட்பட்ட கடவுள் வழிபாட்டு முறை தேவை எனும் கருத்தையும் வெளிப் படையாகப் பல்வேறு சூழல்களில் பதிவுசெய்துள்ளார்.

வழிபாட்டுச் சடங்குகளை எதிர்த்தல்

வழிபாட்டுச் சடங்குகளால் பொருள் வீணடிப்பு, நேர வீணடிப்பு ஏற்படுவதாகச் சுட்டும் பெரியாரின் கருத்தியல் மு.வ.வின் எழுத்துக்களிலும் விரிவாகவே பதிவாகி உள்ளது. பணத்துக்காக, தம் தவறான முன்னேற்றத்துக்காக மக்கள் கடவுளை வழிபடுகின்ற தன்மையை, வரம் கேட்டல், பயன் எதிர்பார்த்தல் எனும் தன்மைகளை மு.வ. ஆதரிக்கவில்லை. கடவுள் சில பொருள்களை, பூசனைப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு தமக்குச் சார்பாக நின்று வழக்குகளிலும் வாழ்க்கை முறையிலும் வெற்றி தருவார் என்று மக்கள் கருதும் போக்கினை அதிகாரிகள் இலஞ்சம் பெறுகின்ற தன்மையுடன் ஒப்பிடு கின்றார். எதிர்பாராத காரணங்களால் கிடைக்கும் வெற்றியைக் கடவுளுக்குச் செய்த பூசனையால் கிடைத்ததாகக் கருதி மீண்டும் மீண்டும் அவ்வழியை மக்கள் பின்பற்றுவது, நம்புவது தவறான கோட்டை கட்டும் செயலாகக் குறிக்கின்றார். இத்தகு மக்களைப் பழிப்பதால் பயனில்லை என்று மனம் வேதனைப்பட்டுக் கீழ்வரும் கருத்தை மு.வ. முன் வைக்கின்றார்.

> *குத்துச் சண்டையில் ஒருவர் தோற்க ஒருவர் வெற்றி பெற்றுத் தானே தீரவேண்டும்! இருவருமே கடவுளிடம் பிரார்த்தனை செய்து உளமார வந்தாலும், இருவரில் ஒருவர் தான் வெற்றிபெற முடியும் (நண். ப. 52)*

இந்த நிலையை மக்கள் உணர்வது இல்லை. *பரிபாடலில்* சொல்லப்பெற்றுள்ள, மாணிக்க வாசகரால், தாயுமானவரால் சொல்லப் பெற்றுள்ள கருத்துகளை எல்லாம் மக்கள் உணராமல், போற்றத் தெரியாமல் தவறான வழிகளில் சென்று தடுமாறு

கிறார்கள் என்று மக்களின் வழிபாட்டு முறையை இடித்துரைக்கின்றார். பண்டத்தையோ சில பொருள்களையோ அளித்துக் கடவுளின் அருளைப் பெறமுடியும் என்பது ஒருவகையான மூடநம்பிக்கைத் தனமானதே என்கிறார்; கண்மூடித்தன்மை வாய்ந்தது; அறியாமைத் தன்மை வாய்ந்தது என்கிறார் (மண்ணி. பக்.97-98, கய. ப.218, மண். பக்.222-223, 69-70). கடவுள் வரம் தரும் அல்லது மக்களின் நன்மை தீமைகளுக்குக் காரணமானவர் அல்லர் எனும் கருத்தைக் கீழ்வருமாறு விளக்குகின்றார்.

> *கடவுள் நாம் கொடுக்கும் கைப்பொருளை (இலஞ்சத்தை) வாங்கிக் கொண்டு அதற்குக் கைமாறாக நமக்கு உதவுவார் என்று எண்ணுவது அறியாமை. வழக்கில் வெற்றிபெற, தேர்வில் தேர்ச்சிபெற, நோயிலிருந்து காப்பாற்றப்பெற, வியாபாரத்தில் முக்கிய ஊதியம்பெற, தொழிலில் உயர்வு பெற என்று இவ்வாறெல்லாம் நாம் விரும்பும் உதவியைச் செய்வதற்காக நாம் தரும் பொருளை ஏற்றுக் கொள்வார் என்று நம்புவது, கடவுளைப் பற்றிய தவறான கொள்கை யாகும். அவ்வாறு பிரார்த்தனைகள் - பொருள் தரும் வேண்டுதல்கள் - செய்வோர் சில வேலைகளில் வெற்றி பெறுதல் உண்டு. அந்த வெற்றிகள் இயல்பாக ஏற்படுகின்றன. அவை செலவான பொருளுக்குக் கைம்மாறாகக் கடவுள் தந்தவை என்று எண்ணக் கூடாது (நல். ப. 22).*

இத்தகு கருத்தியலைச் சமயத்துறையில் தொண்டாற்றும் சான்றோர்கள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்; மக்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்றும் மு.வ. குறிப்பிடுகின்றார். கடவுள் கடமையை ஒழுங்காகச் செய்வதையே மிக விரும்புகிறார் என்பதை மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். ‘கடமையைச் செய்யாமலே கடவுளுக்கு ஏதாவது செய்து விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்ற மனப்பான்மை தவறான மனப்பான்மை என்பதனை மக்கள் உணரும்படிச் செய்துவிட்டால் பெரும் பயன் விளையும், என்கின்றார். நாட்டுக்குச் செய்யும் தொண்டைக் கண்டு கடவுள் மகிழ்வார் என்ற கருத்து ஐரோப்பிய நாடுகளில் பரவி உள்ளது’ (மண்ணி.ப.26) என்பதனைச் சான்றுக்கு எடுத்துக்காட்டவும் செய்கின்றார். கடவுளை ஒரு மிகப் பெரிய சக்தியாகக் குறிப்பிடும் மு.வ. அந்தச் சக்தியால் யார் யார் என்ன கேட்கிறார்களோ அதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா? எப்படி முடியும் என்று வினாத் தொடுக்கின்றார்; மின்சார இயக்கத்தைச் சான்றாகக் காட்டுகின்றார். இதன்வழி அவ்விடத்தில் ஒரு கருத்தைத் தெளிவு படுத்திவிடுகின்றார். அதாவது வழிபாட்டால் கடவுள் சில உயிர்

களுக்கு உதவிவிடாது, 'அக்கடவுளுக்கு எனத் தனி ஓர் ஒழுங்கு முறை உண்டு. அதனை அறநெறி என்று குறிக்கலாம்' (அல். ப.111) என்கிறார். இதே அடிப்படையில்தான் கடவுளுக்குத் திருமணம் செய்து வைத்தல் முதலானவற்றையும் மக்களின் அறியாத்தனம் என்று குறை கூறுகின்றார். 'மூடநம்பிக்கை கூடாது என்ற புத்தருக்கு, அவரின் பல்லுக்குப் பெரிய கோயில் கட்டி வழிபடுவது பொருத்தமற்றது என்பதுடன் பல்லில் என்ன இருக்கிறது? சொல்லில்தானே உண்மை நெறி உள்ளது' (நெஞ். ப.304,கரி.ப.129) என்று உருவ வழிபாட்டை வினாவிற்கு உட்படுத்துகின்றார். கடவுளர்களின் அற்புதங்கள் பற்றிப் பேசுவதிலும் அவற்றை நம்புவதிலும் மு.வ.வுக்கு உடன்பாடு இல்லை. நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் உயர்வாகக் குறிப்பிட்டுப் போற்றும் இயல்புடையவராகத் திகழ்ந்தாலும் அற்புதச் செயல்களை அறியாமையில் உருக் கொள்பவையாகக் கருதுகின்றார். சமயச் சான்றோர் வாழ்க்கை முறையில் கூறப் பட்ட எந்த அற்புதங்களையும் பாராட்டக் கூடாது' (நெஞ். ப. 303) என்று தெளிவுபடுத்துகின்றார். விஞ்ஞான உலகில் சிவலிங்கத்தின் மீது நீர் சொட்டுகிறது என்பதும், அது பாவிகள் பலர் கோவிலுக்கு வந்ததால் நின்றுவிட்டது என்பதும் அறிவியல் தன்மைக்குரியவை அல்ல (மண்.ப.135) என்கிறார். விஞ்ஞான உண்மைகள் கதைகளால் பரவி விளங்குவது இல்லை. அதுபோல் சமய உண்மைகளையும் அற்புதங்கள் வழி நிலைநாட்ட வேண்டும் என்பது இல்லை என்று விளக்கம் அளிப்பதுடன் 'புத்தர் அற்புதங்கள் பற்றிப் பேசுவதில் உடன்பாடு அற்றவர்' (நெஞ். பக்.303-304,கரி.ப.129) என்ற வரலாற்று நிகழ்வையும் எடுத்துக்காட்டுகின்றார்.

செபம் செய்தல், செபமாலை உருட்டுதல், தவம் செய்தல், நோன்பு நோற்றல் என்பன எல்லாம் எவ்வகையிலும் வழிபாட்டு முறையுடன் தொடர்புடையவை இல்லை என்பதுதான் மு.வ.வின் கருத்தாக உள்ளது. செபம் அல்லது செபமாலை உருட்டுவதால் மனம் திருந்திவிடும்; அதுவே கடவுள் வழிபாட்டிற்குரியது என்று கருதுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்குச் சமம் (மண். ப.224) என்று எடுத்துரைக்கின்றார். தேவைகளைக் குறைத்துக் கொண்டு நாட்டிலேயே வாழ்ந்துகாட்டுவதுதான் இந்தக் காலத்துத் தவம் (வாடா. ப.137) எனத் தவத்திற்குப் புது விளக்கம் அளித்து நிகழ்காலத்திற்குரியதாக மாற்றி அமைக்கின்றார். 'சடங்குகள்

முன்னோர்களால் அவரவர் தேவைக்கேற்ப அன்று உருவாக்கப் பெற்றவை. அவற்றுக்கு முதன்மை அளித்து எல்லார்க்கும் தேவை என்றும் எல்லாக் காலத்திற்கும் தேவை என்றும் வற்புறுத்தக் கூடாது' (நல். ப. 21). வாழ்க்கையைப் பயன்படுத்துவதற்காக ஒரு காலத்தில் தோன்றியவை இன்றைய வாழ்க்கையைக் கெடுக்கும் என்று கருதினால் அவற்றைத் தவிர்ப்பது தான் நல்லது. நோன்பு முதலான சடங்குகள் பெண்மைக்கு உரிமையும் சிறப்பும் தேடித் தருவதற்கு மாறாகக் கண்மூடி வாழ்வதற்கான கருவி களாகிவிட்டனவே' (பெண்.ப.20) என்றெல்லாம் பல்வேறு கோணங்களில் நின்று சடங்குகளை மறுக்கின்றார் மு.வ..

சாமியார்களை எதிர்த்தல்

ஞானியார் அடிகள், குன்றக்குடி அடிகளார், கைவல்ய சுவாமி எனச் சமயத் துறவிகளை மதித்துப் போற்றிய பெரியார், போலிச் சமயத்துறவிகளை எதிர்த்தே தீர்வது என்ற நிலைப்பாடு உடையவராகவும் திகழ்ந்தார். இதேபோன்று திருநாவுக்கரசரை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் போற்றி அவர்தம் உழவாரப் பணியை, தொண்டை உயர்த்திப் பேசும் மு.வ. வும் போலிச் சமயத் துறவிகளுக்கு எதிரான கருத்துடையவராகவும் திகழ் கின்றார். சாமியார்களுக்கு எதிரான மனநிலையுடைய கதை மாந்தர்களைப் படைப் பதிலும் மு.வ.விடம் அதிக ஈடுபாட்டைக் காணமுடிகின்றது.

சாமியார் செய்யும் பூசை பூனை, எலி வலை எதிரே செய்யும் பூசைதான் (செந்.ப.23); காவி உடுத்தவர்கள் எல்லாம் விவேகானந்தர் என்று கருதுகின்றனர்; கருப்பாய்த் தோன்றிக் கத்தும் பறவை எல்லாம் குயில் ஆகிவிடுமா (செந்.ப.26) என்று பல்வேறு நிலைகளில் சாமியார் தொடர்பான எதிர் மன உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார் மு.வ.. இப்போக்கை *நெஞ்சில் ஒரு முள், கரித்துண்டு, செந்தாமரை* முதலான நாவல்களி லெல்லாம் காணமுடிகின்றது. வேடம் தரித்துத் தெய்வங்களுக்குப் பிரார்த்தனை எனும் பெயரில் மடிப்பிச்சை கேட்கும் சமூக நிகழ்வையும் வெறுப்பதாக *வாடாமலர்* எனும் நாவலில் வரும் கதை மாந்தரைப் (ப.225) படைத்துள்ளார்.

மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்தல்

பெரியாரைப் போன்றே மு.வ.வாலும் புராணங்கள், சோதிட நம்பிக்கைகள் எல்லாம் ஒதுக்கப்பெறுகின்றன.

புராணக் கதைகளைக் கண்ணை மூடிக்கற்றல் இனி முடியாது. ஒன்று, அவற்றிற்கு உட்பொருள் கண்டு உணர்ந்து போற்றல் வேண்டும்; அல்லது அவை இக்காலத்திற்கு உதவாதவை எனக் கைவிடுதல் வேண்டும். பல கதைகள் நல்ல உவமைகள் போல் எளிதில் உட்பொருள் உணர்த்தக் காண்கிறோம். சில கதைகள் மட்டுமே பயனுள்ள உட்பொருள் உணர்த்தாமல் உள்ளன; அவற்றை மட்டும் விட்டு, மற்றவற்றால் பயன் பெறலாம். இந்நெறியிற் சென்றால்தான் முன்னோருடைய பாடல் பல நம் நெஞ்சத்திற்கு நல்லவனாய் அரும்பயன் நல்குகின்றன. (இள. ப. 833)

இந்த அளவுகோலை அடிப்படையாகக் கொண்டே *சிலப்பதிகாரத்தை* மு.வ. ஏற்றுக்கொள்கின்றார். கண்ணகி, மாதவி வாழ்வியல் எல்லாம் ஒவ்வொரு நிலையில் பின்பற்றத்தக்க வாழ்வியலாகக் கருதுகின்றார். ஆனால், பெரியார் புராணங்கள் தொடர்பாகக் கொண்டுள்ள மதிப்பீடு வேறுவகையானது. அவரைப் பொறுத்த வரையில் புராணங்கள்வழி பெறப்படும் அறிவு, நம்பிக்கை இன்றைய மனித வாழ்வியலை வளப்படுத்தப் பயன்படா என்பதாகவே உள்ளது. இந்த அடிப்படையில் தான் மூட நம்பிக்கைகள் நிறைந்த படைப்பாக, பெண்ணுரிமைக்கு எதிரானதாகச் *சிலப்பதிகாரத்தை அர்த்தப் படுத்திக்* கொண்டார்.

சோதிட நம்பிக்கை என்பது தமிழ்நாட்டுப் பெண்களிடம் அழுத்தமாகப் பதிவாகி விட்ட ஒன்று. இந்நிலையில் நாவல் களில் வரும் பெண்மாந்தர்களில் சிலர் சோதிட எதிர்ப்பு உணர்வு உள்ளவர்களாக மு.வ. படைத்துக் காட்டுவது மிகுந்த கவனத் திற்கு உரியதாக அமைகின்றது.

அந்தக் காலத்தில் எனக்கு ஜாதகத்தில் ஏற்பட்ட வெறுப்புத் தான் என் வாழ்க்கையின் போக்கே மாறுவதற்குக் காரணம். அதை வெறுத்த வெறுப்பால், பழைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் எல்லாவற்றையும் வெறுக்கத் தொடங்கினேன். பழமையில் நல்லவற்றையும் வெறுக்கத் தொடங்கினேன். புதுமையில் எல்லாவற்றையும் கண்மூடி ஏற்றுக்கொண்டேன். பழமையைப் போற்றுகின்றவர்களைக் கண்டாலும் பிடிக்காமற் போயிற்று. புதுமையின் பெயரால் எந்தத் தீமையைச் சொன்னாலும் என் மனம் ஏற்றுக் கொண்டது. நல்வினை, தீவினை, அறம், நீதி எல்லாவற்றையும் கேலி செய்து பேசும் பெண்களே எனக்கு நெருங்கிய தோழிகளாகி விட்டார்கள். ஜாதகத்தை வெறுத்த

வெறுப்பில் தொடங்கிய அந்தப் போக்கு, இப்படிப் பழைய மூடநம்பிக்கையைவிடக் கண்மூடித்தனமான புதிய ஆடம்பர வாழ்க்கைக்குக் கொண்டு போய்விட்டது (கரி. ப. 214).

என்று *கரித்துண்டு* எனும் நாவலில் பெண்கதைமாந்தர் ஒருவரைப் பேசவைக்கின்றார்.

அதிர்ஷ்டம், பாவம் - புண்ணியம், தலைவிதி, நேரம் பார்த்தல், நாள் பார்த்தல், தோசம் பார்த்தல் என்பனவற்றிலும் மு.வ. விற்கு உடன்பாடு இல்லை. இதனை, *நெஞ்சில் ஒரு முள், வாடாமலர், மண் குடிசை, அந்தநாள், மலர்விழி* முதலான படைப்புகளில் இடம்பெற்றுள்ள 'எள்ளல் தொனி' வழி அறியலாம். ஐன்ஸ்டீன் இராகுகாலத்தில் படிக்க மாட்டாராம் (மண்.ப.129). நாள் பார்த்துச் செய்யப்பட்ட திருமணத்தின் மணப்பெண் 14 - ஆம் நாளில் விதவையாகிப் போனாளாம் (அந். ப. 114). சம்பளம் வாங்கிய ஒருவர் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கும்பிட்டு ஓர் இரவு கழித்து மறுநாள் வெள்ளிக் கிழமையாக இருந்தால் எடுக்காமலிருந்து, அடுத்தநாள் இராகு காலம் இல்லாத நேரத்தில் செலவு செய்யத் தொடங்கும் படித்துப் பட்டம் பெற்ற விஞ்ஞானியை (மண்.ப.129) மற்றவர்கள் மாற்றமுயற்சி மேற்கொள்வதாகவும் மு.வ. படைத்துள்ளார்.

சாத்திரம் பார்க்கும் பழக்கத்திலும் மு.வ.விற்கு உடன் பாடில்லை. காலையில் எழுந்ததும் தெருக்கதவைத் திறக்காமல் தோட்டத்துக் கதவைத் திறக்கக் கூடாது என்று சாத்திரம் பேசும் கதை மாந்தரைப் பார்த்து மற்றொரு கதைமாந்தர், திருக்குறளிலோ, நாலடியாரிலோ, அவ்வை பாட்டிலோ இல்லாத சாஸ்திரம் உன்னுடைய சிந்தனைக்கு மட்டும் எப்படி வந்தது (மல. ப. 118) என்று வினவுகிறார். கதைகளில் மட்டுமின்றித் தம் சொந்த வாழ்விலும் எதற்கு முதன்மை அளிக்க வேண்டும் என்பதில் மு.வ.விடம் தெளிவு இருந்துள்ளது. பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் ஒருவர் இறந்தபோது மு.வ. உள்ளிட்ட ஆசிரியர்கள் இரங்கல் தெரிவிக்கச் சென்று திரும்புகின்றனர். பள்ளிக்கு வந்து விடுகிறார் மு.வ.. சாவுவீட்டிலிருந்து வீட்டிற்குச் சென்று உடையை மட்டும் மாற்றிக்கொண்டு வந்துவிட்டதை அறிந்த அறிவியல் ஆசிரியர் ராமாராவ், மு.வ.விடம் குளிக்காமல் வந்தது தீட்டு என்று குறிப்பிடுகின்றார். அதற்கு மு.வ. உடலில் மூளையில் எங்கு ஒட்டிக் கொண்டிருக்கிறது தீட்டு என்று

கேட்கின்றார் (ரகுநாயகன்,பக்.24-25). அதாவது மு.வ.வைப் பொறுத்தவரையில் சாஸ்திரங்களா? கடமை உணர்வா? என்ற போராட்டத்தில் கடமை உணர்விற்கே முன்னுரிமை அளித்துள்ளார்.

சமூகத்தில் நிலவும் மூடப் பழக்கவழக்கங்கள் எல்லாம் மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே பின்னிக் கொண்ட வளைகள் (குழ. ப. 40) என்று குறிப்பிடும் மு.வ. தம் சொந்த வாழ்க்கையிலும் மூடப்பழக்க வழக்கங்களைத் தவிர்த்து வந்துள்ளார். மு.வ. வித்துவான் இளநிலை தேர்ச்சி பெற்றதன் பின்னர் முதுநிலைத் தேர்வுக்காகக் கட்டணம் செலுத்தப் புறப்பட்ட நேரம் இராகுகாலமாக அமைந்திருந்தது. மேலும் வீட்டை விட்டு வீதிக்கு வந்ததும் முடிதிருத்தும் தொழிலாளி எதிரே வருகின்றார். இவற்றைக் கவனித்த மு.வ.வின் உறவினர், சற்று நேரம் கழித்தபின் செல்லுமாறு சொல்லுகின்றனர். ஆனால், மு.வ. மறுத்துவிடுகின்றார். 'என்னுடைய முயற்சியில் குறையில்லை என்றால் நான் தேர்ச்சி பெறுவது உறுதி. நான் தேர்ச்சி பெறாமல் போவேனேயானால் அதற்கு என்னுடைய காரணமே தவிர மற்றவர்கள் பொறுப்பாகமாட்டார்கள்' என்று சொல்லி விட்டுச் சென்று விடுகின்றார் (ரகுநாயகன், ப.150). இவ்வாறு மறுத்ததற்கு மு.வ.வின் அறிவு மனமே அடிப்படை என்பது சொல்லாமல் விளங்கும். *கி.பி. 2000* என்ற அவர்தம் நூலில் (ப.61) கீழ்வரும் செய்தி பதிவாகியுள்ளது.

> *பழங்காலத்தில் பூனைக்கு மனிதர்களைவிட மிகுதியான வல்லமை இருந்தது. மக்களின் வேலைகளைக் கெடுத்து விடக் கூடிய வல்லமை அதற்கு இருந்தது. அதனால் அந்தக் காலத்து மக்கள் பூனைகுறுக்கே வந்தால் மிகவும் கவலைப்பட்டார்கள்; தொடங்கின வேலைகளை விட்டு விட்டார்கள். இந்தக் காலத்தில் பூனைக்கு அந்த வல்லமை இல்லை.*

வேறு ஒரு நூலில் ஊருக்குத் தீங்கு செய்த குரங்குகளைச் கொல்வது தொடர்பாக மக்களிடம் நிலவிய மூடநம்பிக்கையைப் பொய்மையாக்கிய சூழலைப் பதிவு செய்துள்ளார். 'குரங்குகளைச் சுட்டுக் கொன்ற ஊரில் அம்மை நோய் பரவிற்று. இதற்குக் காரணம் குரங்குகளைச் சுட்டுக் கொன்றதுதான் என்ற கருத்தும் மக்களிடம் உருவாக்கப்பெற்றது. அப்பொழுது, அந்த ஊரில் இதற்கு முந்தைய ஆண்டுகளில் எவ்வளவு குடும்பங்களில் அம்மைநோய் வந்தது என்ற கணக்கை மனையகாரரிடம்

பெற்றுப் பார்த்ததில் முந்தைய ஆண்டுகளில் அம்மை நோய்க்கு ஆட்பட்டோர் மிகுதியானவர் என்பது தெரியவந்தது' (நண், பக்.88-90). அதாவது மு.வ.வைப் பொறுத்தவரையில் குரங்கு ஒரு விலங்கே தவிர அனுமன் தெய்வம் அன்று.

ஊழ் - எதிர்ப்பு

கடவுள் நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளும் மு.வ. ஊழ் நம்பிக்கையை ஏற்கவில்லை. உலக உயிர்கள் கடவுளால் படைக்கப் பெற்றவை எனப் பொதுப்படச் சுட்டும் மு.வ. இம்மை மறுமைக் கொள்கையில் உடன்பாடில்லாதவராகத் திகழ்கின்றார். மனிதர்களின் அறிவு, ஒழுக்க நிலைகளுக்கும் ஊழுக்கும் தொடர் பில்லை என்கிறார். பழைய தமிழ் இலக்கியங்கள் சுட்டும் ஊழ், பால் என்பவற்றிற்கும் புது விளக்கம் அளிக்கின்றார். 'ஒரு வினை நிகழ்ந்தால் அதற்கு ஒரு விளைவு உண்டு என்பது அறிவியல் உண்மை. அதனை நீ அறிவாய். ஒவ்வொரு வினையும் ஒவ்வொரு விளைவைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறது. இது ஒரு தொடர் நிகழ்ச்சி. இந் நிகழ்ச்சியை இலக்கியங்கள் ஊழ் என்று குறிக்கின்றன' (அற.ப.70) என்பது மு.வ. வின் ஊழ் தொடர்பான விளக்கம். மேலும், அறத்தின் ஆட்சி முறையைத்தான் ஊழ் என்று முன்னோர்கள் சுட்டியதாக விளக்குகின்றார். 'அறம் இயற்கையாவது போல ஊழும் இயற்கையின் சட்டமாகின்றது. இந்த ஊழ் வலிமையானது, வெல்ல முடியாதது' (அற. ப. 71) என்றெல்லாம் விளக்கமளித்துச் செல்லும் மு.வ. கால அடிப்படையில் ஊழை இரண்டாகப் பகுக்கின்றார். தனியே நின்று ஒத்த இருவர் செய்கின்ற போர் முறைபோன்றது அந்தக் காலத்து ஊழ்வினையின் விளைவு. கூட்டமாகக் கூடி நின்று பலர்செய்யும் போர் முறை போன்றது. இந்தக் காலத்து ஊழ். அதாவது இன்றைய நிலையில் ஒவ்வொருவரின் எண்ணத்திற்கும் செயலுக்கும் அவருடைய சூழல் காரணமாக அமைகின்றது. அதே போன்றே ஒருவர் அனுபவிக்கும் நன்மைக்கும் தீமைக்கும் உலகமே காரணமாக அமைகின்றது (அற.ப.75). இதேபோன்ற ஒப்பீட்டு முறை யிலான ஊழ் தொடர்பான விளக்கத்தை மற்றோர் இடத்திலும் மு.வ. முன் வைத்துள்ளார். அது வருமாறு :

> ***உங்கள் நம்பிக்கை சிறு பிள்ளைகளின் நம்பிக்கை போல் கண்மூடி நம்பிக்கை. நாம் தும்பியைப் பிடித்து வதைத்தால் மறுபிறவியில் நாம்***

தும்பியாகி, தும்பி மனிதனாகி நம்மைப் பிடித்து வதைக்கும் என்று நம்புகிறீர்கள். உங்கள் ஊழ்வினை தனியாள் களத்தே பாவமும் புண்ணியமும் அளந்து தரப்படும் என்பது. ஒருவன் கிணறு வெட்டும் இடத்தில் நீர் உப்பாக இருந்தால், அது அவன் செய்த பாவம் என்று சொல்லும் அளவில் உங்கள் ஊழ்வினை நின்று விடுகிறது. ஏழைகளை ஒதுக்கித் தள்ளவும், அறிவில்லாதவர்களை நசுக்கி அழிக்கவும் உங்கள் ஊழ்வினை பயன்படுகிறது. நான் சொல்வது அப்படி அல்ல. கிணறு வெட்டும் இந்த இடத்தில் நீர் உப்பாக உள்ளது என்றால் மக்கள் பல தலைமுறையாக இங்கே வாழ்ந்து அழுக்கு நீரை இந்த மண்ணில் ஊறவிட்டுக் கெடுத்து விட்டார்கள். அதனால் அந்தத் தீமையின் பயனை நாம் அனுபவிக் கிறோம் என்பது நான் சொல்லும் ஊழ்வினை. சுருட்டுக்கும் சுருட்டுப் பிடிப்பவனுக்குமே நீங்கள் உறவு காட்டுகிறீர்கள். அவனைச் சுற்றி உள்ளவர்களுக்கும் அந்தப் புகை பரவுகிறது என்று நான் சொல்கிறேன். சுற்று வட்டத்துக் காற்றை ஓரளவு கெடுத்து விடுகிறது என்று நான் சொல்கிறேன் (கய. பக். 213, 214).

ஊழ் தொடர்பான தம்முடைய கருத்தை விளக்குவதற்கு மு.வ. வேறு வகையான அணுகுமுறையையும் பயன்படுத்தி யுள்ளார். அறிவு நிலையிலும் ஒழுக்க நிலையிலும் ஒருவர் எவ்வாறு எப்படி உயரவேண்டும், திகழ வேண்டும் என்று எண்ணுகிறாரோ அவ்வாறே அந்நிலையை அடைந்துவிட முடிகின்றது. ஆனால், பொருளீட்ட விரும்புபவர்கள் தாம் விரும்பியவாறு பொருளீட்ட முடிவதில்லை. இந்த வேறுபாட்டின் அடிப்படையில் ஊழ்தொடர்பான தம் விளக்கத்தை விளக்க முனைந்துள்ளார் மு.வ.. அதாவது, அறிவு ஒழுக்கம் என்பவை எல்லாம் தனிமனிதர் தம்முடைய தனிப்பட்ட முயற்சியால் வளர்த்துக்கொள்ளத்தக்கனவாக அமைகின்றன என்கிறார். இது போன்று தனிமனித முயற்சிக்கு உட்பட்டதாகச் செல்வம் சேர்த்தல் அமையவில்லை என்று கருதும் மு.வ.வின் சிந்தனை வருமாறு :

உலகத்தில் இதுவரையில் அறிவுடையவராக விரும்பி முயன்றவர் அறிவு பெறாமலிருந்தது இல்லை; அடக்கம் உடையவராக வாழ முயன்றவர் அதைப் பெறாமற் போனதும் இல்லை; ஒழுக்கத்தைப் போற்றி வாழ முயன்றவர் விரும்பியவாறு அதைப் பெறத் தவறியதும் இல்லை; அவா அறுக்க வேண்டும் என்று உண்மையாக முயன்றவர் முயற்சியின் பயனைப் பெறாததும் இல்லை; இவ்வாறே மற்ற நற்பண்புகளை விரும்பிப் பாடுபட்டவர்கள் அவற்றை அடைந்து முன்னேறியிருக்கின்றார்கள். ஆனால், செல்வம்

பெறவேண்டும் என்று விரும்பிப் பாடுபட்ட எல்லோரும் செல்வம் பெறவில்லை. பாடுபட்டவர்களில் ஒரு சிலரே செல்வம் பெற்றிருக்கிறார்கள். பாடுபடாமல் செல்வத்தைப் பற்றிக் கனவு காணாமலிருந்த சிலரும் பெற்றிருக்கின்றார்கள். பெற்ற செல்வத்தை நுகர்தலும் இவ்வாறே, கருதியவாறு பொருள்களை நுகர வேண்டும் என்று விரும்பிய எல்லோரும் நுகர்வு பெறவில்லை; அவர்களுள் சிலரே பெற்றிருக்கின்றார்கள். பொருள் நுகர்வைப் பற்றி எண்ணாமல் வாழ்ந்தவர்கள் எதிர்பாராமல் பெற்று நுகரவும் முடிந்திருக்கிறது. ஆனால், அறிவு ஒழுக்கம் முதலிய துறைகளில் ஊழின் அமைப்புக்கு ஏற்றவாறே எல்லாம் நடத்தலையும், அக வாழ்க்கைத் துறைகளில் ஊழ் மக்களுக்கு உரிமை கொடுத்திருத் தலையும் காணலாம் (வாழ். பக். 412, 413).

கோவிலில் நிகழும் கொடுமைகளைச் சுட்டுதல்

கோவில் வழிபாட்டு முறையில் தாழ்த்தப்பட்டோர் புறக் கணிக்கப் பெறுவதையும் ஏழைகள் புறக்கணிக்கப் பெறுவதையும் தாய்மொழி புறக்கணிக்கப் பெறுவதையும் விமர்சனத்துக்கு உட்படுத்துகின்றார் மு.வ.. தவறான வழிமுறைகளில் பொருளீட்டு பவர்கள் எல்லாம் கோவில் 'திருப்பணிக்குப்' பொருள் உதவி செய்வதையும் மு.வ. ஏற்கவில்லை. 'கோயிலுக்குப் புதுமண்டபம் *கட்டக் கள்ளச் சாராயம்வழி கிடைத்த காசு பயன்படுத்தப் பெறுவதை நல்லது அல்லாக் காசு' (பழி.ப.23)* என்றே குறிப்பிடுகின்றார்.

கோவிலில் நிகழும் மூன்று வகையான கொடுமைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் கோவிலுக்குள் நிகழும் நாத்திகப் பழக்க வழக்கங்கள் என்றும் அவை பொல்லாதவை என்றும் அவற்றைச் சீர்திருத்துவது முதல் கடமை என்றும் மு.வ. குறிப்பிடுகின்றார். அவை வருமாறு :

1. பணமுடைய சாதிக்கும் பணமில்லாச் சாதிக்கும் கோவிலில் காட்டப் பெறும் வேறுபாடு மிகத் துன்ப மானது. வியாபாரத் தன்மை வாய்ந்தது. புதிய சாதி வேறுபாடாகக் கருதத்தக்கது.
2. கோயில் இந்திர சாலங்களோ புரட்டு வித்தைகளோ செய்வதற்கான இடம் அன்று. இதயம் கனிந்து பரம்பொருளை நினைந்து வழிபடும் இடம் அது.
3. இதயக் கனிவிற்குத் துணை செய்யாத பெரும்பாலா னோர்க்குப் பொருளும் விளங்காத தாய்மொழி அல்லாத

வடமொழியில் வழிபாடு செய்வது தன்னலப் போக்கிற் குரியதாகும்.

கோவிலுக்குப் போவது தொடர்பான சமூக மன உணர்வை மறுபரிசீலனைக்கு உட்படுத்துகின்றார். ஒரு குறிப்பிட்ட நாளில் ஊரெல்லாம் திரண்டு செல்வது ஒரு நெருக்கடியை உருவாக்கு வதாகக் கருதுகின்றார். இதனால் நீரும், காற்றும் தூய்மை கெட்டுக் காலரா முதலான தொற்று நோய்கள் ஏற்படுவதாகக் குறிக்கின்றார். இதனை,

> *ஒரே நாளில் இப்படிப் போய்க் குவியும் வழக்கத்தை விட்டு அவரவர்களுக்கு ஒய்வான நாட்களில் போய்க் கோவிலில் வழிபட்டு வரலாமே! கோயிலிலும் கூட்டம் குறையும், சுத்தமாகவும் இருக்கும். நெருக்கமில்லாமல் வம்பு தும்புகள் இல்லாமல் வழிபாடும் அமைதியாகச் செய்யலாம் (பழி. ப. 20).*

என்று விளக்குவதுடன் இதற்கு எதிர்நிலையாக ஒரு கருத்தை எழுப்பி அதற்கும் விடையளிக்கின்றார். ஏதேனும் மகத்துவம் இருப்பதாகக் கருதியதால் தான் ஒரே நாளில் போகும்படியான சூழலைப் பெரியோர்கள் உருவாக்கினார்கள். நல்லவர்களின் பாத தூசி பட்டால் நல்லது என்று கருதினார்கள் என்ற கருத்துகளைச் சொல்லி அவற்றைக் கீழ்வருமாறு மறுக்கவும் செய்கின்றார்.

> *பெரியவர்களை யார் முட்டாள் என்று சொன்னார்கள். ஒருவரும் சொல்லவில்லை. பெரியவர்கள் அந்தக் காலத்திற்கு ஏற்றபடி ஏற்பாடு செய்தார்கள். நாம் அதை இந்தக் காலத்திற்கு ஏற்றபடிச் சிறிது மாற்றிக் கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் இரயில் பஸ் முதலிய போக்குவரத்துகள் இல்லை. கட்டைமாட்டு வண்டியிலோ கால்நடையாகவோ போக வேண்டும்... நெடுந் தொலைவில் உள்ள கோயிலுக்குப் போகின்ற மக்கள், தனித் தனியே ஒவ்வொரு குடும்பமாகப் போனால் வழியெல்லாம் திருடு கொள்ளைப் பயமுண்டு. அவ்வாறு இல்லாமல் பல குடும்பம் சேர்ந்து போவதாக இருந்தால், துணை மிகுதியாகும்; பயம் குறையும் (பழி. ப. 21).*

கோவிலில் சாதி

தாழ்த்தப்பட்ட மக்களைக் கோவிலுக்குள் அனுமதித்தல் தொடர்பான அரசின் நிலைப்பாடு வெளிவந்ததும் சமூகத்தில் ஏற்பட்ட முணுமுணுப்புகளையும் அவை தொடர்பான தம் கருத்தியலையும் 'கண் போய்விடும்', 'கோயிலில் நாத்திகம்' எனும் இரு கட்டுரைகளில் விளக்கியுள்ளார். குறிப்பாகப் படித்த வர்க்கத்தினரும் பாமர வர்க்கத்தினரும் ஒரே வகையான முணு

முணுப்புகளை உடையவராகத் திகழ்ந்தாலும் இருவருக்கும் இடையே நிகழும் அடிப்படை வேறுபாட்டை மு.வ. சுட்டிக்காட்டியுள்ளார். விற்பனை வரியைக் கூட்டி யிருந்தால் கூட, வருமான வரியை உயர்த்தியிருந்தால் கூட ஆத்திரப்படாத மக்களில் சிலர் கோயில் நுழைவுக்காக ஆத்திரப்படுகின்றனர். தாழ்த்தப்பட்டோரின் கோயில் நுழைவு முயற்சியை மாசை அகற்ற முயன்ற முயற்சியாகக் குறிப்பிடுகின்றார். 'ஒப்புரவுக்கும் ஒழுக்கத்திற்கும் பெயர் பெற்ற சமுதாயத்தில் தீராமல் இருந்து வந்த நோயாகத் தீண்டாமையைக் குறிக்கின்றார். 'அநியாயம் தெய்வம் பொறுக்குமா? பறையரெல்லாம் கோயிலுக்குள் போனால் கண் அவிழ்ந்துபோய் விடும். 'மூன்று பேர் திருத்தணி கோயிலுக்குள் போனார்களாம்' திரும்பி வரும் பொழுது இரண்டு கண்களும் போய் தடவிக் கொண்டு வந்தார்களாம்' என்று அறியாமையில் மூழ்கிப் பேசும் இரண்டு கிழவிகளின் பேச்சுக்கும் படித்தவர்கள் 'நம் ஊரில் சேரியில் உள்ளவர்கள் பயந்தவர்கள் பக்தியோடு போயிருப்பார்கள். கடவுள் அவர்களை எல்லாம் ஒன்றும் செய்யவில்லை. மற்ற சாதியாரும் நாமும் சமமாகிவிட்டோம் என்ற அகங்காரத் தோடு யாராவது கோயிலுக்குள் போனால்தான் கண் போய்விடும்' என்று பேசுவதற்கும் வேறுபாடு உண்டு என்பது தான் மு.வ.வின் கருத்தாக உள்ளது.

கோவிலில் தமிழ்

கோவிலில் தமிழ் வழிபாட்டு மொழியாக இல்லாது போனதைக் கண்டும் மு.வ. வருத்தப்படுகின்றார். அவர் கருத்து வருமாறு:

> *கரவறியாமல் உழைத்துச் சமுதாயத்தைக் காத்த மக்களைத் தீண்டாதவர்களாக்கிய இதே மனப்பான்மை கோயில்களில் இன்னொரு வடிவில் இருந்துவருகிறது. அது என்ன? இந்த நாட்டு மக்கள் வீட்டிலும் வயலிலும் காட்டிலும் மேட்டிலும் வாழ்விலும் தாழ்விலும் என்றும் எங்கும் பேசி வரும் மொழி-இந்த நாட்டு மக்களில் சமுதாய உறவுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் காரணமாக இருந்து உதவிவரும் கண்போன்ற மொழி-மக்களின் தாய்மொழி கோயில்களில் தீண்டத் தகாததாக - நுழையத்தகாததாக இருந்து வருகிறது. ஆனால், இந்தக் கோவில்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது அந்த மொழியே (மொழி. ப. 121).*

மு.வ. சுட்டும் வழிபாட்டு முறைமை

பல்வேறு நிலைகளில் கடவுளையும் கடவுளை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் வெறுத்து ஒதுக்கும் மு.வ. கடவுள் வழிபாடு எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனையும் ஒரு முறைமைக்கு உட்படுத்தி வகைப்படுத்திக் காட்டுகின்றார். பல கடவுள் வழிபாட்டு முறையிலும் பல சமய வழிபாட்டு முறையிலும் உருவவழிபாட்டு முறையிலும் நம்பிக்கை இல்லாதவர் மு.வ.. பரம்பொருள் ஒன்றே எனும் கருத்தை முன்வைத்தாலும், 'கருத்தியல்' நிலைப்பட்ட ஒன்றையே கடவுளாகக் கற்பிக்கின்றார். கடவுளின் ஒழுங்கு முறை என்று ஒன்று இருக்கும். அதை அறநெறி என்று சொல்லலாம் (அல். ப. 111) என்று சுட்டும் மு.வ. மனிதர்கள் கூடிவாழ்வதற்கு என்று உருவாக்கப்பெற்ற நெறிகள் அதேநோக்கில் இயக்க வேண்டும் என்கிறார். அந்த நோக்கை விட்டு விலகுகையில்தான் சமய, சாதி வேறுபாடுகள் உருக்கொள்கின்றன (நெஞ். ப. 259) என்று சுட்டிக் காட்டுகின்றார். மேலும் தன்னல மற்றதாக, மற்றவர்களுக்கு உதவி செய்வதாக, அறிவியல் தன்மை வாய்ந்ததாக, நெகிழ்வுத்தன்மை உடையதாக, இந்தச் சமூகமே கடவுளின் குடும்பம் என்ற நிலை உடையதாக (வாடா. ப. 185, நெஞ். ப. 306, கரி. ப. 41. மண். ப. 240) அமைதல் வேண்டும் என்று குறிப்பிடுவதுடன், அது நாள்தோறும் வழிபடுவதற்கு ஏற்றதாகவும் அமைதல் வேண்டும் என்கிறார். காலையில் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பும் இரவில் கடமைகளை முடித்த பிறகும் அமைதியாக அமர்ந்து கண்மூடி மனத்தை ஒருமுகப்படுத்தி வழிபடல் வேண்டும் என்கிறார். எங்கெங்கு அன்பு உள்ளதோ, அறிவு ஒளிர்கின்றதோ, ஆற்றல் விளங்கு கின்றதோ அங்கெல்லாம் கடவுளின் சக்தி வெளிப்படுதலை உணர வேண்டும் என்று உருவமில்லா வழிபாட்டு முறையை வழிமொழிகின்றார். வழிபாட்டிற்கு முன்னர்ப் பாடல்களைப் பாடி உயர்ந்த - உணர்வுகளில் தோய வேண்டும் என்று குறிப்பிடுகின்றாரே தவிர எவ்வகையான சிறு சடங்கு முறையையும் பரிந்துரைக்கவில்லை. இராமலிங்க அடிகளின் 'எத்தனையும் பேத முறாது' எனும் பாடலும் தாயுமானவரின் பொதுமைத் தன்மை வாய்ந்த சில கண்ணிகளும் மு.வ.விற்கு விருப்பமாக உள்ளதனையும் மற்றவர்க்கு அவற்றை அவர் பரிந்துரைப்பதையும் அவர்தம் எழுத்துகளின் வழி அறிய

முடிகின்றது. வேறு பக்தி இலக்கியங்களையோ *கம்பராமாயணம்* போன்ற கடவுள் நம்பிக்கை சார்ந்த படைப்புகளையோ வழிபாட்டு முறைமைக்கு உரியனவாகப் பரிந்துரைக்கவில்லை. அதாவது தம் கால வழக்கில் இருந்த சைவ, வைணவ, கிறித்தவ, இஸ்லாம் எனும் எந்தவகையான சாயலும் இடம் பெற்று விடாத ஒரு வகையான, எல்லோர்க்கும் ஏற்புடைத்தான, பொதுவான வழி பாட்டு முறையைத்தான் மு.வ. பரிந்துரைக்கின்றார். தாயுமானவரின் இறைநெறியை மட்டும் அறிவியல் முறைப்படி அமைந்த ஒரு சமய நெறி, உலகப் பொதுவான சமய நெறி *(Scientific Religion Universal Religion)* என்று தம் கட்டுரை ஒன்றில் (தாயு.ப.13) அடையாளப் படுத்துகின்றார். அன்பர்களுக்குத் தொண்டு செய்யும் அறம் கிடைப்பின் உலக வாழ்க்கை இனிதாக அமையும் என்ற தாயுமானவரின் கருத்தை எடுத்துக்காட்டி அவர்தம் இறைக் கொள்கையைக் கீழ்வருமாறு சுட்டுகின்றார் :

> *அவருடைய கல்வி அறிவின் பயனாக உயர்ந்த எல்லையைக் கண்ட காரணத்தால், அந்தக் கல்வியின் வெறி தணிந்த காரணத்தால், அவருக்கு ஒரு சார்பும் இல்லாமல் நடுநிலையில் நின்று உண்மை நாடும் நாட்டம் அமைந்து விட்டது. ஆகவே, தாம் பிறந்து வளர்ந்து சைவ சமயத்தில் நின்று கொண்டே, உலகச் சமயங்களை எல்லாம் பார்த்துப் பிற மதங்களை எல்லாம் பொதுமையுடன் உணர்ந்து, 'எல்லாச் சமயங்களுக்கும் அப்பாற்பட்டவன் இறைவன்' என்ற தெளிவைப் பெற முடிந்தது (தாயு. ப. 9).*

தாயுமானவரைப் போன்றே ஏசு, புத்தர், திருநாவுக்கரசர் முதலானவர்களையும் மு.வ. உயர்வாகக் கருதியுள்ளார். 'அறத்தின் நாயகர்கள்' என்று தம் மதிப்பீட்டையும் அவர்கள் தொடர்பாகத் தெரியப்படுத்தி உள்ளார் (அல். ப. 131). மு.வ. தாம் பரிந்துரைக்கும் வழிபாட்டு முறையில் சடங்குகளைத் தவிர்ப்பது மட்டுமன்றி, இறுக்கத் தன்மையையும் தவிர்க்கின்றார். மனிதர்கள் தங்களின் சூழலுக்கு ஏற்பப் பின்பற்றத் தக்க நெகிழ்வுத்தன்மை வாய்ந்த 5 வகையான வழிபாட்டு முறை களைப் பரிந்துரைத்துள்ளார். அவை வருமாறு:

வகை 1 : பாட்டுப்பாடி உணர்வது.

வகை 2 : புத்தர், இயேசு முதலான சான்றோர்களின் உருவங் களை மனக்கண்ணின் முன் வருவித்து அவர்தம் உயர்ந்த பண்புகளையும் அறிவுரைகளையும் நினைத்துப் போற்றுதல்.

வகை 3 : காலங்கள், இடங்கள், நிகழ்ச்சிகள், அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய ஆறனையும் ஒவ்வொன்றாக எண்ணிப்

பார்த்து ஆங்காங்கே கடவுளின் ஆட்சி இருப்பதை உணர்தல்.

வகை 4 : உலகத்தை மனத்துக்குள் வருவிக்காமல், மனத்தை உலகத்தில் விட்டு ஆங்காங்கே கடவுள் ஆட்சி இருப்பதை உணர வேண்டும், அறிதல், எண்ணுதல், நினைத்தல் என்ற மூன்றில் ஒன்றால் எதையும் உணர வேண்டும்.

வகை 5 : மேற்சுட்டப் பெற்றமை கண்ணை மூடிக்கொண்டு ஓர் இடத்திலிருந்து செய்பவை. இவற்றுக்கு மாறாகக் கண்ணை மூடாமல் தொழில் செய்து கொண்டு உலகில் எல்லாவற்றிலும் கடவுளின் ஆட்சி இருப்பதாக உணர்தல்.

கடவுள் வழிபாட்டால் பெறத்தக்க நன்மைகள் பற்றியும் மு.வ. சிந்தித்துப் பார்த்து உள்ளார். முன்பே குறிப்பிட்டதைப் போல 'வரம் தரும்' கடவுள் நிலையில் மு.வ.விற்கு உடன்பாடு இல்லை. எனினும், வழிபாட்டால் சில நன்மைகள் உருவாகும் என்று கருதியுள்ளார். மனத்துக்கு வலிமை ஏற்படும்; வாழ்க்கை யின் வீணான விருப்பு வெறுப்பு குறையும்; வாழ்க்கை எளிதாக அமையும்; அறிவு ஆற்றல் பெருகும் என்றெல்லாம் வழிபாட்டு முறையால் விளையும் நன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டு கின்றார். மு.வ.வின் கடவுள் வழிபாட்டு முறை தொடர்பாக அறிந்துகொள்ள முத்தான பதிவு ஒன்று வருமாறு:

கடவுளின் பெயரை வாய்மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாலும் பாடிக் கொண்டிருந்தாலும் ஈடேற முடியாது என்றும், எத்தனையோ கிராமபோன் பெட்டிகள் கடவுளைப் பாடுவது போல் அதுவும் பயன் இல்லாமல் முடியும் என்றும், கடவுள் கோவிலில் மட்டும் இருக்கிறார் என்று நம்பினால் போதாது என்றும், கடவுள் எங்கும் எல்லோரிடத்திலும் எல்லா ஏழைகளிடத்திலும் இருப்பதாக நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும், உயிர்த்தொண்டை மறந்து விட்டுக் கோவிலிலே அல்லது கடவுளின் படத்தின் எதிரே நின்று கொண்டு அவரைப் புகழ்ந்து ஏத்துவது பெற்றோரின் வயிற்றை மறந்துவிட்டு அவர்களின் படத்துக்கு மட்டும், மாலை சூட்டித் 'தாயே தந்தையே' என்று ஏத்துவது போல்தான் என்றும், நாட்டை ஆளும் தலைவன் தன் எதிரே குடிமக்கள் வந்து தன்னைப் புகழ்ந்துகொண்டிருப்பதை விரும்பாமல் தன் சட்டப்படி நல்ல முறையில் கடமைகளைச் செய்து வாழ்வதையே விரும்புகிறான் என்றும், கடவுளும் அதுபோலவே தன்னை எந்நேரமும் புகழ்ந்து பாடுவதை விரும்புவதில்லை என்றும், தான் வகுத்த அறநெறியில்

வாழ்ந்து மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்தித் தொண்டு செய்வதையே கடவுள் ஏற்றுக் கொள்வார் என்றும், படமாடும் கோயில் பரமனுக்குத் தொண்டு செய்வதைவிட நடமாடும் கோயில் நம்பர்க்குத் தொண்டு செய்வது சிறந்தது என்று திருமூலனார் கூறினார் என்றும், கோயில் வழிபாடு மனத்தைப் பண்படுத்த ஒரு படியே என்றும், அதன் பயனை உயிர்த் தொண்டிலும் அன்புவாழ்விலுமே காண வேண்டும் என்றும்... (பெற். ப. 81).

மு.வ.வின் நம்பிக்கைக்கான அடிப்படை

காந்தியடிகள், திரு.வி.க., இராமலிங்க அடிகள், விவேகானந்தர் பற்றித் தம் எழுத்துகளில் பல்வேறு இடங்களில் மு.வ. பதிவு செய்துள்ளார். காந்தி, திரு. வி. க. தொடர்பாகத் தனி எழுத்துரை களையும் உருவாக்கியுள்ளார். இதுபோன்று பெரியாரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. சாதி தொடர்பான கருத்தியலாக்கத்தில்தான் பெரியாரைப் பற்றிப் பேசுகின்றார்; சமயம் தொடர்பான கருத்தியலாக்கத்தில் குறிப்பிடவில்லை. எனவே, பெரியாரிலிருந்து வேறுபட்டு, காந்தி, திரு. வி. க. ஆகியோரின் கடவுள் கொள்கை மு.வ.க்கு ஏற்புடைத்து. அதுவே அவர்தம் படைப்புகளில் இடம் பெற்றுள்ளது என்று கருதும் வாய்ப்பு உருவாகின்றது. ஆனால், இது உண்மையன்று.

வருணாசிரமத்தையும் இராம பஜனையையும் அகிம்சையை யும் உள்ளடக்கிய இந்து மதத் தன்மை வாய்ந்ததுதான் காந்தியின் கடவுள் கொள்கை. தொடக்கத்தில் நல்ல சைவப் பற்றாளராகவும் காலப்போக்கில் சன்மார்க்க வழிப்பட்டவராகவும் மாற்றம் பெற்ற நிலையில் உருவானது தான் திரு. வி. க. வின் கடவுள் கொள்கை. சன்மார்க்கக் கொள்கையில் சாதிக்கும் உருவ வழிபாட்டிற்கும் கண்மூடித் தனமான சடங்குகளுக்கும் இடம் இல்லை. எனினும், திருக்குறள் அடிப்படையிலான அறநெறியைத்தான், அறநெறி வாழ்வியலைத்தான் மு.வ. பெரிதும் விரும்பு கின்றார். மு.வ. சுட்டும் ஐந்துவகையான வழிபாட்டு முறைகளில் ஐந்தாவதாக அமையும் வழிபாட்டு முறைதான் அவர்க்கு உடன்பாடானதாக அமைகின்றது. எதிலும் இறுக்கத்தை விட நெகிழ்வுத் தன்மை தேவை எனும் கருத்துடையவர் மு.வ. பௌத்தம் அது பிறந்த மண்ணில் புறக்கணிக்கப்பெற்று, பிற நாடுகளில் ஏற்றுப் போற்றப் பெற்றதற்கு அங்கிருந்த நெகிழ்வுத் தன்மையே அடிப்படை (நெஞ். ப. 62) என்பார். இதுபோன்று பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளில் அவரவர்க்கு

உடன்பாடானதை அவர்களின் இயல்பு, சூழலுக்கு ஏற்பப் பின்பற்றுவதில் தவறு இல்லை. எனினும் அது திருக்குறள் வழிப்பட்ட அறநெறித் தன்மையை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல் வேண்டும் எனும் கருத்துடையவராக மு.வ. திகழ்கின்றார். மு.வ. போன்றே வள்ளுவரின் அறநெறிக் கருத்துகளில் உடன்பாடு உடையவர்தான் பெரியார். 'மக்களின் சவுகரியத்திற்கு ஏற்றபடி மதக்கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும் மதக் கொள்கைகளைத் திருத்தி அமைப்பதுமே மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய செய்கைகளாகும்' (குடி.*6.11.1932*) என்று குறிப்பிடவும் செய்கின்றார் பெரியார்.

மு.வ., பெரியார் என இருவருமே சாதியத்தை மறுதலித்தாலும் மறுதலிக்கும் முறைகளில் வேறுபடுகின்றனர். பெரியாரிடம் உள்ள 'சாதியத்திற்கு அடிப்படையாக அமையும் கடவுள் கொள்கையை 'ஒழித்தே தீர வேண்டும்' என்ற வேகம் மு.வ. விடம் இல்லை. மு.வ. மக்களிடம் நிலவும் கடவுள் நம்பிக்கையைச் செப்பனிட இயலும் என்ற கருத்துடையவராக இருக்கின்றார். இந்நிலைப்பாட்டில் பெரியாருக்கு உடன்பாடு இல்லை. கிறித்தவ மதத்தில் சீர்திருத்தங்கள் வேண்டுமென்கிறவர், இஸ்லாமிய மதத்திலும் சிற்சில சீர்திருத்தங்கள் வேண்டும் என்கிறவர் இந்து மதத்தை மட்டும் அடியோடு ஒழித்தே தீர வேண்டும் என்கிறார். பெரியாரை இத்தகு முடிவுக்கு அழைத்துச் சென்றது அவரின் வரலாற்று நிலையிலான அறிவுதான் எனலாம். இராமாநுஜர், சைதன்னியர், இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர் முதலானவர்கள் சாதி வேற்றுமையை ஒழிக்கவும், பெண்களின் அடிமை நிலையை அகற்றவும் எவ்வளவோ முயற்சி செய்தும் வெற்றிகிட்டாததைப் (குடி. *21.8.1932*) பெரியார் நன்கு அறிந்து இருந்தார். இதனால் இந்துமதச் சீர்திருத்தம் என்பதில் பெரியாருக்கு முற்றிலும் உடன்பாடு இல்லாமல் போயிற்று.

சமூகத்தில் நிலவும் மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால் அவற்றிற்கு அடிப்படையாக இருப்பவை கடவுளும், இந்துமதமும். இவை ஒழிக்கப் பெற்றே தீர வேண்டும் எனும் கருத்துடையவர் பெரியார். மு.வ.வைப் பொறுத்த வரையில் சமூகத்தில் நிலவும் மூடப்பழக்க வழக்கங்களுக்கு நோயும் வறுமையும்தாம் காரணங்களாகக் கற்பிக்கப் பெறுகின்றன.

'பொருளாதாரப் போராட்டம் ஒழிந்த அன்றைக்கே முக்கால் பகுதி மூடநம்பிக்கைகள் அழிந்து விட்டன' என்கிறார். 'நோயற்ற வாழ்வு வாய்த்தால் ஏனைய கால் பகுதி மூடநம்பிக்கையும் அழிந்துவிடும்' (கி.பி. பக். 103-104) என்கிறார். அதேநேரத்தில் பணத்திற்காக, செல்வச் சேர்க்கைக்காகக் கடவுளை வழிபடுவதை மூட நம்பிக்கையாகவே குறிப்பிடும் மு.வ., உழைப்பின் பயனில் நம்பிக்கை இழக்கும் போதுதான் இம் மூடநம்பிக்கையும் செயல்வடிவம் பெறுவதாகச் சுட்டுகின்றார். எனவே, உழைப்பின் வழி பொருளீட்டுதலில் மக்களை ஈடுபடச் செய்வதன் வழி மூடநம்பிக்கைகளை ஒழித்துவிடலாம் என்று மு.வ. கருதுவதாகக் கொள்ளலாம். இதனால் தான் ஊழ் பற்றிப் பேசுகையில் முற்பிறப்புக் கொள்கைக்கு மாறாக, ஒரு பிறப்பிற்குள்ளே நிகழும் செயல் முறையைச் சுட்டிக் காட்டுகின்றார். முற்பகல் செய்யின் பிற்பகல் தானே விளையும் எனும் *திருக்குறள்வழி* சிந்திக்கின்றார். 'நல்லதாக விதைத்தால் எதிர்காலத்தில் நன்மையை அறுவடை செய்ய முடியும்' (கய. ப. 215) எனும் நம்பிக்கையை உருவாக்குகின்றார். 'நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கையின் அடிப்படையில்தான் இன்றைய வாழ்க்கை அமைகின்றது. இன்றைய வாழ்க்கையில் முளையும் முளையே நாளைய வாழ்வாக அமைகின்றது. நெடுங்காலத்திற்கு முன் இட்ட வித்தே இன்றைய வாழ்க்கையாகிய மரம். இந்த மரத்தின் கனிகளும் காய்களுமே நாளைய வாழ்விற்கான வித்துகள்' (அற. ப. 72) என்று மு.வ. விளக்கிச் செல்வதற் கெல்லாம் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்துப் பார்த்ததே என்பது சொல்லாமல் விளங்கும்.

சமூகத்தில் ஒழுக்கமின்மை நிலவுவதற்குக் காரணம் கடவுள் வழிபாடுதான் என்று குறிப்பிடுவதுடன், சமயத் துறவிகளின் ஒழுக்க நிலையும் புராணங்கள் சொல்லும் கடவுள்களின் ஒழுக்க நிலையும் ஏற்கத் தக்கவையா என்று பல்வேறு இடங்களில் வினா எழுப்புகின்றார் பெரியார். ஒரு கட்டத்தில் இந்து சமயத்தவர்களாலும் இஸ்லாமிய சமயத்தவர்களாலும் பெண்கள் கற்பழிக்கப் பெற்றதைப் புள்ளி விவரத்துடன் எடுத்துக் காட்டுகின்றார் (பகுத். 9.9.1934). அதாவது பெரியாரைப் பொறுத்த வரையில் கடவுள் நம்பிக்கையே ஒழுக்கத்தைச் சிதைப்பதாகக் கருத, மு.வ. கடவுள் நம்பிக்கைவழி ஒழுக்கத்தை வளர்த்

தெடுக்க இயலும் என்று கருதுகின்றார் (நண். ப. 96). ஆனால், மு.வ. சுட்டும் கடவுள் அன்றைய வழக்கில் இருந்த சராசரி வழிபாட்டு நிலையில் இருந்த கடவுள் அன்று; பெரியார் ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கடவுள் நம்பிக்கை அன்று. திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட அறநெறி வாழ்க்கை முறையைத்தான் கடவுள் என்று மு.வ. குறிப்பிடுவதைக் கவனத்தில் கொண்டால், தம் கால வழிபாட்டு முறைகளில் பல கடவுள் முறைகளில் மு.வ.விற்கு உடன்பாடு இல்லை என்பதனைக் கவனத்தில் கொண்டால், மு.வ.வின் கடவுள் கொள்கை பெரியாரின் கடவுள் கொள்கையில் இருந்து பெரிதும் வேறுபடாததை உணரலாம்.

5

கல்வி

நம்மால் உடனே மாற்றியமைக்க முடியாமற் போகலாம். மாற்றியமைக்க வேண்டும் என்று எண்ணுவது நம்மால் ஆகும். எண்ணிய எண்ணத்தைப் பிறரிடம் பரப்ப நம்மால் ஆகும். திட்பமாக எண்ணிப் பிறக்கும் உணர்த்த முடிந்தால் அதுவே பெரிதுதான்; இன்று எண்ணத்தை வெற்றியுடன் பரப்பிவிட்டால், நாளை அது எப்படியும் செயலாக உருக்கொள்வது திண்ணம். விதைத்த விதை முளைக்கத் தவறினாலும் தவறும்; பெரும்பாலோர் எண்ணும் எண்ணம் செயல் ஆகத் தவறாது. நான் உண்மையாக நம்புகிறேன் (நண். ப. 35).

அறத்துப்பால் கூறும் அறிவுரைகளின் உண்மையைத் தெளிந்து வாழ்க்கையை ஆய்ந்து தெளிந்து நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்தத் தெளிவான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (நண். ப. 46).

பெருமிதத்துடன் குறிப்பிடுகிறேன். இப்படிப்பட்ட தெளிவும் நம்பிக்கையும் பெறுவதற்குக் கல்லூரிப் படிப்பு உதவக் கூடாதா என்று என் மனம் ஏங்குகிறது (நண். 46).

தந்தை பெரியாரும் மு.வ.வும் ஒத்த நோக்கு நிலையில் நின்று சீர்திருத்தம் மேற்கொள்ளும் துறையாகக் கல்வித் துறை அமைகின்றது. அவர்கள் காலத்தில் தமிழகத்தில் நடைமுறையில் இருந்த கல்விமுறையில் அடியோடு மாற்றம் வேண்டும் என்று சிந்தித்து உள்ளனர். பாடத்திட்டம், தேர்வு முறை, கற்பித்தல் முறை ஆகிய மூன்று நிலைகளிலும் மாற்றங்கள் தேவை என்று கருதி மாற்றங்களுக்கு ஏற்ற வழிமுறைகளைப் பதிவு செய்துள்ளனர்.

தந்தை பெரியார் மனிதனுக்கு அறிவு அளிப்பதால் சுய மரியாதைச் சிந்தனையை உருவாக்கிவிட இயலும் என்று

கருதுகின்றார். சாதி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் அடிபட்டுப் போகும் என்கிறார். இதனால்தான் கல்வியினுடைய குறிக்கோள் பணம் சம்பாதிப்பதாக மட்டுமல்லாமல் அறிவை வளர்ப்பதாகவும் மக்களின் இழிநிலையைப் போக்குவதாகவும் முட்டாள் தனத்தையும் மூடநம்பிக்கையையும் ஒழிப்பதாகவும் அமைதல் வேண்டும் (விடுத. 25.03.1961) என்று வலியுறுத்து கின்றார். மனிதனுக்குச் சோறு, உடை இல்லாதபோது அவற்றை வழங்குவது போல் கல்வி இல்லாதவர்களுக்கும் சலுகைவழி அதனை வழங்க வேண்டும் என்கிறார். ஆறு மாதக் காலத்திற்குள் கையெழுத்துப் போடத் தெரியாவிட்டால் அவருக்கு மூன்றுமாதக் காலம் தண்டனை வழங்கப்பெறும் என்று சட்டம் கொண்டு வருவதால் மக்களிடம் கல்வி தொடர்பான ஒரு விழிப்புணர்வை உருவாக்க இயலும் என்று கருதுகின்றார். நான்காம் வகுப்புவரை பயின்றவர்க்குத் தொடர்ந்து தொழிற்கல்வி அளிக்கப் பெற வேண்டும். கார் ஓட்டுவது, தச்சு வேலை, எழுத்துக் கோர்ப்பது, இயந்திரங் களைக் கையாள்வது முதலான தொழிற்பயிற்சிகளை 12ஆம் வயது முதற்கொண்டே வழங்கலாம் எனப் பரிந்துரைக்கிறார். தொழிற்கல்வியும் கலைக் கல்வியும் தனித் தனியாகப் பிரிந்திருக் கின்ற அவல நிலை மாற்றப் பெற்று அயல்நாடுகளில் உள்ளது போன்று இரண்டும் ஒன்றாக இணைக்கப் பெறுதல் வேண்டும் (விடுத. 16.12.1968) என்கிறார். இந் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு ஏற்பப் பகுத்தறிவுச் சிந்தனைகளுக்கு எதிரான கருத்துக் களை வளர்க்கின்ற புராணத் தன்மை வாய்ந்த நூல்களைக் கற்பிக்கக் கூடாது. ஒழுக்கத்தை, காரண காரியச் சிந்தனைகளை வளர்க்கின்ற கருத்துகளையே கற்பிக்க வேண்டும் என்பதனைப் பல இடங்களில் வலியுறுத்திச் சொல்லுகின்றார். கல்வியால் மாணவன் அறிவைப் பெற இயலாவிட்டாலும், தேர்வில் தேர்ச்சி பெற இயலாவிட்டாலும் ஒழுக்கத்தை மட்டுமாவது பெறுகின்ற சூழல் கல்வித் துறையில் உருவாக வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகத் தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார். உயர் கல்வியை இலவசமாக வழங்குவதில் பெரியாருக்கு உடன்பாடில்லை. அடிப்படைக் கல்வியை இலவசமாக வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்தவும் செய்கின்றார். 'பொதுப் படிப்பிற்கும் சிறப்புப் படிப்பிற்கும் என மாணவர்கள் ஏறக்குறைய 21 ஆண்டுகள் செலவிடுகின்ற நிலை மாற்றப்பெறவேண்டும்' என்கிறார் (விடுத.13.03.1951). ஓராண்டுக்கு ஒருமுறை எனும் தேர்வு முறையை மாற்றி 6

மாதத்திற்கு ஒருமுறை என அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் மனப்பாடம் செய்து அப்படியே எழுதுவதற்கு அதிக மதிப்பெண் அளிக்கின்ற முறையும், இந்தத் திறமைவழி திறமை பெறாதவர், தேர்ச்சி அடையாதவர் என்று குறிக்கும் முறையும் மாற்றப்படவேண்டும். திறமைக்கும் மதிப்பெண்ணிற்கும் இடையேயுள்ள இடைவெளி நீக்கப் பெற வேண்டும். எந்தப் பணிக்குச் செல்ல விரும்பு கின்றாரோ அதற்கேற்ற திறமை அவரிடம் இருக்கின்றதா என்பதைச் சோதித்துப் பார்த்தாலே போதும். எல்லா நிலைகளிலுமான சோதனைத் தேர்வு எழுதும் முறை தவிர்க்கப் பெறவேண்டும் என்றெல்லாம் குறிப்பிடும் பெரியார், குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்க்கே கற்கும் வாய்ப்பு அளிக்கப்பெற வேண்டும் எனக் கூறுகின்றார்.

இத்தகைய தம்முடைய கருத்துகளை நடைமுறைப் படுத்துவதற்கேற்பக் கற்பித்தல் துறையிலும் தேவைப்படும் மாற்றங் களைச் சுட்டிக்காட்டுகின்றார். ஆசிரியர்கள் சுயமரியாதையைக் கற்பிப்பதுடன் ஆண்மை, சமத்துவம், அன்புகாட்டுதல், நாட்டுப் பற்று என்பன வற்றையும் கற்பிப்பவராக (குடி.*01.05.1927*) இருத்தல் வேண்டும் என்கிறார். மாணவர்களிடம் மனஉறுதிப் பாட்டை உருவாக்குவதும் துணிவையும் ஊக்கத்தையும் உருவாக்கு வதும் ஆய்வுத்திறனை உருவாக்குவதும் ஆசிரியரின் கடமை எனச் சுட்டுகின்றார் (விடுத. *03.12.1956*). தொழிற்கல்வி கற்பித்தலில் அந்தந்தத் தொழிலில் நிபுணத்துவம் பெற்றவர்களை ஈடுபடுத்த வேண்டும் (விடுத. *02.01.1973*) என்று குறிப்பிடும் பெரியார் நூலகப் பயன்பாட்டுவழி மாணவர்கள் பெருமளவிலான அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள முடியும், வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கிறார். சுருங்கச் சொல்வதென்றால் மாணவர் களிடம் ஒழுக்கம், நாணயம், நேர்மை, மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் செயல்களில் ஈடுபடுதல், பிறருக்கு ஊறுசெய்யா மலிருத்தல் என்பனவற்றுடன் உள்ள உறுதியையும் ஊக்கத்தையும் பொருளீட்டும் திறனையும் உடையவராக வளர்வதற்கேற்பக் கல்வித்துறையின் அனைத்துக் கூறுகளும் மாற்றி அமைக்கப் பெற வேண்டும் என்பது பெரியாரின் கருத்து எனலாம்.

பெரியாரின் இக்கல்விச் சிந்தனையை மு.வ.வின் நூல் களிலும் காணமுடிகின்றது. படைப்பிலக்கியத்திலும் சரி, கட்டுரை நூல்களிலும் சரி கல்விக்கெனத் தனி ஒரு முக்கியத்துவத்தை

மு.வ. அளித்திருப்பது பளிச்செனத் தெரிகின்றது. எப்படி கல்வியின் நோக்கம் பண்பை வளர்ப்பதாக அமைய வேண்டும் என்று பெரியார் சொல்கிறாரோ அதே கருத்தைப் பல்வேறு வடிவங்களில் மு.வ. அழுத்தமாகக் குறிப்பிட்டுச் செல்கின்றார். கற்பித்தல் முறையையும் தேர்வு முறையையும் மாற்றி அமைக்க வேண்டும் என்பதில் மு.வ.வுக்கும் முழு ஈடுபாடு உண்டு என்பதனை வரும்பகுதிவழி அறியலாம்.

மு.வ. தாம் வாழ்ந்த காலத்தில் நடைமுறையில் இருந்த கல்வி முறை மனித வாழ்வியலுக்குப் பயனற்றதாக அமைந்து விடுவதைத் தமது பல்வேறு படைப்புகளில் வாய்ப்பு நேரும் போதெல்லாம் சுட்டிச் செல்கின்றார். கற்றல் கற்பித்தல் என்பன மகிழ்ச்சிகரமானவாகவும் பயனுள்ளனவாகவும் அமைய வேண்டும் என்கிறார். இதற்கான செயல்திட்டம் வகுத்தளிப்பது போன்ற ஒரு தன்மையினைக் *கி.பி. 2000* எனும் நூலில் ‘கனவுலகக் கருத்து’வழி அளித்துள்ளார்.

> *படிப்பு என்றால் குறித்த நேரத்தில் போய்க் குறித்த நேரத்தில் திரும்பி வருதல் இல்லையாம். அங்கே பல மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் சேர்ந்து பழகிப் பல நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொண்டு அவர்களோடு உண்டு உறங்கி ஒற்றுமையாக வாழ்ந்துவர வேண்டுமாம். விடுமுறை நாட்களில் பெற்றோர் வீட்டுக்கு வந்து தங்கிவிட்டுப் போக உரிமை உண்டாம். பெற்றோரும் விடுமுறை நாட்களில் பள்ளிக்கூட விடுதிகளுக்குச் சென்று தம் மக்களைப் பார்த்து விட்டு வருவார்களாம் (கி.பி. பக். 49-50).*

மூன்று வகையான கற்பித்தல் முறைகள் கனவுலகில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளனவாகக் குறிக்கின்றார். அவற்றின் விவரம் வருமாறு :

1. *கதை ஒன்றை மாணவன் ஒருவன் சொல்கிறான். அக்கதை சொல்லுதலுக்கு ஆசிரியர் துணை நிற்கின்றார். மாணவன் சில படங்களையும் சுட்டிக் காட்டுகின்றான். இதைக்கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்த மாணவர்கள் சில வினாக்களைத் தொடுக்கின்றனர். நன்றியுள்ள நாயின் கதை மாணவனால் சொல்லப்பெற்றது. நாய் ஓடுவதும் தொலைவில் பசு நிற்பதும் படங்களில் காட்டப்பட்டிருந்தன. இதனால் ஒரு மாணவன் பசு ஏன் வந்தது என வினாத் தொடுக்கின்றான். மற்றொரு மாணவன் நாய் புல்வெளியில் ஓடுவதால் பசு இருக்கின்றது என்கிறான். இதைக்கேட்ட மற்றொரு மாணவன்*

பசு மேயவில்லை நின்றுகொண்டுதான் இருக்கின்றது என்கிறான். மற்றொரு மாணவன் படத்தில் பசு இருப்பது தவறு என்கிறான். இவ்வளவு நேரம் குறுக்கீடு செய்யாமல் இருந்த ஆசிரியர் தற்போது ஒரு வினாவை முன் வைக்கின்றார். பசுவின் காதுகள் குவிந்து நீட்டப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? என்கிறார். இதைக் கேட்ட மர்ணவர் சிலர் விழித்துக் கொண்டிருக்கின்றனர். ஏதோ ஒலிவருவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்கிறான் ஒரு மாணவன். அதற்குள் மற்றொரு மாணவன் நாய் குரைத்துக்கொண்டே ஓடி இருக்கும். அதனால் பசு மேய்வதை விட்டுக் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் நிற்கிறது என்றான். இப்போது அந்த மாணவனை ஆசிரியர் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகின்றார்.

மு.வ. சுட்டும் இந்தக் கனவுலகக் கற்பித்தல் முறைவழி சிந்தித்தல், கூர்மைப்படுதல், வினா எழுப்புதல், ஒருநிலைப்படுதல் எனும் திறன்கள் மாணவர்களிடம் உருவாக்கப்பெறுகின்றன. அதாவது இந்தக் கதை சொல்லுதல்வழி, இந்த வகுப்பு நிகழ்தல்வழி மாணவன் பெற்ற புது அறிவு இல்லை என்றே சொல்லலாம். ஆனால் அவன் அடைந்திருக்கின்ற திறன்கள் மிகுதி. திறன்கள் வழி அறிவைப் பெற முடியும் என்பதுதான் சரியான கல்வி முறையாக இருக்க வேண்டும் என்று மு.வ. கருதி உள்ளார்.

2. *மற்றொரு வகுப்பறையில் வேறொரு வகையான காட்சிப் படுத்தத்தை முன்வைக்கின்றார். வகுப்பறையில் மாணவர்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். யாரும் ஒருவருடன் ஒருவர் பேசவில்லை, ஒலி எழுப்பவில்லை. திடீரென ஒரு மாணவனை ஆசிரியரிடம் கொண்டு வருகின்றனர். காரணம் அந்த மாணவன்தான் முதலில் பேசியவனாக இருக்கின்றான். இந்த விளையாட்டுக்குப் பெயர் 'அமைதி விளையாட்டு' என்பதாகும்.*

மேற்சுட்டப்பட்ட விளையாட்டுவழி மன உறுதி, மன அமைதி எனும் திறன்கள் மாணவர்களிடம் உருவாவதாக மு.வ. குறிப்பிடுகின்றார்.

விளையாட்டில் வெற்றிபெற்றவருக்கும் தோற்ற வருக்கும் அளிக்கப்பெறும் பரிசு தண்டனை ஆகிய வற்றையும் வித்தியாச மானவையாக மு.வ. சுட்டு கின்றார். வெற்றிபெற்ற மாணவர்

களுக்கு நாடகம் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. அதுதான் அவர்களுக்கான பரிசு. மனவலிமை குன்றிய மாணவனுக்கு அவன் பெயர் அறிக்கைப் பலகையில் எழுதப்பெறுவதே தண்டிக்கும் வழி முறையாக்கப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் தவறு செய்யும் மாணவனாக இருந்தால் விடுமுறை அளித்துத் தொழிற்சாலைக்கு அனுப்புவதை வழக்கமாக்குகின்றார்.

3. *வரலாற்று வகுப்பில் சென்னை பற்றிய பாடம் நடத்தப் பெறுகின்றது. சென்னைக் கடற்கரை காட்சியாகத் திரையில் காட்டப்பெறுகின்றது. . அப்படத்தில் பிச்சை எடுக்கும் காட்சியும் செல்வந்தர்களின் திருமணங்களில் உணவுப் பொருள்கள் வீணாகின்ற காட்சியும் சிலர் மிகுதியாக நகை அணிந்திருக்கின்ற காட்சியும் சிலர் உணவுப்பற்றாக்குறையால் நோய்வாய்ப்படும் காட்சியும் கார், கைரிக்ஷா, சைக்கிள் என வேறுபட்ட வாகனங்களில் மக்கள் பயணிக்கும் காட்சியும் விபத்து நேருகின்ற காட்சியும் காட்டப்பெற்றன. இவை யாவும் 1940-ஆம் ஆண்டைய சென்னை நிகழ்வுகள் என்ற குறிப்பும் இடம்பெற்றிருந்தது. படத்தில் பார்க்கின்ற காட்சி களுக்கும் மாணவர்கள் வாழுகின்ற சமூகத்தில் அவர்கள் அன்றாடம் காணும் காட்சிக்கும் இடையே நிலவும் வேறு பாடுகளும் காரணங்களும் வகுப்பறையில் விளக்கப் பெறுகின்றன.*

மேற்சுட்டப்பெற்ற வரலாற்றுப் பாடப் பொருண்மையில் அரசர் பற்றியோ, போர் பற்றியோ, குறிக்கப்பெறவில்லை. அதாவது வரலாறு என்பது உலகப் பொது வரலாறே தவிர, 'தனிமனித வரலாறு' அன்று எனும் கருத்து இடம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது. அதாவது தனி மனிதர்களின் பெருமைகளையும் புகழையும் மாணவர்கள் அறிந்து கொள்வதைவிட மக்களைப் பற்றி அறிவதால் சமூக அக்கறையும் எது சரி? எது தவறு? என்ற புரிதலும் மாணவர்களிடம் மிகுதியாக உருவாகும் என்று கருதுகின்றார்.

இக்கற்பித்தல் முறை, காட்சிகளைக் கண்களால் காணுதல் அவை தொடர்பான சொல்லாடல்களை நடத்துதல், வினாக்களைக் கேட்டு விடைகளை வருவித்தல், கட்டுரை வரைதல் எனப் பன்முகப்பட்ட கூறுகளுக்கு உரியதாக உருவாக்கப் பெற்றுள்ளது.

பள்ளிகள் இடம் பெறவேண்டிய இடம் பற்றியும் ஒரு கருத்தை மு.வ. பதிவு செய்துள்ளார். உயர்நிலைப் பள்ளி மாணவர் களின் கல்வி முறையில் காலையில் நூல்களைக் கற்றலும் மாலையில் தொழில்களைக் கற்றலும் கல்வி முறையாக்கப்

பெற்றுள்ளன. இதனால் உயர்நிலைப்பள்ளிகளும் தொழிற்சாலை களும் அருகருகு இருக்குமாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இதேபோன்று கல்லூரிகளையும் அரண்மனைகளையும் அருகருகு இருக்குமாறு இருக்க வேண்டும் என்கிறார்.

கல்லூரித் தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் அரண்மனையில் பணியாற்ற வேண்டும். கல்லூரியில் படிப்பதற்கே 5 ஆண்டுகள் தொழிலாளியாகப் பணியாற்றியிருத்தல் வேண்டும். கல்லூரியில் நிகழும் தேர்தல் முறை குடவோலை முறை போன்று நடைபெறுகின்றது.

இத்தகு கல்வி முறைகள் வழக்குப் பெறுகின்ற சமூகத்தில் அறிஞர் பலர் உருவாகின்றனர். திருடுதல், கொள்ளையடித்தல் முதலான தீமைகள் சமூகத்தில் நிகழ்வதில்லை. இதனால் வழக்கறிஞர் என்ற ஒருவரும் அச்சமூகத்திற்குத் தேவைப்பட வில்லை. படக்காட்சிகள்வழிக் கண்டு சிலர் சில தவறு களைச் செய்தால் அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று சொல்லி வாழத்தெரியாதவர் எனும் பகுதிக்கு அனுப்பி அவர் திருந்தி வாழ்வதற்கு வழிவகுக்கப் பெறுகின்றது. மீண்டும் மீண்டும் தவறுசெய்து திருந்தாமல் இருப்பார்களேயானால் அவர்களின் மூளையை ஆராய்ச்சிக்குட்படுத்தித் திருத்த இயலாத நிலையில் அவர்களைத் தீர்த்துவிடுதல் எனும் கடுமையான நிலையை இறுதிக் கட்டத்திற்குரிய தாக்குகின்றார்.

தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பற்றியும் மாணவர் எண்ணிக்கை பற்றியும் மு.வ. சில கருத்து களைப் பதிவு செய்துள்ளார். பள்ளியில் பயிலும் மாணவனின் ஒட்டுமொத்தத் தொகை 200-க்கும் மேல் இருக்கக்கூடாது என்றும் ஒரு வகுப்பில் ஒரு பிரிவில் 20 மாணவர்களுக்கும் மேல் இருக்கக்கூடாது என்றும் சுட்டும் மு.வ. ஆசிரியர் பணிக்கான தகுதிகளைக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. *பண்ணைகளிலோ தொழிற்சாலைகளிலோ பணியாற்றுபவர்கள் மட்டுமே படித்திருந்தால் ஆசிரியர் பணி வாய்ப்பைப்பெற இயலும்.*

2. *முதல் வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிப்பவர்கள் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்களாகவும் பள்ளியின் தலைமை ஆசிரியர்களாகவும் திகழ்வர்.*

3. *தொடக்கப்பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்கள் பெண் களாகவே இருத்தல் வேண்டும்.*

பணி வாய்ப்புக்காகக் கற்றல் என்பதற்கு அப்பால் அறிவு பெறுதற்காக, வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதற்காகக் கற்றல் என்பதனைப் பெரியார், மு.வ. ஆகிய இருவருமே வலியுறுத்திச் சுட்டுகின்றனர். குடும்ப வாழ்க்கையில் *திருக்குறள், புறநானூறு*, தாகூர் நூல்கள், டால்ஸ்டாய் நூல்கள் முதலானவற்றைப் படிக்கும் பழக்கம் இருப்பதாக *வாடாமல்லி, மலர்விழி* முதலான படைப்புகளில் நிகழ்ச்சிகளை மு.வ. படைத்துள்ளார். *அல்லி* எனும் நாவலில் கதைமாந்தரிடம் இருக்கும் படிக்கும் பழக்கமே திருப்புமுனையை உருவாக்குகின்றது. நேரமில்லாத வாழ்க்கை முறையாக இருந்தாலும் அரிதாகக் கிடைக்கின்ற நேரங்களில் சில புத்தகங்களைப் படிப்பது, மீண்டும் மீண்டும் படிப்பது என்பனவற்றால் நன்மை உண்டாகும் எனும் சூழலைச் சுட்டும் வகையில் காட்சிகளை அமைக்கின்றார். மனிதர்களோடு உருவாகும் நட்புணர்வைவிட நூல்களோடு உருவாகும் உறவை உயர்வானதாகச் சுட்டுகின்றார். தொடக்கத்தில் படிக்கும் பழக்கம் இன்னல் தருவதாக இருந்தாலும் பழக்கப்படுத்திக் கொண்டால் அது அப்பழக்கம் உறுதிப்பட்டுவிடும் என்று சுட்டுகின்றார். ஒருவர் படிக்க மற்றவர் கேட்டு இன்புறும் சூழலைப் (கள்.ப.98) படைத்துக் காட்டுகின்றார். உளநூல் முதலானவற்றைப் படிப்பதோடு நூல் கருத்துகளைச் சொந்த வாழ்க்கை முறைக்குப் பயன்படுத்த வேண்டும் (செந்.ப.41) என்ற கருத்தையும் வெளிப்படையாகவே சுட்டுகின்றார். சுயமரியாதைக்காரர்கள் படித்த பெண்களையே மணந்துகொள்ள வேண்டும். திருமணம் முடித்துக்கொண்ட சுயமரியாதைக்காரர்கள் தம் மனைவி படிக்கவில்லை என்றால் அப்பழக்கத்திற்கு அவரை ஆட்படுத்த வேண்டும் என்று சுட்டும் பெரியாரின் கருத்துகள் இங்கு நினைக்கத்தக்கவை. எனவே, பெண் களுக்குக் கல்வி வேண்டும் எனும் பொது வலியுறுத்துதலுக்கு அப்பால், அக்கல்வி முற்போக்கு வாழ்க்கைக்கு வழிவகுப்பதாக மன உறுதிப்பாட்டை அளிப்பதாக, பொருளீட்டும் திறனுக் குரியதாக அமைய வேண்டும் எனும் மு.வ.வின் கருத்தாக்கத்தில் பெரியாரியத்திற்குப் பெரும்பங்கு உண்டு எனலாம். மூடநம்பிக்கையற்றவராக, மூடநம்பிக்கையை எதிர்ப்பவராக, குருட்டுக் கடவுள் நம்பிக்கை அற்றவராக, போர்க்குணம் வாய்ந்தவராக, கணவனைவிட்டுப் பிரிந்து வாழும் உள்ள உறுதிப் பாட்டினராகப் படித்த பெண்களை மு.வ. படைத்துக் காட்டுவதில் பெரியாரியத் திற்குப் பெரும் பங்கு உண்டு. அல்லது இப்படைப்பாக்க முறையைப் பெரியாரியத்தில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது எனலாம்.

6

மொழி

கட்டைவண்டி கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அது ஒரு விந்தையான படைப்பாகவே போற்றப்பட்டது. ஆனால் அந்தக் காரணம் கொண்டு இன்று அதைப் போற்றத் தேவையில்லை. கார்களும் லாரிகளும் நிறைந்த இந்தக் காலத்திற்கு ஏற்றபடி வாழ்க்கையில் முன்னேற வேண்டுமே தவிர, பழைய கண்டுபிடிப்புகளின் பெருமையை நினைந்து தேங்கி நிற்கக் கூடாது. கார் களும் லாரிகளும் இல்லாத இடத்தில் வேண்டுமானால் கட்டை வண்டிகளைப் பயன்படுத்தலாமே தவிர, எங்கள் முன்னோர் படைத்தவை என்று அவற்றை விட மனமில்லாமல் தயங்கக்கூடாது (கட். ப.38).

தந்தை பெரியாரின் மொழிக் கொள்கையில் இரண்டு வகை முக்கியக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. ஒன்று, மொழி என்பது ஒருவர் மற்றொருவரிடம் கருத்தை வெளிப்படுத்த எளியமுறையில் வெளிப்படுத்த உதவும் கருவி. மொழி என்பது குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு நிலைக்குரிய குறியீடாக அமையும் என்பது மற்றொன்று. இவற்றில் முன்னது முற்றிலும் அறிவு நிலைப் பட்டது; அறிவு வளர்ச்சி யோடு கவனத்தில் கொள்ளப்பெற்றது. பின்னது பற்று அடிப்படையிலானது, தாய்மொழி உணர்வு அடிப்படை யிலானது.

மொழி எளிமையாக்கம் புதுமையாக்கம் என்பன வற்றில் பெரியார் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார். எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுச் செயல்படுத்த விரும்பியதும், தரப்படுத்தப் பெற்ற பேச்சுத் தமிழைத் தம் பத்திரிக்கையிலும் மேடை யிலும் எழுதவும் பேசவும் பயன்படுத்தியதும் அவர்தம் எளிமையாக்க, புதுமை யாக்க உணர்வுக்குச் சான்றுகள். பெரியார் வாழ்ந்த

காலத்தில் தனித்தமிழ் இயக்கம் வலுப் பெற்று இருந்ததையும் அன்றைய பத்திரிக்கைகளின் மொழி நடையையும் இணைத்துத் தனி ஓர் ஆய்வு மேற்கொண்டால் பெரியாரின் மொழிக்கொடையை இனம் காண இயலும். இதே அடிப்படையில் மு.வ. வின் மொழிக் கொள்கையை ஆய்வுக்கு உட்படுத்தினால் இருவரும் கொள்கை அளவில் நெருங்கி நிற்பதை இனம்காண இயலும்.

இன்று அச்சில் கிடைத்துள்ள பெரியாரின் எழுத்துகளில் பெரும்பாலானவை பொதுமக்களுக்காக மேடையில் பேசப் பட்டவை. மேடையில் பேசப்பெற்ற கருத்துகள் அதே பேச்சு வடிவில் ஒன்றிரண்டு நாள்களுக்குள் இதழ்களில் கட்டுரை வடிவில் மாற்றமின்றி வெளியிடப்பெற்றவை. இதழ்களின் ஒரு சில பகுதிகள் தலையங்கங்களாகவும், அறிக்கைகளாகவும், சிறு கட்டுரைகளாகவும், வினா விடைகளாகவும் வெளி வந்தவை. எல்லாம் பெரியாரால் எழுதப்பெற்றவை. இரு வகையான வெளிப் படுத்தல்களும் கற்றவர்களையும் ஓரளவு கல்வியறிவு பெற்றவர் களையும் எழுதப்படிக்கத் தெரியாத பொது மனிதர்களையும் கவனத்தில் கொண்டு வடி வமைக்கப் பெற்றவை. இத்தகு கவனத்தால்தான் செழுமை யான தனித்தமிழ்த் தன்மை வாய்ந்த இலக்கிய மொழியைப் பயன்படுத்துவதைப் பெரியார் தவிர்த்து இருத்தல் வேண்டும். மொழிக் கையாளுகை பற்றிப் பெரியாரிடம் தெளிவான புரிதல் இருந்ததை அவர்தம் கீழ்வரும் கூற்றுவழி அறிய முடிகின்றது.

> *குடி அரசைப் பற்றி மிக அதிகமாகக் கூறினார்கள். அதில் உள்ள குற்றமெல்லாம் எனக்குத் தெரியும். அதில் உள்ள மெல்லின வல்லினம் போன்ற பல இலக்கணப் பிழைகளும், மற்றும் பல பிழைகளும் எனக்குத் தெரியும். இதற்காக நான் இலக்கணம் கற்கப் போவதில்லை (குடி. 4.12.1927).*

பெரியார் வாழ்ந்த காலத்திய தமிழகத்தில் வழக்கில் இருந்த பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதிலும் பெரியார் தயக்கத்தைக் காட்டவில்லை. அக்கிராசனவர்களே என்று விளித்துப் பேசும் முறையையும் சில வடசொல், ஆங்கிலச் சொல் பயன் பாட்டையும் பெரியாரிடம் காணலாம். இதுவே பிற்காலத்தில் தலைவரவர்களே, பெரியோர்களே, தோழர்களே என்று விளித்துப் பேசும் முறையைக் கையாண்டுள்ளதும் கவனத்திற்குரியது. திராவிடம், திராவிடநாடு எனும் சொல்லாட்சிகளை வழக்குப் படுத்துகையில் மொழி

உணர்வைவிட இனமீட்டெடுப்பிலும் இனவளர்ச்சியிலும் பெரிதும் கவனம் செலுத்தி உள்ளதை அவர்தம் கீழ்வரும் கருத்துகள்வழி அறிய முடிகின்றது.

தென் இந்தியர், பார்ப்பனரல்லாதார் என்ற இவ்விரண்டும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. உத்தியோகங்களைப் பிரித்துக் கொடுப்பதில் 'பார்ப்பனரல்லாதார்' என்ற பிரிவினை ஒப்புக்கொள்ளப்பட்டதே தவிர, இன உணர்ச்சி ஏற்பட வேண்டிய முறையில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அந்தக் குறைபாடு நம் மனத்தில் பல நாட்களாகவே இருந்து வருகின்றது. தென் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு லட்சியச் சொல் ஒன்றில்லாமலிருப்பது பெருங்கேடு (குடி.17.6.1944).

சிறைச்சாலைக்குள் இருப்பவன் எந்த வழியில் சிறைக்குள் சென்றானோ அந்தவழியில் வெளிவர முயல வேண்டுமே ஒழியச் சிறைக் கதவை, பூட்டைக் கவனியாமல் அது திறக்கப்படவும், உடைக்கப்படவும் முயலாமல் வெறும் சுவரில் முட்டிக்கொள்வதால் எப்படி வெளிவர முடியும்? திராவிடன் இழிவு, தாழ்வு என்னும் சிறைக்குள் சிக்குண்டதற்குக் காரணம் அவன் தன்னைத் திராவிடன் என்று உணராமல் ஆரியன் வசப்பட்டு ஆரியத்திற்குள், ஆரிய மதம், கலை, ஆச்சார அனுஷ்டானங்களுக்கு அடிமைப்பட்டதல்லாமல் வேறு என்ன காரணம் சொல்ல முடியும்? ஆரியத்தின் பயனாய் ஏற்பட்ட சிறைக்கூடத்தில், கட்டுப்பாட்டின் கொடுமையில் இருந்து வெளிவர விரும்புகிறவன் கையிலும், காலிலும் பூட்டியிருக்கும் ஆரியப் பூட்டையும் விலங்கையும் தகர்த்தெறியச் சம்மதிக்க வேண்டாமா? அவைகளைத் தகர்த்தெறியாமல் எப்படி வெளிவர முடியும்? விலங்கோடு வெளிவந்தால்தான் பயன் என்ன? ஆகவே தான் ஆரியக்கொடுமை, ஆரியக் கட்டுப்பாட்டால் நமக்கு ஏற்பட்ட இழிவு நீங்க நாம் ஆரியத்தை உதறித்தள்ள வேண்டும். ஆரியத்தை உதறித் தள்ளுவதற்குத்தான் நம்மை நாம் திராவிடர் என்று சொல்லிக் கொள்ளுவதாகும். அதற்குத் தூண்டுகோல்தான் திராவிடர் என்பது.

எப்படி ஒருவன் பறையனாய், சக்கிலியாய் இருப்பவன், அவன் இஸ்லாம் என்றாகிவிட்டால் அந்தப் பறத் தன்மை, சக்கிலித்தன்மை உடனே ஒழிந்துபோகிறதோ அதேபோல் அறியாமையால் ஆரியத்தில் சிக்குண்டு கீழ்மகனான மக்கள் தங்களைத் திராவிடர்கள் என்று சொல்லிக் கொண்டாலே சரிசமமான மக்களாக ஆகிவிடுகிறார்கள். அதாவது எல்லா மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் உரிமையும் சமபங்குமுள்ள சுதந்திர மக்களாக ஆகி விடுகிறார்கள் (குடி. 14.07.1945).

இதே அடிப்படையில்தான் இந்திமொழித் திணிப்பை எதிர்க்கின்றார். மக்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கும், அடிமை நிலையின்றி வாழ்வதற்கும், வளமாக வாழ்வதற்கும் எத்தகு மொழி உணர்வு பயன்படும், எத்தகு மொழி உணர்வு பயன்படாது என்ற புரிதல் பெரியாரிடம் தெளிவாக இருந்துள்ளது.

தமிழ்நாடு எனப் பெயர்மாற்றம் உருவாக்கப்பெற்ற காலத்திலும் பெரியாரின் மொழி உணர்வு இன, பண்பாட்டு அடிப்படைகளைக் கவனத்தில் கொண்டதாகவே இருந்துள்ளது. 1952-இல் தமிழ்மொழியைக் காட்டுமிராண்டி மொழி என்று குறிப்பிடுகையிலும், மொழி வளம், மொழி வளமின்மை எனும் கருத்தின் அடிப்படையில் தம் கருத்தைப் பெரியார் வெளிப்படுத்தவில்லை. மனிதத்தை இழிவுபடுத்தும் பிறவி அடிப்படையில் மனிதத்தைக் கூறுபோடும் தன்மைவாய்ந்த புராணங்கள் முதலானவை நிறைந்தமொழி எனும் அடிப்படையில்தான் பெரியார் தம் கருத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

இதுபோன்று தமிழ்மொழியைக் காட்டுமிராண்டி மொழி எனக் குறிப்பிட்டதற்குச் சிலவகையான காரணங்களை அவர்தம் பேச்சிலிருந்து, எழுத்திலிருந்து வருவித்துக்கொள்ள முடிகின்றது. அவைவருமாறு :

- தமிழ் இலக்கிய இலக்கணங்கள் சமயச் சாயல் உடையனவாகத் திகழ்கின்றன. மேலும் பழமை என்ற நம்பிக்கையும் அதனோடு இணைந்துள்ளது.
- திருக்குறள் தவிர்த்த இலக்கியங்களைப் படிப்பதால் தமிழன் சமயவாதியாக ஆக முடியுமே தவிர அறிவு வாதியாக ஆக முடியாது.
- தமிழில் வானநூல், நிலநூல், காற்றுநூல், உடல்நூல், ஊர்தி நூல், எந்திரநூல், விவசாய நூல் இன்றைய நிலைக்கேற்ற மருத்துவ நூல், கல்வி, பிள்ளைப்பேறு, பிள்ளை வளர்ப்பு - உணவு ஆகியவற்றுக்கான நூல்கள் இல்லை.
- தமிழ் நூல்கள் மனிதாபிமானத்திற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் ஏற்றதாக அமையவில்லை.
- மான உணர்வை உருவாக்குவனவாகவும் அறிவுபெற உதவுவனவாகவும் இல்லை.

- வெளிநாட்டு மக்களெல்லாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டிய தமிழர், கடல்வணிகம் செய்த தமிழர் மரபில் ஒரு நியூட்டன், எடிசன், மார்க்கோனி போன்றவர்கள் தோன்றமுடிவதில்லை.
- புலவர்கள் பகுத்தறிவு பெறும் சூழல் உருவாகவில்லை. பகுத்தறிவு பெற்றவர்களும் துணிவோடு வாழ்கின்ற சூழல் இல்லை.

இக் காரணங்களெல்லாம் தமிழ் மக்களின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பெரியார் சிந்தித்தவை ஆகும். இவ்வளவு குறைபாடு உடையதாகத் தமிழ் மொழியைப் பெரியார் குறிப்பிட்டாலும் இந்தியாவிலேயே சிறந்த மொழியாகத் தமிழ் மொழியைக் குறிப்பிடுகின்றார். அவர் கருத்துவருமாறு :

- தாய்மொழியைப் பாதுகாத்தல் ஒவ்வொருவருடைய கடன் ஆகும். நம் தமிழ் மொழி தாய்மொழி என்ற மட்டிலும் அல்லாமல் எல்லா வளப்பங்களும் கொண்ட சிறந்த மொழி ஆகும். இந்தியாவிலேயே பழைமை வாய்ந்த பண்பட்ட மொழி ஆகும்.
- தமிழ் இந்நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கேற்ப அமைந் துள்ளது. இந்நாட்டு நல்வாழ்வுக்கும் பண்புக்கும் ஏற்ப அமைந்துள்ளது.
- நமது மேன்மைக்கு, நமது தகுதிக்கு, நமது முற்போக்கிற்கு ஏற்றமொழி தமிழைவிட மேலான ஒரு மொழி இந் நாட்டில் இல்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேன்.

என்று தமிழின் பெருமைகளைச் சுட்டினாலும் தாய்மொழிக் கல்வி தேவை எனக் கல்வி அமைச்சர் தெரிவித்ததை வரவேற்றுப் பாராட்டினாலும் தமிழருடைய வளர்ச்சிக்கு ஏற்ற மொழியாக, பொதுமொழியாக ஆங்கிலத்தையே பரிந்துரை செய்கின்றார் (குடி. 14.8.1932). அரசியல், கல்வி முதலான பல்வேறு இடங் களில் இந்தி மொழி இடம்பெறுவதைவிட ஆங்கிலமொழி இடம் பெறுவதால் நன்மைகள் பெரும் அளவினதாக அமையும் எனக் கருதுகின்றார். பெரியாரை இம்முடிவுக்குக் கொண்டு சென்றது, மொழி என்றால் என்ன என்பதற்கு அவர் வரையறுத்துக்கொண்ட வரையறையே காரணம் எனலாம். 'மொழி என்றால் அது மக்களிடத்தில் அன்றாட வாழ்க்கையில் அவர்களது அறிவை வளப்படுத்தும் தன்மையில் எந்தவகையில் உபயோகப்படும்படி

இருக்கிறது என்பதையே அளவு கோலாகக் கொண்டு அளக்க வேண்டும். (விடுத. 9.3.64) எந்த ஒரு மொழியின் நடப்பும் பெரும்பாலும் அம்மொழியின் மூலம் அறியக் கிடைக்கும் கருத்து களைப் பொறுத்துத்தான் இருக்கும். (விடுத. 1.7.64) இந்த அடிப்படையில்தான் தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழி எனச் சுட்டுகின்றார். இது தொடர்பாக மாலைமுரசு இதழுக்குப் *(16.09.1973)* பெரியார் அளித்த பேட்டி வருமாறு :

> *தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று சொல்லக் காரணம் - இன்றைக்கும், 2000 ஆண்டுகளுக்கு முன்பு எந்த மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து வந்தோமோ, அதில்தானே இன்றும் இருந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பழக்க வழக்கங்களில் இருந்து நம்மை இன்னும் மாற்றிக்கொள்ளாமல், 2000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவற்றையே உதாரணங்கள் காட்டிக் கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி வந்தால் அதற்கு என்ன பொருள்? (பெ.சி.தொ. 2:1231).*

எனவே, பெரியாரின் மொழிக்கொள்கையாக்கத்தில் இனப் பாதுகாப்பும் அறிவுப்பூர்வச் சிந்தனையும் தொழிற்பட்ட அளவு உணர்வு வயப்பட்ட நிலை இடம்பெறவில்லை எனலாம். ஆனால், மு.வ.வின் மொழிக்கொள்கையாக்கத்தில் பெரியாரைப் போன்றே இனப்பாதுகாப்பு, அறிவுப்பூர்வச் சிந்தனை எனும் நிலைப் பாடு களைக் காணமுடிந்தாலும், இலக்கியத் தமிழ் இலக்கிய வளம், தாய்மொழிப் பற்று எனும் நிலைப்பாடுகளும் வளமாகவே இடம்பெற்றுள்ளன எனலாம். விபரம்வருமாறு :

மொழிப்பற்று என்று தனி ஒரு நூலே மு.வ. எழுதி யுள்ளார். வேறுசில நூல்களில் மொழி தொடர்பான கருத்தியல் களை விவாதத்திற்குட்படுத்தியுள்ளார். மு.வ. வாழ்ந்த காலத்தில் பெரிதும் பேசப் பெற்ற இந்தித் திணிப்பு, எழுத்துவடிவமாற்றம் ஆகிய தொடர்பாகவும் தம் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

இந்தி கற்றல் தொடர்பான ஒற்றைக் கருத்தை முன் வைக்காமல் சிந்திக்கத்தக்க பன்முகக் கருத்துகளைக் குறிப்பிட் டுள்ளார். இந்தியாவிற்குப் பொதுமொழி ஒன்று வேண்டுமென்ற கருத்தியல் அடிப்படையில் இந்தியா என்ற ஒருமித்த நாட்டை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இந்திமொழி தொடர்பான தம் கருத்தை விளக்கிச் செல்கிறார். இந்தி அல்லது ஆங்கிலம் இரண்டில் ஒன்றைச் சுட்டிக் காட்டுவதுடன் இரண்டால் விளையும் நன்மை தீமைகளைப் பதிவு செய்துள்ளார். தமிழர்கள் இந்தி மொழியைக் கற்பதால் அத்துடன் அதன்தேவை நிறைவேறி

விடாது. ஆங்கிலம் கற்க வேண்டிய கட்டாயத்திற்கும் தள்ளப் பட்டுள்ளனர். இந்தியாவின் பொதுமொழியாக இந்தியை ஏற்றால், தாய்மொழி, இந்தி, ஆங்கிலம் என மும் மொழிகளையும் கற்கவேண்டிய நிலை உருவாகின்றது. ஒலிப்புமுறை வேறு பாட்டாலும் சொல்லமைப்பு வேறுபாட்டாலும் எழுத்துமுறை வேறு பாட்டாலும் இலக்கணமுறை முரண்பாட்டாலும் மூன்று மொழிகளையும் எல்லோரும் கற்பது சாத்தியம் இல்லை என்பதனைத் தெளிவாக்குகின்றார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளையும் கற்கும் முறை ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் வழக்கில் இருக்கின்றது. அம்முறை அங்கு வெற்றி பெறுவதற்குக் காரணம் அம்மூன்று மொழிகளும் ஒரே வகையான எழுத்து முறையில் அதாவது உரோமன் வடிவைப் பயன்படுத்தி எழுதப்பெறுகின்றன. மூன்று மொழிகளுக்கு மிடையே பொதுவான சொற்கள் பல உள்ளன. எனவே, கற்பதற்கான முயற்சி குறைந்த அளவினதாக அமைந்து விடுகின்றது. எனவே, தமிழகத்திலும் இந்தியைக் கற்கவேண்டிய நிலை உருவானால் உரோமன் எழுத்து வடிவில் இந்தியைக் கற்குமாறு செய்யலாம் என்று தீர்வு கூறுகின்றார். மேலும், இவ்வாறு கற்கும் முறை இந்திய இராணுவத்தில் பயன்படுத்தப்பெறுவதையும் தம் கருத்திற்கு அரணாகச் சொல்லுகின்றார். ஆனால் இம்முறையை நடைமுறைப் படுத்துவதில் இந்திக்காரர்களின் எதிர்ப்புணர்வு கடுமையாக அமையும் என்பதனை எடுத்துக்காட்டவும் செய் கின்றார். இதனால் மற்ற மாநிலங்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய ஒரு சிலர் மட்டும் இந்தி கற்றுக்கொண்டால் போது மானது என்ற கருத்தியலையும் சுட்டுகின்றார். சுருங்கச் சொன்னால் அனைவரும் இந்தி கற்கவேண்டிய தேவை இல்லை. தேவ நாகரி எழுத்தில் தமிழை எழுதுவதைவிட, உரோமன் வடிவில் இந்தியை எழுதுவதால் இழப்பு ஒன்றும் பெரிதாக ஏற்படப் போவதில்லை. ஆங்கிலமா இந்தியா என்ற நிலையில் பெரியாரைப் போன்றே ஆங்கிலமே தமிழிற்கு ஏற்புடைய மொழி; பெரிதும் பயன்நல்கும் மொழி என்ற கருத்துடையவராக மு.வ. திகழ் கின்றார் எனலாம்.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விரிவாகத் தம் எழுத்துரை களில் குறிப்பிட்டுள்ளார். ணா, றா, னா ஆகிய உயிர்மெய் யெழுத்துகளையும் உ, ஊ, ஐ ஆகிய உயிரெழுத்துகளையும்

எழுதும் முறையில் மாற்றம் தேவை என மு.வ. குறிப்பிடு கின்றார். தம் கருத்தை நியாயப்படுத்துவதற்கேற்ற வகையில் *தொல்காப்பியம்*, திருவள்ளுவர், கம்பர் காலங்களுக்குரிய எழுத்து வடிவங்கள் வேறானவை; காலம்தோறும் எழுத்து வடிவங்கள் மாறி வந்துள்ளன. 'குறைஒன்று இருப்பின் அதனைக் களைதலே அறிவுடைமை, ஒருமுறைப்படுத்தி எழுதுவதால் மொழிக்கும் சமுதாயத்திற்கும் நன்மை உண்டு. சீர்திருத்தம் செய்யத் தயங்குவது கண்மூடித்தனமானது' என்றெல்லாம் விளக்கிச் செல்கின்றார் (கட். பக்.11-12). இவ்விளக்கங்கள் அக்காலத்திய தமிழாசிரியர் களின் சராசரி மனஉணர்விலிருந்து வேறுபட்டவை ஆகும். எந்த நிலையிலும் இன்றைக்குப் பயன்படாத ஒன்றை, தீங்கு விளைவிக்காத ஒன்றை நமக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்வதுதான் பகுத்தறிவுத் தன்மைக்கு உட்பட்டது எனும் பெரியாரின் சிந்தனை இங்கு நினைக்கத்தக்கது.

கட்டுரை நூல்களிலும் சரி, படைப்பு நூல்களிலும் சரி வாய்ப்பு நேரும்போதெல்லாம் தமிழர்களுக்கும் இனஉணர்வு இல்லை எனும் கருத்தைப் பதிவுசெய்ய மு.வ. தவறுவதில்லை. தமிழர்கள் வளர்ச்சி பெறாமல் போனதற்கு இனப்பற்றும் மொழிப் பற்றும் இன்மைதாம் காரணம் எனச் சுட்டுகின்றார் (கள். ப. 179, பெற். பக். 139, 252). மொழி அடிப்படையில் கூட்டுணர்வுடன் சேர்ந்துவாழும் இயல்பு அற்றவர்கள் தமிழர்கள் (பெற். ப. 139). நாளைய எதிர்கால வாழ்வியலுக்கு ஏற்பத் திட்டமிட்டு வாழ்கின்ற முறை தமிழரிடம் இல்லை (பெற். ப. 252) என்றெல்லாம் தமிழரிடமுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டியபின் தமிழ்மொழி வாழ வேண்டுமென்றால், சிறப்படைய வேண்டுமென்றால் அம்மொழியைப் பேசும் மக்கள் செல்வாக்குடன் உயர்வது அடிப்படைத் தேவை என்கிறார் (பெற். 254). தமிழ்மொழி ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது (தம்.ப.60) என்கிறார். சாதி, மதம், நிறம், நாடு முதலானவற்றின் அடிப்படையில் உருவாகும் வேறு பாடுகளைக் கடப்பது போன்று மொழி அடிப்படையிலான வேறுபாட்டைக் கடக்க இயலாது (மண். ப.172) என்று கருதுகின்றார். ஒரு நாட்டில் பல மொழிகள் வழக்கில் இருத்தல் நன்மைக்கு உரியதுதான் எனினும் தாய்மொழி வழியிலான தொடர்புகளே உயிர்ப்பானவையாக அமையும் (மண். பக்.187-188) என்று தாய்மொழியின் சிறப்பைப் பதிவு செய்கின்றார். தாய்மொழி தொடர்பான தொடர்புகளை வளர்த்துக் கொள்வதை ஒரு நோன்பு நோற்கும் முறை யிலுள்ள

தீவிரத் தன்மைபோன்று அமைதல் வேண்டும் (மொழி. ப. 78) என்கிறார். திருமணம், வழிபாடு, கல்வி, ஆட்சி, தபால் போக்குவரத்து, பத்திரிகைச் செய்திகள் என எல்லாமும் நல்ல தமிழில் அமைவதால், தமிழ் வாசிப்பைக் கூட்ட முடியும் என்கிறார். மாறான மொழி நிலையில் அமைவன எல்லாம் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் துரோகம் செய்வதற்கு ஒப்பானதாகும் (நண். ப.85) என்று குறிப்பிடுகின்றார். இவை போன்று மொழிப்பற்றால் விளையும் பிரிவுகள் அநாகரிகமாக அமைவதில்லை. சாதிமத வேறுபாடுகளால் உருவாகின்ற குழப்பம், கொலை, கொள்ளை மொழி வேறுபாட்டால் உருவாவதில்லை. மாறாகக் கூடிவாழ்தல் என்ற நன்மையை அளிக்கும் (கரி.ப.46) என்று தாய்மொழி உணர்வின் அடிப்படைத் தேவையைப் பலவாறு சுட்டுகின்றார். தமிழின் பழம்பெருமையால் மட்டும் தமிழுக்கு எதிர்காலம் வாய்த்துவிடாது என்று குறிப்பிடும் மு.வ.வின் மொழி தொடர்பான இரண்டு கருத்துகள் வருமாறு :

- வெளிநாட்டுத் துணியை விலக்குதல்போல் தமிழ்ச் சமுதாயத்துக்கும் தமிழ்மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித்தாள்களை விலக்க வேண்டும். நாட்டுக்கும் மொழிக்கும் இடையூறான நிலையங்களைப் போற்றக் கூடாது.

- பெரும்பாலோர் போற்றும் மொழிதான் வல்லமை வாய்ந்த மொழி என்று கருதப்பெறுகின்றது. எனவே, தமிழ்பேசும் மக்கள் தொகையைக் கூட்டவேண்டும்; அறிவுக் கலை களில், நீதிமன்றங்களில் நிலைநிறுத்த வேண்டும்.

7

இலக்கியம்

பழைய இலக்கியங்களைக் கற்றுத் தெளிவது இன்றியமையாதது. அதற்காக நம் காலத்தில் ஒரு பகுதியைச் செலவிடலாம். மற்றொரு பகுதியை இக்காலத்து அறிவியல், அரசியல், சமூக இயல் முதலியவற்றை அறிவதற்காகச் செலவிட வேண்டும். தமிழ்மக்கள் நம்மிடம் பண்டைத் தமிழிலக்கியங்களைப் பற்றிய கருத்துக்களை எதிர்பார்த்தல் போலவே, அறிவியல் முதலான கருத்துக்களையும் எதிர்பார்க்குமாறு நாம் முன்னேற வேண்டும். நாம் மேடையில் ஏறினால் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் கனவுகளை எடுத்துக் கூறுவதோடு நின்றுவிடாமல், இருபதாம் நூற்றாண்டின் கனவுகளையும் எடுத்துரைக்க வேண்டும். நாம் எழுதுகோல் எடுத்தால் இறந்தகால வாழ்வைத் தீட்டுவதோடு அமைந்துவிடாமல், எதிர்கால வாழ்வையும் தீட்ட முனைய வேண்டும் (கட். பக். 932, 933).

இசை, நாட்டியம், நாடகம், இலக்கியம் எனும் கலைகள் தொடர்பான புரிதல் பெரியார், மு.வ. ஆகிய இருவரிடமும் ஒத்த தன்மையினதாக அமைகின்றது. இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளை இன்றியமையாத கலைகளாக இருவரும் சுட்டவில்லை. இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம் என்பவை பிற பண்பாட்டு, மொழிக் கலப்பின்றி அமைய வேண்டும் என்று இருவரும் கருது கின்றனர். அறிவை வளர்க்க வல்லதாக, அறிவைப் பரப்பவல்லதாக இசை முதலான கலைகள் அமைய வேண்டும் என்று பெரியார் கருதுகின்றார். 'மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும் அறிவையும், திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலை களையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன்மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ்

மொழியையும் செம்மை செய்வதே தமிழ்வளர்ச்சி, உண்மையான தமிழ்வளர்ச்சி என்கிறார் (குடி. 14.8.1932). பாரதிதாசனின் *இரணியன் அல்லது இணையற்ற வீரன்* எனும் நாடகத்தின் அரங்கேற்றத்தில் மக்களுக்கு உணர்ச்சியையும், வீரத்தையும், மனமாற்றத்தையும் அளிப்பதாக நாடகம் அமைதல் வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்திச் சுட்டியுள்ளார். இதே நிலைப்பாட்டை மு.வ.விடமும் காணமுடிகின்றது. 'மனிதனிடம் இருக்கின்ற உணர்ச்சிகளை முற்றிலும் அழித்துவிடவோ அடக்கிவிடவோ முடியாது. அப்படிச் செய்தால் மனிதன் பொல்லாத எந்திரம் ஆகிவிடுவான். அடக்கப்பட்ட உணர்ச்சிகள் தீமை தருவன வாகச் செயல்படத் தொடங்கும். எனவே, உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தும் பணியைக் கதை, கவிதை, இசை முதலான கலைகள் வழியாக மேற்கொள்ள இயலும்' (கரி. ப.148) என்று மு.வ. கருதுகின்றார். கலைகளின் பயனாக மு.வ. இரண்டினைச் சுட்டுகின்றார். ஒன்று, கிடைக்கும் சிறு சிறு ஓய்வுக் காலத்தை இன்பமாகக் கழிக்கக் கலைகள் பயன்படும். மற்றொன்று, வாழ்க்கையைத் திருத்தி அமைக்கக் கலைகள் உதவும் (விடு.ப.4). இங்குக் கூர்ந்து கவனிக்க வேண்டிய தெல்லாம் பெரியாரும் சரி, மு.வ.வும் சரி கலைகள் மனிதனை அறநெறியிலும் பண்பு நெறியிலும் உயர்த்தமுடியுமென்று கருதுகின்றனரே தவிர, கலைத் திறன்வழிப் பொருளீட்டி வாழ இயலும் அல்லது கலையை ஒரு தொழிலாகக் கொள்ள இயலும் என்று குறிப்பிடவில்லை. கலைத் துறையில் ஈடுபடுபவர்களில் மிக ஒரு சிலர்தாம் பேரும் புகழுடன் பொருளீட்ட இயலும். ஒரு சிலர்க்குச் சிறிதளவு பொருளீட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். பெரும்பாலானவர்க்குச் செல்லாக்காசும் கிடைக்காது என்று உறுதிபட மு.வ. குறிப்பிடுகின்றார். மேலும், கலைத் துறையில் ஏற்படும் அதீத ஈடுபாடு பிற தொழில்களைச் செய்வதற்கு இடையூறாக அமையும் என்ற தீங்கு நிலையினையும் சுட்டுகின்றார். இந்த நிலையை விளக்க மு.வ. எடுத்துக்காட்டும் அருமையான சான்று வருமாறு :

> *வாழைமரம் ஏழெட்டுக் கன்றுவிடலாம். எல்லாம் பிழைக்க முடியும். கைத்தொழில் அப்படிப்பட்டது. யாருக்குக் கற்றுக் கொடுத்தாலும் அவர்கள் ஒருவாறு வயிறு வளர்க்க முடியும். கலை, ஆலமரம் அத்திமரம் போன்றது. கோடிக்கணக்கான விதைகளில் மூன்று நான்குதான் மரமாய் வளர்வதைப் பார்க்கிறோம். மற்றவை எல்லாம் பலவகையிலும் அழிந்து போகின்றன (கரி. ப. 76).*

அறிவு வளர்ச்சிக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் தூண்டுகோலாக அமையாமல் மனத்தடுமாற்றமுடையவர்களை அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்வதாகத் திரைக்கலை வளர்ச்சி யடைந்துள்ளது (அல். பக். 133, 134) என்று தம் சமகால நிலைப்பாட்டினைக் கண்டு மு.வ. வேதனை அடைகின்றார் கணவன் மனைவி இருவருக்கிடையே நிலவும் கலைஉணர்ச்சி ஒத்த தன்மையதாக அமைய வேண்டும் என்ற கருத்துடையவர் அவர். இத் தன்மை நிலவாத நேரத்தில் கருத்து வேறுபாடு உருவாகின்ற சூழல்களைத் தம் படைப்புகளில் ஆங்காங்குப் படைத்துச் சென்றுள்ளார். மு.வ. ஆக, பெரியார், மு.வ. இருவரும் இசை முதலான கலைகள் மனிதனைப் பண்பட்ட வாழ்வியலுக்குத் தூண்டுவனவாக அமைவதுடன் பண் பாட்டுத் தன்மையோடு திகழவேண்டும் என்ற கருத்து உடையவர்களாகத் திகழ்கின்றனர் எனலாம். இன அழிவுக்கு அடிப்படையாக அமையும் சமயமும் ஆரியமும் கலைகளில் எவ்வகையில் கலப்பதையும் எதிர்ப்பது என்பது பெரியாரிடம் மட்டும் காணப்பெறும் தனித்தன்மை ஆகும்.

மேற்சுட்டப்பெற்ற அதே அடிப்படையில்தான் இலக்கியக் கலை தொடர்பான புரிதல் உடையவர்களாகப் பெரியாரும் மு.வ.வும் திகழ்கின்றனர். ஆனால் இலக்கியக் கலைக்கும் ஏனைய கலைக்கும் இடையே ஒரு சிறு வேறுபாட்டு நிலையை இருவரின் மதிப்பீட்டளவில் உருவாக்க இயலும்.

மேடைப்பேச்சுக்கு அப்பால் வாசிப்புப் பழக்கத்தின் வழி மக்களிடம் மனமாற்றத்தை உருவாக்க இயலும் என்ற கருத்து பெரியாரிடம் வலுவாக இருந்திருத்தல் வேண்டும். அதனால்தான் *குடிஅரசு, விடுதலை, உண்மை, புரட்சி, பகுத்தறிவு* எனப் பல்வேறு இதழ்களை வெளியிடுவதில் தீவிரம் காட்டியுள்ளார். தம்முடைய மேடைப்பேச்சை அடுத்தடுத்த நாள்களில் இதழ் களில் வெளியிடச் செய்துள்ளார். தலையங்கங்கள் எழுதுவதுடன் மார்க்சு, அம்பேத்கர் முதலான அறிஞர்தம் கருத்துகளை மொழி யாக்கம் செய்து இதழ்களில் வெளியிட வைத்துள்ளார். தேவைப் படுகின்ற சில பகுதிகளைச் சிறு சிறு நூல்களாகத் தொகுத்து வெளியிடும் பணியையும் செய்துள்ளார். இப்பணிகள் யாவுமே வாசிப்பின் வழி மக்களிடம் மனமாற்றத்தை உருவாக்க இயலும் என்ற நம்பிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப் பெற்றவைதாம்

என்றால் அவை மிகை ஆகா. மதம், கடவுள் தொடர்பற்ற அதேநேரத்தில் இயற்கையைப் பற்றிய புரிதலையும் நல்ல விஞ்ஞானத் தன்மையுடன் கூடிய கருத்துகளையும் உடைய இலக்கியப் படைப்புகள் அவை எழுதப்பெற்ற மொழியையும் இலக்கியத்தையும் மேம்படுத்துவதுடன் வாசிக்கும் மக்களையும் அறிவுள்ளவர்களாக உருவாக்கும் என்று குறிப்பிடுகின்றார் (குடி. 26.1.36). அதாவது, பெரியாரைப் பொறுத்தவரையில் நூலை மதிப்பிடுவதற்கு அவர் வைத்திருந்த அளவுகோல்கள் இரண்டே இரண்டுதாம். ஒன்று : நூலின் பயன்பாட்டு அளவு. இரண்டு : இன இழிவுக்குக் காரணமாக அமையும் எவற்றையும் கொண்டதாக அப்படைப்பு அமையக்கூடாது. அந்த அளவுகோல் களின் அடிப்படையில்தான் தமிழில் எழுதப்பெற்ற இலக்கியங்கள் எல்லாம் தமிழர்க்குரிய தமிழ் இலக்கியங்கள் அல்ல என்ற கருத்தை முன்வைக்கின்றார். மேலும் படைப்பில் இடம்பெறும் நிகழ்வுகள் படைப்பாளியால் அவர்தம் சொந்த வாழ்வியலுக்குப் பின்பற்றத்தக்கனவாக இருக்கின்றனவா என்பதனையும் முக்கியமான அளவுகோலாகக் கொள்கின்றார். இதனால் *கம்பராமாயணம், சிலப்பதிகாரம்* முதலான நூல்களையும் பக்தி இலக்கியங்களையும் புறந்தள்ளுகின்றார். ஒரு கட்டத்தில் இராமலிங்க அடிகள், திரு.வி.க. முதலானவர்களையும் விமர்சனம் செய்கின்றார்.

பெரியார் நூலை, இலக்கியப் படைப்பை இனங் காண்பதற்குப் பின்பற்றும் வரையறைகளின் அடிப்படையில் மு.வ.வின் படைப்புகளை அணுகினால் அவை ஏற்கத்தக்க படைப்புகளாக அமைகின்றன. மு.வ. தம் படைப்புகளில் கலை நுணுக்கத்தைவிடக் கருத்து நிலைக்கே முதன்மை அளித்திருப்பது இங்கு நினைக்கத்தக்கது.

பெரியாரைப் போன்றே மு.வ.வும் பயன்பாட்டு இலக்கியங் களில் ஈடுபாடு உடையவராகவே திகழ்கின்றார். கட்டுரை நூல் களிலும் இலக்கியப் படைப்புகளிலும் மு.வ. எடுத்துக்காட்டும் சான்றுப்பாடல்கள் யாவும் கருத்து நிலைப்பட்டவையாகவே அமைகின்றன. அவர்தம் சங்க இலக்கியம் தொடர்பான அறிமுக நூல்களிலும் வாசகரின் வாழ்வியலை வளமாக்குதல் எனும் நோக்கு நிலையிலேயே பாடல்கள் தெரிவுசெய்து விளக்கப் பெற்றுள்ளன. இவற்றின் அடிப்படையில் நாவல் படைப்புத் தொடர்பாக மு.வ. தெரிவித்துள்ள கருத்துகளை அவர்தம் ஒட்டு

மொத்த இலக்கியக் கருத்தியலின் சாரமாகவே கருதலாம். அவர் கருத்துகள் வருமாறு:

> *நாவல்களில் நான் காண விரும்பும் மனிதர், துப்பறியும் நாவல் களில் வரும் கொலைகளையும் கொள்ளைகளையும் செய்துவிட்டு ஒளிந்துவாழும் மனிதர் அல்ல; வாழ்க்கையின் சிக்கல்களையும் இன்னல்களையும் கண்டு இவை இப்படித்தான் இருக்கும், இவற்றைத் தீர்க்க முயன்று காலத்தை வீணடிக்கக் கூடாது என்று ஒதுங்கும் மனிதரும் அல்ல; ஆசிரியர் தம் வாழ்க்கையில் அடைய முடியாமல் ஏங்குகின்ற சுகபோகங்களை எல்லாம் கற்பனையிலாவது பெற்று மகிழ்வதற்காகக் காமக்களியாடல் கூட்டிப் படைக்கும் தன்னல மனிதரும் அல்ல; தாம் மட்டும் எப்படியாவது இன்பக்கேளிக்கையில் வாழ்வதற்காகப் பிறரை ஏய்த்து வாழும் தன்னல மனிதரும் அல்ல. விதியின் பயன் என்று சொல்லிக் கண்மூடித் தனிமையில் அமைதி கண்டு முயற்சியைத் தட்டிக் கழிக்கும் மனிதரும் அல்ல. சமுதாயத்திற்கு இயன்ற நன்மை செய்யும் குறிக்கோளுடன் நெறி வகுத்துக் கொண்டு அதனால் ஏற்படும் போராட்டங்களில் பின்வாங்காமல் ஈடுபட்டு வெற்றியோ தோல்வியோ ஏற்று நம்முடைய பாராட்டையோ இரக்கத்தையோ பெறும் மனிதர்களையே என் மனம் விரும்புகிறது. அத்தகைய மனிதர்கள் பிறவியிலேயே கடவுளின் அருளையோ, சமுதாயத்தின் மதிப்பையோ பெற்றவர் களாக இருப்பதாகப் படைக்கப்பட்டாலும் என் மனம் ஓரளவு தான் விரும்புகிறது. மிகுதியாக விரும்புவதில்லை. சாதாரண மனிதராகப் பிறந்து வளர்ந்து பொதுவான இன்ப துன்பங்களுக்கு ஆளாகி, உயர்ந்த நோக்கங்களும் சிறந்த செயலார்வமும் உடையவர்களாகப் படைக்கப்பட்டால் அவர்களை மிகுதியாக விரும்புகிறது என் மனம் (கால. பக்.142, 143).*

இத்தகு நிலைப்பாட்டால்தான் இருவருமே *திருக்குறள்* பற்றாளர் களாகத் திகழ முடிந்தது. மாநாடுகள் வழியாகத் *திருக்குறளை* மக்களிடம் கொண்டு சென்றதற்குரிய முதற்பெருமை முழுப் பெருமை பெரியாருக்கு உண்டு. அதுபோன்றே *திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம், குறள்காட்டும் காதலர்கள்* எனும் நூல்கள் வழியும் பாமரரும் படித்துப் புரிந்துகொள்ளத்தக்க எளிய உரையாக்க முயற்சி வழியும் மு.வ. *திருக்குறளுக்குச்* செய்த அரும்பணி மிகப்பெரிது. இவற்றுக்கு அப்பால் தம் படைப்புகளில் கருத்து வழியாகவும் குறட்பா வழியாகவும் கதைமாந்தர் வழி யாகவும் *திருக்குறளை* இடம்பெறச் செய்வது, வாழ்க்கையில் பின்பற்றத்தக்க நூல், திருமணத்தில் ஓதவேண்டிய

மந்திரநூல் எனும் உணர்வை வாசகர் நெஞ்சில் பதியவைத்ததில் மு.வ. விற்கு நிகர் மு.வ.தாம்.

திருக்குறள் நேயம்

தந்தை பெரியாரும் மு.வ.வும் மிக ஈடுபாட்டுடன் நேசித்த ஒற்றை இலக்கியம் *திருக்குறள்*தான். 1930களில் *திருக்குறள்* பற்றிப் பெரியார் தெரிவித்த கருத்துகள் இன்று நமக்குக் கிடைக் கின்றன. தொடர்ந்து *திருக்குறள்* மாநாடுகளில் பெரியார் பேசி வந்த கருத்துகள் இதழ்களில் கட்டுரைகளாக வெளி வந்துள்ளன. 1949இல் *'திருக்குறளும் திராவிடர் கழகமும்'* எனும் சிறு நூலும் பெரியாரால் வெளியிடப் பெற்றுள்ளது. *திருக்குறளை* மாநாடுகள்வழி மூலை முடுக்குகள் தோறும் கொண்டு செல்லவேண்டும், மக்களிடம் பரப்புதல் வேண்டும் என்பதில் பெரியார் மிகுந்த ஆர்வம் செலுத்தி யுள்ளார். திருவள்ளுவர் கழகங்கள் தோற்று விக்கப் பெறல் வேண்டும் என்கிறார். ஒவ்வொரு ஜில்லாவிலும் வள்ளுவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்பெற வேண்டும் என்கிறார். திருக்குறள் பிரச்சாரக் குழுக்கள் அமைக்கப்பெற வேண்டும் என்கிறார். ஆரியத்தை ஒழிப்பதற்குரிய ஒப்பற்ற நல் ஆயுதமாகத் *திருக்குறளை* அடையாளப்படுத்துகின்றார். *திருக்குறளில்* இடம் பெற்றுள்ள கருத்துகளையெல்லாம் கவனத் தோடு கருத்தில்கொண்டு மக்கள் தம் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றார். இவையாவுமே 15, 16.1.1949இல் சென்னையில் நிகழ்ந்த 'திருவள்ளுவர் - குறள் மாநாடு' எனும் மாநாட்டில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்த கூட்டத்தில் பெரியார் தெரிவித்தவையாகும். இந்த மாநாட்டில் திராவிடர் கழகத்தினர் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென்று 10.1.1949 அன்றைய *விடுதலை* இதழில் வேண்டுகோள் விடுக்கின்றார். மாநாட்டு நிகழ்வுகள் சிறப்புடன் நிகழவேண்டும் என்பதற்காகப் பல்வேறு குழுக்களை அமைக் கின்றார். மாநாட்டு நாளில் அறிஞர்கள் தெ.பொ.மீ., திருக்குறள் எஸ். முனுசாமி, முத்தையா முதலியார், இலக்குவனார், திரு.வி.க., கா. அப்பாத்துரையார், புலவர் குழந்தை முதலானவர்களைத் தாமே முன்னின்று வரவேற்றுச் சிறப்புச் செய்கின்றார். அதாவது இங்குச் சுருக்கமாகச் சொல்லப்பட்ட இத்*திருக்குறள்* மாநாட்டு நிகழ்வு போக்குவரத்து வசதிகள் குறைவான 1949களில் சென்னை யில் பத்தாயிரம் பேரைக் கவனத்திற்கு ஆட்படுத்தியிருக்கிறது என்றால் இம்மாநாட்டின் வீரியத்தை, தீவிரத்தை ஒருவாறு

ஊகித்து உள்வாங்கிக் கொள்ள உதவுகின்றது. பெரியார் என்ற தனிமனிதரின் விருப்ப நிலைக்கு அப்பால் *திருக்குறள்* தமிழ்ச் சமூகத்தில் பெற்றிருந்த உயர் மதிப்பினையும் இம் மாநாட்டு நிகழ்வுவழி வருவித்துக் கொள்ளலாம். இந்த மாநாட்டில்தான் கிறித்தவர்களுக்குப் பைபிள் வேத நூலாகத் திகழ்வது போன்று *திருக்குறள்* தமிழர்களுக்குரிய திருமறையாக அமைய வேண்டும் என்கிறார் தெ.பொ.மீ. உரையாசிரியர்களின் உரைவழி *திருக்குறளை* வாசிப்பதைவிட நேரடியாகத் *திருக்குறளை* வாசித்துப் பொருள் வேண்டும் என்கிறார் எஸ். முனுசாமி. அரசுக்கு ஏற்ற வழிகாட்டி நூலாகத் *திருக்குறளை* அரசு ஏற்க வேண்டும் என்கிறார் இலக்குவனார். விஞ்ஞான அறிவு அடிப்படையில் *திருக்குறளை* வாசிக்க வேண்டும் என்கிறார் திரு.வி.க. பாமர மக்களும் படித்துப் புரிந்து கொள்வதற்கேற்பத் *திருக்குறளுக்கு* எளிய புதிய உரை வகுக்க வேண்டும் என்று என்.எஸ். கிருஷ்ணன் மாநாட்டில் பொழிவு நிகழ்த்தியுள்ளார்.

இந்த எழுச்சிமிகு காலத்தில்தான் மு.வ.வும் *திருக்குறள்* தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு எழுதியுள்ளார். 1943இல் 'திருவள்ளுவரும் பொறுமையும்' எனும் தலைப்பில் திருக்குறள் தொடர்பாக மு.வ. கட்டுரை எழுதியுள்ளார். 1948இல் *திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்* எனும் நூலையும் 1959இல் திருக்குறளுக்கு எளிய உரையையும் 1968இல் *திருக்குறள் காட்டும் காதலர்கள்* எனும் நூலையும் வெளியிட்டுள்ளார். *குறள்வழி* எனும் வானொலி உரையும் நூலாக வெளிவந்துள்ளது. 1946இல் வெளிவந்த *செந்தாமரை* எனும் நாவலில் *திருக்குறள்* திருமண மந்திரமாக ஒலிக்கப் பெற வேண்டும் எனும் கருத்தை முன் வைத் துள்ளார். தம்முடைய ஒவ்வொரு படைப்பிலும் ஏதேனும் ஒரு சூழலில் *திருக்குறளை* எடுத்தாள்வதை ஒரு நெறி முறையாகவே பின்பற்றியுள்ளார். *திருக்குறள்* கருத்து களை எடுத்துப் பேசும் கற்பனை மாந்தராக அறவாழியைத் தம் படைப்புகளில் படைத்துக் காட்டுகின்றார். ஆக, திராவிட இயக்கத்தின் பெரியாரின் *திருக்குறள்* தொடர்பான செயலாக்கங் களும் மு.வ.வில் *திருக்குறள்* தொடர்பான எழுத்தாக்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துள்ளன எனலாம்.

கடவுள் நம்பிக்கை அற்ற நூலாக, இம்மை மறுமைக்கு இடம் தராத நூலாக, வேள்வியை எதிர்க்கும் நூலாக, பொது வுடைமையை முன்வைக்கும் நூலாக, தனி வாழ்விலும் பொது வாழ்விலும் மனிதனுக்குரிய மானநிலையைச் சுட்டும் நூலாக

எல்லா உயிர் களையும் பிறப்பொக்கும் எனப் பார்க்கும் நூலாக, மூட நம்பிக்கைகளுக்கும் பழக்க வழக்கங் களுக்கும் எதிர்ப்பு நூலாகத் *திருக்குறளைப்* பெரியார் அடையாளப்படுத்துகின்றார். வாழ்க்கை யில் பின்பற்றத்தக்க, திராவிடர்களுக்குரிய ஒழுக்க நூல் என்கிறார். ஒருகட்டத்தில் தமிழர்க்குரிய மதம் வள்ளுவர் மதம், குறள் சமயம் என்று உயர்த்திச் சொல்லவும் செய்கின்றார். இவ்வாறு, எல்லா நிலைகளும் திருக்குறள் தொடர்பான மு.வ.வின் எழுத்து களிலும் காணத்தக்கனவாகவே உள்ளன. எனினும் இரண்டு முக்கிய நிலைகளில் பெரியாரிலிருந்து மு.வ. வேறுபடுகின்றார். அவை,

1. ஆரியத்திற்கும் பார்ப்பனர்களுக்கும் எதிராக எழுதப் பட்ட நூலாகத் *திருக்குறளைப்* பெரியார் அர்த்தப் படுத்துவதைப் போன்று மு.வ. சுட்டவில்லை.
2. திருவள்ளுவர் அவர் காலத்திற்கேற்ற வாழ்வியல் முறைக்குத்தக சொல்லியுள்ள பெண் தொடர்பான கருத்தியல்கள் யாவும் இன்று பின்பற்றத் தக்கவை அல்ல. அதாவது குறளின் ஒரு சிறுபகுதியைத் தவிர ஏனையவை பின்பற்றத்தக்கவை எனப் பெரியார் குறிப்பிடுவது போன்று மு.வ. குறிப்பிடவில்லை; முழுமையாகப் பின்பற்றத்தக்க நூலாகவே சுட்டுகின்றார்.

பெரியார், மு.வ. ஆகிய இருவரிடையே காணப்பெறும் மிகப்பெரிய ஒற்றுமை *திருக்குறளை* இன்றைய வாழ்க்கை முறைக்குரிய நூலாகப் பின்பற்றத்தக்கதாகச் சுட்டுவதே எனலாம். பெரியார் கருத்தியல் நிலையில் நின்று பின்பற்றத் தகுந்தவையை விளக்கிச் செல்ல மு.வ.வோ விரிவான நிலையில் விளக்கம் அளிக்கின்றார்.

சான்றுக்குச் சில வருமாறு : *திருக்குறள்* கடவுள் வாழ்த்தில் இடம்பெறுகின்ற குறட்பாக்களுக்கெல்லாம் பகுத்தறிவு நிலையிலிருந்து தந்தை பெரியார் விளக்கமளிப்பார். இது போன்றே *திருக்குறளின்* குடிசெயல்வகை எனும் குறட் பாக்களை எல்லாம் இன்றைய நிலையிலிருந்து வாசித்துப் பொருள்கொள்ள வேண்டும் என்கிறார்; மு.வ.. பழங்காலத்தில் ஒவ்வொரு தனிமனிதனுடைய, ஒவ்வொரு குடும்பத்தினுடைய வளர்ச்சியும் வீழ்ச்சியும் பெரும் பாலும் அவர்களையே சார்ந்திருந்தன. ஆனால் இன்றைய நிலையில் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் சமூக இயக்கம் பெரும் பொறுப்பு வகிக்கின்றது. இந்த அடிப்படையில்தான் குடிசெயல் வகையைக் கற்க வேண்டும்

என்கிறார். இதுபோன்றே அரசியல் பகுதியில் அமையும் காலமறிதல், இடமறிதல் முதலான அதிகாரக் கருத்துகளை யெல்லாம் இன்றைய பாராளுமன்ற நட வடிக்கைகளுக்கு ஏற்பக் கற்க வேண்டும் என்கிறார்.

பெண்வழிச் சேறல் எனும் அதிகாரத்தை இன்றைய் இலஞ்சம் வழக்குப் பெற்றுள்ளதோடு தொடர்புபடுத்தி விளக்கு கின்றார். இதேபோன்றே வள்ளுவரின் ஊழ் கருத்தையும் புற வாழ்க்கைக்கும் அக வாழ்க்கைக்கும் உரியவை எனப் பகுக் கின்றார். உழவு, மழை, அதிகாரங்களில் இடம் பெற்றுள்ள கருத்துகள் இன்றைய நிலையில் எவ்வாறு மாற்றம் பெறு கின்றன என்பதனையும் சுட்டுகின்றார். திருவள்ளுவரை ஆராய்ச்சியாளர், அறிஞர் என்று பெரியார் சுட்டுவதைப் போன்றே மு.வ.வும் சுட்டுகின்றார். அறத்துப் பாலில் வள்ளுவர் ஒரு குருவாகத் திகழ்கின்றார். பொருட் பாலில் வள்ளுவர் அறிஞராகத் திகழ்கின்றார் என்று வள்ளுவரை வெவ்வேறு கோணங்களில் அடையாளப் படுத்துகின்றார். வறுமையும் பாவமும் மூடநம்பிக்கையும் அறியாமையும் உடையவர்களை நாடிச்சென்று உதவுவது தலையாய தொண்டு அன்று. அவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து உலகை மாற்றுவதுதான் தலையாய தொண்டு என்கிறார். இந்த மாற்றி யமைத்தலுக்கு ஒரு கருவியாகத் திருக்குறளை முன்னிறுத்துகின்றார்.

திருவள்ளுவரை ஒரு பொதுவுடைமைவாதியாகத் தந்தை பெரியார் கருதுவதைப் போன்றே மு.வ.வும் கருதுகின்றார் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. இந்தக் கருத்தியலின் அடிப்படையில்தான் பெரியார், மு.வ. சுட்டுகின்ற பொதுச் சமையலறை, பொது வாழ்விடம் தொடர்பான கருத்துகளை உள்வாங்க வேண்டியுள்ளது. மு.வ. கட்டமைக்கும் கி.பி. 2000ஆவது ஆண்டிற்கான சமூகத்தில் பொதுவாழ்விடமாக அமையும் அரண்மனையில் 'விதிப் புத்தகம்' ஒன்று வைக்கப்பெற்றுள்ளது. அதனுள் சுட்டப் பெற்றுள்ள மூன்று விதிகள் திருக்குறள் கருத்தியலோடு வெகுவாக ஒத்துள்ளன. அவ்விதிகள் வருமாறு :

1. உலகத்தில் மக்கள் எல்லோரும் வாழவேண்டும். ஆதலால் எந்த வேற்றுமையும் மறந்து அன்பைப் பாராட்டுங்கள்.
2. எங்காவது எவராலாவது குறை இருந்தால் அரண்மனை எண்-4 ஒழுங்குத் தொண்டர்க்குத் தெரிவியுங்கள். அதற்காக எவரிடமும் வெறுப்புக் கொள்ள வேண்டாம்.

3. இந்த விருந்து மனையைக் கடந்து வெளியே செல்லும் போது பொதுவுடை அணிந்து செல்லுங்கள்; பொது உள்ளம் பெற்றுச் செல்லுங்கள் (கி.பி. 47-48).

விலங்குகளும் பறவைகளும் தத்தம் உறவு அல்லது உயிரினத்திற்குரிய, பிற உயிரினத்திற்குரிய துன்பத்தை உணரு வதில்லை என்பதனை விரிவாக எடுத்துக்காட்டி விளக்கும் மு.வ. மனிதத்தன்மை என்றால் என்ன என்பதனை அங்குச் சுட்டிக்காட்டுகின்றார். பிறிதொன்றின் நோயைத் தன் நோயாகக் கருதுகின்ற தன்மைதான் அறிவின்பயன் எனும் வள்ளுவரின் கருத்தை எடுத்துக்காட்டி அறிவு என்றால் என்ன என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார்.

தமிழர் உணர்வுப்பூர்வமாக இயங்கக்கூடாது; அறிவுப்பூர்வமாகச் செயலாற்ற வேண்டும் என்பது தந்தை பெரியார், மு.வ. ஆகிய இருவரும் வலியுறுத்திச் சுட்டும் கருத்து என்பது முன்பே சுட்டப் பெற்றது. தம்பிக்கு, தங்கைக்கு, அன்னைக்கு, நண்பனுக்கு என்றெல்லாம் மு.வ. எழுதியுள்ள நூல்கள் *திருக்குறளை* அடிப்படையாகக் கொண்டு சிந்தித்ததன் விளைவுதாம். 'தமிழர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய்த் திரண்டு தொகை வன்மையைப் புலப்படுத்தினால்தான் வெற்றி பெற முடியும். இதை மறந்து வீரத்தையும் மானத்தையும் பழம்பெருமையையும் நினைத்துக் கொண்டிருந்தால் ஒரு பயனும் இல்லை. இன்று நம்மை எதிர்ப்பவை யானையும் குதிரையும் அல்ல; வாளும் வேலும் அல்ல; பிறருடைய தொகையும் சட்டமுமே. ஆகவே, பழைய வீரமும் மானமும் இன்று பயன்படாதவை; ஒற்றுமை ஒன்றே இன்று பயன்படுவது' (தம்.ப.54) என்று மு.வ. சுட்டுவதில் *திருக்குறளின்* காலமறிதல், பழியறிதல், இடனறிதல், இகல், பகை, படைமாட்சி எனப் பல்வேறு அதிகாரக் கருத்துகளின் சாரம் இடம்பெற்றுள்ளது கவனத்திற் குரியது.

சங்க இலக்கியத்தில் இருக்கின்ற மருதத்திணை வாழ் வியலுக்கும் *திருக்குறளில்* இடம்பெற்றுள்ள பரத்தமை, ஊடல் தொடர்பான கருத்தியலுக்கும் இடைப்பட்ட உறவை, வேறுபாட்டைத் தெளிவாக்கித் திருக்குறளின் தனித் தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றார். *திருக்குறளின்* ஊடல் கருத்தியலில் பரத்தமை இல்லாமல் கட்டமைக்கப் பெற்றதை உயர்வாகச் சுட்டுகின்றார். இதுபோன்ற கருத்தை விளக்குகையில் ஆணுக்கான ஒழுக்க நிலையைப் பல நிலை களில் இருந்து விளக்குகின்றார். 'பிறனுக்கு உரியவளைத் தான் பெற விரும்புவது கொடுமை;

தன்னை விரும்பாத ஒருத்தியைத் தான் விரும்புவது கயமை; தன்னைப்பற்றி அறியாத ஒருத்தியைத் தான் அறிந்து நாடுவது குற்றம்; தன்னைப் புறக்கணிக்கும் ஒருத்தியைத் தான் நாடி நிற்பது பேதைமை; தன்னை வெறுத்து ஒதுக்கும் ஒருத்தியைத் தான் நினைந்து வருந்தி அடைவது ஆண்மைக்கு இழுக்கான கோழைத்தன்மை' என்று மு.வ. அளிக்கின்ற விளக்கங்கள் யாவும் *திருக்குறளிலிருந்து* அவர் வருவித்துக்கொண்டு வாசகர் களுக்குச் சொல்லுபவை. ஏறக்குறைய பெரியார் சுட்டும் ஆண், பெண் ஒழுக்க நிலையைப் போன்று அமைபவை.

(8)

பொருள்

உழைப்பு இல்லாதவனை ஒதுக்கி வைக்கத் தெரிந் திருந்தால், சேர்த்து வைக்கும் உணவுப் பொருளை ஊர்க்குப் பொதுவாகச் சேர்த்துவைக்கத் தெரிந் திருந்தால், அந்தந்தத் தெருவில் உள்ளவர்கள் பகையில்லாமல் சேர்ந்து வாழ்ந்து ஒற்றுமைப்பட்டிருக்க முடியும். இப்படி ஒவ்வொரு தெருவிலும் உழைப்பு இல்லாத மக்களைத் தேடிக் கொண்டு திருத்தி யிருந்தால், ஒவ்வொரு தெருவின் மக்களும் உழைப் பாளிகளாக மாறியிருந்தால் எந்தத் தெருவிலும் கொள்ளைக் கூட்டம் என்று சிலர் ஒன்று சேர்ந்திருக்க மாட்டார்கள் (அற.பக்.20-21).

தமிழ் மக்களின் வறுமை நிலைக்கான காரணம் பற்றியும் வறுமையைப் போக்குவது பற்றியும் தந்தை பெரியாரும் மு.வ.வும் அழுத்தமாகச் சிந்தித்துள்ளனர். தமிழரின் பொருளாதார வள மின்மைக்கான காரணத்தை இரு நிலைகளிலிருந்து பெரியார் சிந்தித்துள்ளார். கதர் உடுத்துதல், கதர்த்தொழில், கிராம மேம்பாடு எனும் காந்தியின் செயல் திட்டங்களில் தொடக்கத்தில் பெரியாருக்கு உடன்பாடு இருந்தது. ஈரோடு திட்டம், சமதர்மத் திட்டம், சிங்காரவேலர் திட்டம் என்று அழைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டங்களிலும் பெரியாருக்கு உடன்பாடு இருந்துள்ளது. நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை நாட்டு மக்கள் யாவரும் சமமாக உபயோகிக்க வேண்டும் என்பதும் அவ்வுற்பத்திக்காகச் செய்ய வேண்டிய தொழில்களில் நாட்டுமக்கள் சக்திக்குத் தக்கபடி பாடுபடவேண்டும் என்பதும் சமதர்மத் தத்துவம் என்கிறார். எனினும் தம்முடைய அழுத்தமான புரிதல்வழி சமூகத்தில் சமத்துவ நிலை ஏற்பட்ட பின்னர்தான் பொருளாதாரச் சமத்துவம் வெற்றிபெறும் என்பதனைக் கண்டறிந்து திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றார். மேதின உரையில் (குடி. 12.5.1935)

'தொழிலாளி, முதலாளி கிளர்ச்சி என்கின்றதைவிட மேல்ஜாதி, கீழ்ஜாதி, புரட்சி என்பதே இந்தியாவுக்குப் பொருத்தமானது' என்கிறார். 'எந்த வகையிலாவது பொருளாதாரச் சமத்துவத்தைச் சமூகத்தில் கொண்டுவந்து விட்டாலும் சாதிய முறைகளால் சமூகத்தில் மறுபடியும் பழைய நிலையே உருவாகிவிடும்' (குடி *18.06.1949*) என்கிறார். தமிழகத்தில் வழக்கிலுள்ள தொழில் முறைக்கும் வர்ணாசிரம முறைக்கும் இடைப்பட்ட உறவைச் சுட்டிக் காட்டுகின்றார். ஒரு தொழில் செய்வோர் மற்றொரு தொழிலை மேற்கொள்வதென்பதும் தமக்குரிய தொழிலை உற்பத்தி முறையைத் தாமே தெரிவுசெய்து கொள்ளுதல் என்பதும் அவ்வளவு எளிதான செயலன்று என்பது பெரியாரின் கருத்து. சாதிய அடுக்கு நிலைகளை, தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்தால்தான் பொருளாதாரச் சமத்துவம் வெற்றிபெறும் என்கிறார். இந்த அடிப்படையில் தான் பார்ப்பனர்களைப் போலவே பிறப்பு அடிப்படையில் தம்மை உயர்வாகக் கருதிக்கொள்ளும் சொல்லிக் கொள்ளும் அதே நேரத்தில் பொருளாதார வளத்தோடு தொடர்புடைய ஜமீன் தார்களையும் எதிர்க்கின்றார். ஜமீன்கள் வசூலிக்கும் வரித் தொகைக்கும் அவர்கள் அரசுக்குச் செலுத்தும் தொகைக்கும் உள்ள இடைவெளியைப் புள்ளிவிவரத்துடன் சுட்டிக் காட்டு கின்றார். 'லேவாதேவிக் காரர்கள் அல்லாதார் மாநாடு, முதலாளிகள் அல்லாதார் மாநாடு தொழிற்சாலைச் சொந்தக் காரர்கள் அல்லாதார் மாநாடு, நிலச்சுவான்தார்கள் அல்லாதார் மாநாடு என்றெல்லாம் மாநாடுகள் கூட்டப் பெறவேண்டும்' என்கிறார் (குடி.*27.03.1933*). இவர்களின் அக்கிரமங்களையும் கொடுமைகளையும் மோசங் களையும் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்ட வேண்டு மென்கிறார்.

இதன் தொடர்ச்சியாகவே சாதி, மதம், கடவுள், பார்ப்பனர், புரோகிதர், புராணம், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப் படையில் மேற்கொள்ளப்பெறும் சடங்குகளால் பெருமளவு பொருளாதார விரயம் ஏற்படுகின்றது என்கிறார். இலட்சக் கணக்கிலும் கோடிக்கணக்கிலும் கோவிலுக்கு வருகின்ற வருவாயெல்லாம், உணவு உற்பத்தி முறைக்காகவோ, தொழிற் சாலைகளுக்காகவோ, மருத்துவ மனைகளுக்காகவோ, கல்வி நிறுவனங்களுக்காகவோ செலவிடப் பெறமுடியாத அவல நிலையைச் சுட்டிக்காட்டுகின்றார். 'நான் ஒரு நிமிடம் அரசனாய் இருந்தாலும் முதன்முதல் பொருள் விரயத்தைத் தடுக்கவே

தூக்குத் தண்டனை நிபந்தனையுடன் சட்டம் செய்வேன்' (குடி. 13.12.1936) என்று பொருளாதார விரயம் தொடர்பான தம் கோபத்தை வெளிப்படுத்துகின்றார். சுருங்கச் சொன்னால் மனிதனை இழிவுபடுத்தி மறுதலித்தலுக்கும் தொழில் முறை களுக்கும் பொருளாதார நிலைக்கும் பொருள் விரயமாதலுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு உண்டு என்பதுதான் பெரியாரின் கருத்தாக அமைகின்றது எனலாம்.

தனி மனிதர்கள் மேற்கொள்ள வேண்டிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பற்றியும் பெரியார் சிந்தித்துள்ளார். ஒழுக்கமுடன் வாழ்தல், வரவிற்கேற்பச் செலவிடல், சிக்கனமாக வாழ்தல், எளிமையாக வாழ்தல், குழந்தைகளை மிகுதியாகப் பெற்றுக் கொள்ளாமலிருத்தல், பொருளாதார உற்பத்தியில் பெண்களை ஈடுபடுத்துதல், நவீனமயத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பனவற்றால் தனி மனிதர்கள் வறுமை நிலையை அடையாமல் இருக்க இயலும் என்பதனை ஆங்காங்குத் தம்பேச்சிலும் எழுத்திலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரியாரின் பொருளாதார மேம்பாட்டுக் கொள்கை களில் காணலாகும் சமநீதி, சமதர்மம் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தும் பொருளாதாரப் பார்வையை மு.வ.விடம் காண முடியவில்லை. மூடத்தனங்களால்தாம் பொருளாதாரச் சமத்துவம் ஏற்படவில்லை என்பது பெரியாரின் கருத்தாக அமைய, பொருளாதார வளத்தால், நோயற்ற வாழ்வால் மூடத்தனங்கள் உருவாகின்றன (மண்ணி. ப.80) என்பது மு.வ.வின் கருத்தாக அமைகின்றது. எனவே, மு.வ. தனி மனிதர்களின் செயல்முறைகளையும் அரசாங்கத்தின் செயல் முறைகளையும் மேம்படுத்தும் வகையில் தம் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். கிராமங்களெல்லாம் நகர்மயமாக்கப் பெறுதல் வேண்டும். கிராமத்திலுள்ள மக்களெல்லாம் நகரத்தில் உள்ள மக்கள் அனுபவிக்கின்ற அத்தனை சுகபோகங் களையும் அனுபவிக்க வேண்டும். தேவைப்படும் இடங்களி லெல்லாம் எந்திரமயமாக்குதலை நடைமுறைப் படுத்த வேண்டும். அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டும். பொருள்வளம் தராத கைத் தொழில்களை யெல்லாம் கைவிடுதல் வேண்டும் என்ற பெரியாரின் பார்வை மு.வ.விடம் சற்று வேறுபட்டு வெளிப்பட்டுள்ளது. கைத்தொழிலால் போதிய வருமானம் கிடைக்க வில்லை என்ற கருத்து மு.வ.விடமும் உள்ளது.

இந்நிலையை மேம்படுத்த மு.வ. காட்டும் வழிமுறைகள் வருமாறு :

"கைத்தொழிலால் உண்டாக்கப்படும் பொருள்கள் எல்லாவற்றையும் வாங்கிச்சேர்த்து விற்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கே இருக்க வேண்டும். சில்லறையில் விற்பது பெருந்தொல்லை. ஆகையால் மொத்த விற்பனையை அரசாங்கத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்றுக் கொள்ள வேண்டும். எந்தப் பொருள்கள் தேவையோ அந்த அந்தப் பொருட்களை மட்டும் வரும் ஆண்டில் அரசாங்கம் வாங்கும் என்று தெரிவித்தால் மக்கள் அந்தப் பொருள்களை மட்டும் செய்து கொண்டு வருவார்கள். நாற்காலி மிகுதியாகச் சேர்ந்து இருப்பு நின்று விட்டால் அடுத்த ஆண்டில் நாற்காலி தேவைப்படாது என்று அறிக்கை வெளியிட்டு விடலாம். தச்சர்கள் மேசை அலமாரி முதலியவை செய்வார்கள். ஒவ்வொரு தொழிலாளியிடமும் இவ்வளவு பொருள்கள் தான் வாங்கிக் கொள்ளப்படும் என்று வரையறை செய்யலாம். அந்த வரையறை இவர்களுக்குப் போதிய வருவாய் தருவதாய் இருக்க வேண்டும்."

"யந்திரங்கள், தொழிற்சாலைகள்"

"எந்தப் பொருள்களைப் போதிய அளவுக்கு வேகமாக உற்பத்தி செய்ய முடியாதோ அவற்றிற்கு யந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். எந்த யந்திரங்களால் பலருக்குத் தொழில் இல்லாமல் போகிறதோ அந்த யந்திரங்களை மூடவேண்டும்."

"அந்தத் தொழிற்சாலை உடையவர்களுக்குப் பிழைப்பு."

"தொழிற்சாலை உடையவர்கள் ஏழெட்டுப் பேர், கைத்தொழிலை நம்புகிறவர்கள் ஏழெட்டு ஆயிரம்பேர். ஏழு குடும்பம் வாழ்வதற்காக ஏழாயிரம் குடும்பங்களைப் பட்டினி போடுவது நாகரிகம் அல்ல! காட்டுமிராண்டித் தன்மை. அந்த ஏழுபேரும் அரசாங்கத்தில் கணக்கு எழுதிப் பிழைக்கலாமே."

"அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிகளின் கதி?"

"அவர்கள் எழுநூறு எண்ணூறு பேர் வீட்டுக்குத் திரும்பிக் கைத்தொழில் செய்யட்டும். வேறு இடங்களில் வேலை தேடி அலையவேண்டியதில்லை. ஏதாவது பொருள்களைச் செய்து கொண்டு அந்த ஊரின் அரசாங்க நிலையத்திற்குச் சென்றால், அதை வாங்கிக்கொண்டு பணம் கொடுக்க அதிகாரிகள் காத்திருக்கிறார்கள்" (கரி. பக். 76,77).

இல்லை இல்லை இன்றைக்குக் கைத்தொழில் தெரிந்தாலும் பிழைக்க முடியாது. நெசவுத் தொழில் தெரிந்திருந்தது என்று வைத்துக் கொள்வோம். நான் உற்பத்தி செய்யும் புடவையை எங்கே எவரிடம் விற்பது? கட்டாயம் வாங்கி என் குடும்பத்திற்குப் படி அளப்பதற்கு ஓர் அரசாங்கம் இல்லையே? ஏழையின் கைத்தொழிலை ஒரு பெரிய தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருளுக்கு எதிரே போட்டியிடும்படியாகச் செய்து அரசாங்கம் வேடிக்கை பார்க்கிறதே! அந்தத் தொழிற்சாலையின் ஆடைகளையும் அரசாங்கமே வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். இனி ஆறு மாதத்திற்கு உங்கள் உற்பத்தி நிற்க வேண்டும் என்றும், இங்கே பல்லாயிரக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்றும், ஆலை முதலாளிக்கு ஆணை அனுப்பவல்ல அஞ்சாமை அரசாங்கத்திற்கு இருக்கவேண்டுமே! இல்லாதபோது நான் கலை கற்றிருந்தாலும் ஒன்றுதான்; கைத்தொழில் கற்றிருந்தாலும் ஒன்றுதான்' (கரி. ப.78)

தனி மனிதர்கள் நிலையில் மேற்கொள்ள வேண்டிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடர்பான மு.வ.வின் கருத்துகள் வருமாறு :

- ஒருவருக்கு மற்றொருவர் உதவுதல் : அருகம்புல் பல்வேறு இடங்களுக்குப் படர்ந்து செல்வது போன்று உதவி தேவைப்படும் இடங்களுக்கெல்லாம் சென்று உதவுவதால் வறுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்கிறார் (மல. பக்.130,131).
- எளிமை, சிக்கனம், ஆடம்பரம், திருட்டு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. ஆடம்பர வாழ்க்கை திருட்டிற்கு வழி வகுக்கும் (நல். ப.42). எனவே, எளிமையும் சிக்கனமும் ஆடம்பரமின்மையும் மனிதர்கள் வறுமைக்கு ஆட்படாமல் தடுக்கும் அணைகள் என்பதனை மு.வ.வின் எல்லாப் படைப்புகளிலும் காணலாம்.
- பொருள் மிகுதியாகச் சேர்த்து வைத்தலைத் தடுத்தல், மிகுதியாகப் பொருளைச் சேர்ப்பதால்தான் ஆசை வளர்கின்றது. குறுக்கு வழியில் செயல்படுதல், இலஞ்சம் வாங்குதல் என்பனவெல்லாம் வழக்குப் பெறுகின்றன (மண்ணி. ப.100) என்கிறார்.
- ஒழுக்கச் சிதைவால் வறுமையை அடைதல், அறிவாளிகளைவிடப் பண்பு நிறைந்தோரை வாழ்க்கையில் வெற்றி

பெறுவதாகப் படைத்துக் காட்டுவது மு.வ.விடம் காணப் பெறும் பொதுப் படைப்பாக்க முறை.

- சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுதல். ஒருவர் எவ்வளவு வருவாய் உடையவராய் இருந்தாலும் சேமிப்புப் பழக்கம் இல்லையெனில் அவர்தம் குடும்பம் வறுமைக்கு ஆட்படும் என்பது மு.வ.வின் கருத்தாக உள்ளது. இந்த வறுமை நிலையே பண்பு தடுமாற்றத்திற்கும் வழிவகுத்து விடுகின்றது என்கிறார். இதனை ஆசிரியர் ஒருவரின் இறப்பால் அவர்தம் குடும்பம் எதிர்நோக்கும் சிக்கல்வழி விளக்குகின்றார். அதுவருமாறு :

வாடிய மேனியோடும் அழுக்குப்படிந்த ஆடையோடும் உன் எதிரில் வந்துநின்று கடனாகப்பணம் கேட்பதாக எழுதியதைப் படிக்கும் போது கண் கலங்கினேன். இப்படிச் சில திங்கள் கழியுமானால் அந்த உத்தமியின் மானம் படிப்படியாகக் குறைந்தாலும் குறைந்து விடும். வறுமையின் கொடுமை அவளைப் பிச்சைக்காரியாக ஆக்கி விடுமோ? அல்லது, மானத்தை விற்றாவது வயிறு வளர்க்கத் துணியும் விபச்சாரி ஆக்கிவிடுமோ? என்ன கொடுமை! (நண். ப.27)

ஒருவரின் பண்பு மாற்றத்திற்கு வறுமையைக் காரணமாகச் சுட்டும் மு.வ. பொருள் சேர்ப்பவரின் பண்பு மாற்றத்திற்கும் பொருளே அடிப்படையாக அமைகின்றது என்று கருதுகின்றார். செல்வந்தர், வறியவர் எனும் இருவருக்கு இடையே உருவாகும் இடைவெளி ஒருவருக்கு ஒருவர் வெறுக்கும் வகையில் அமைகின்றது என்கிறார். செல்வந்தர் ஏழைகளை வெறுப்பதும் ஒதுக்குவதும் உலக நடைமுறையில் வெளிப் படையாக, அன்றாடம் காணும் காட்சியாக அமைந்துள்ளது. ஆனால் ஏழைகள் இவ்வாறு செல்வந்தர்களை வெறுக்க முடிவதில்லை. இந்த மனஉணர்வு இரண்டு வகையில் ஏழைகளிடம் மடைமாற்றம் செய்து வெளிப்படுகின்றது.

1. கூட்டங்களில் பேசுகின்ற தலைவர்கள் வெறுப்பையும் கோபத்தையும் கக்கிப்பேசுகையில் மக்கள் அதனை வரவேற்கின்றனர்.
2. திரைப்படத்தில் தீயவரை அழிப்பதாக வரும் காட்சிகளை உணர்ச்சி பொங்க ஆரவாரம் செய்து இரசிக்கின்றனர்.

அதாவது, அன்புடைமை, பொறுமை, இன்னா செய்யாமை ஆகியவற்றை எல்லாம் *திருக்குறள்* வழி அறிந்திருந்தாலும்

வறுமை, வேலை இல்லாக் கொடுமை, ஏமாற்றம், ஏய்ப்பு ஆகிய வற்றால் மக்கள் அவற்றைப் பொது நிலையில் பின்பற்ற முடியாமல் போகின்றது என்கிறார்.

- சிறுமூளை கொண்டு உழைக்கும் கிராமத்து வியாபாரி களைப் பெருநகர வியாபாரிகள் ஏமாற்றிவிடுகின்றனர். அதாவது உடல் உழைப்பின் பயனைச் சுரண்ட மூளையைப் பயன்படுத்துவதையே நாகரிகமாகக் கருதும் சூழல் சமூகத்தில் நிலவிவருகின்றது என்கிறார்.
- குழந்தைகளை மிகுதியாகப் பெற்றுக்கொள்வதையும் வறுமை நிலைக்கான காரணமாகச் சுட்டுகின்றார்.

படித்த படிப்பும் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள உதவாமல் உதவாக்கரையாக அமைந்துவிடுகின்றது. பட்டப் படிப்புப் படித்த இளைஞர்கூட வேலை இல்லாத் திண்டாட்டத்தால் அவதியுறுகின்றனர். மூளைக் கூர்மையும் செல்வமும் உடைய ஒவ்வோர் இளைஞனும் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்பதனை வலியுறுத்தும் மு.வ. படித்த படிப்பும் பெற்ற பட்டமும் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை என்று பெரியாரைப் போன்றே நொந்து போகின்றார்.

> *கல்லூரிக் கல்விக்காக மாதம் நூறு, நூற்றிருபது செலவு செய்துவிட்டுப் பட்டம் பெற்று முடித்தபின் மாதம் ஐம்பது அறுபது ஊதியம் பெற வழியில்லாமல் வருந்தும் இளைஞர்களைப் பார்க்கும்போது என் மனம் நோகிறது (நண்.ப.43).*

கிராமங்களின் தாழ்நிலைக்குப் பெரியாரும், மு.வ.வும் சுட்டும் காரணங்கள் ஒத்த நிலையினவாக அமைதல் போன்றே, ஒட்டுமொத்த சமூகத்தின் பொருளாதார நிலை தொடர்பான விளக்கங்களிலும் ஒத்த நிலைகளைக் காணமுடிகின்றது. அறிவியல் அடிப்படையிலான தேவையான தொழில் மேம்பாடு, கூட்டுறவுத் தன்மை வாய்ந்த வணிகம், அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடைப்பட்ட அக்கறைத் தன்மை வாய்ந்த உறவு எனும் மூன்று நிலைகளும் இருவர்தம் சிந்தனைகளிலும் காணலாகும் பொதுத்தன்மைகளாகத் திகழ்கின்றன. எனினும் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடைப்பட்ட உயர்வு தாழ்வை வர்ணாசிரம அடிப்படையில் விளக்கும் முறை (குடி 22.9.1940, 11.11.1944) பெரியாருக்கே உரியதாக அமைகின்றது.

9

நிறைவுரை

பெண்ணுரிமை, சாதிஒழிப்பு, கல்வித்துறைச் சீர்திருத்தம், மூடநம்பிக்கை எதிர்ப்பு, புராண எதிர்ப்பு எனப் பல்வேறு நிலைகளில் பெரியாரின் சிந்தனைகளை ஒட்டியதாகவே மு.வ.வின் சிந்தனைகள் அமைந்துள்ளன. எனினும், கடவுள் தொடர்பான புரிதலைப் பெரும்பான்மையான நிலைகளில் பெரியாருடன் மு.வ. ஒன்றுபட்டு நின்றாலும் குறிப்பிட்ட ஒரு நிலையில் மட்டும் வேறுபடுகின்றார். பெரியார் இவ்உலகத்தைப் படைத்தவர் என ஒருவர் இல்லை. கடவுள் என ஒருவர் இல்லை எனும் கருத்துடையவராக இருக்க மு.வ. அறநெறி எனும் ஒழுங்குமுறையைக் கடவுளாகக் குறிப்பிடுகின்றார். சான்றோரின் அறக்கருத்துகளை வழிபாட்டு நிலையில் படிப்பதையும் வாழ்க்கையில் பின்பற்றுவதையும் கடவுள் நெறி எனும் நிலையில் இருந்து சுட்டிக் காட்டுகின்றார். இந்த நிலையில் மு.வ.வை ஆத்திகராக அர்த்தப்படுத்திக் கொள்ளலாமா என்ற வினா எழுகின்றது. இதற்கான விடையைப் பெரியார் சிந்தனைகள் வழியே நம்மால் பெற முடிகின்றது. ஆத்திகர் எனும் சொல்லைக் கீழ்வருமாறு பெரியார் விளக்கிஉள்ளார் :

> *ஆத்திகர் என்றால் நம்பிக்கைக்காரர்கள். சொந்த அறிவின்படி எதையும் ஆராயாமலும் நடக்காமலும் வெகுநாட்களாக நடந்து வருவதை அப்படியே ஒப்புக்கொள்ளுபவர்கள். ஆத்திகர் என்றால் முன்னோர்கள் கருத்துக்கு மாறாகத் தன்னறிவு கொண்டு ஆராய்வதே சில விசயங்களில் பாவம் என்றும் எண்ணுகின்றவர்கள்; மூடநம்பிக்கைக்காரர்கள்; முன்னோர்கள் சொன்னதை அப்படியே நம்பி நடக்கா விட்டால் கேடுவரும் என்று பயந்து நடப்பவர்; ஆராய்ச்சி அறிவைவிட நம்பிக்கையே பிரதானமாகக் கொண்டு நடப்பவர் (விடுத. 22.03.60).*

பெரியாரின் இக்கருத்துவழி மு.வ.வை நாம் ஆத்திகராகக் குறிப்பிட இயலாது. எதனையும் அறிவுக்கண் கொண்டு ஆராய்தல் வேண்டும். எதனையும் நமக்குரியது என்பதற்காகவோ, தொன்மை யானது என்பதற்காகவோ கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற பெரியாரின் சிந்தனை மு.வ.வின் படைப்புகளில் பரக்கப் பதிவாகியுள்ளது. சாமியார்களை நகையாடுகின்ற கதை மாந்தர்களையும் பகுதிகளையும் சடங்குகளையும் உருவ வழி பாட்டையும் சாதிய வேறுபாட்டையும் வெறுத்து ஒதுக்குகின்ற,

ஒதுக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்ற பகுதிகளையும் கண்மூடித்தனமான பழமையான பழக்கங்களைக் கைவிடும் தன்மையையும் மு.வ.வின் நூல்களில் பல்வேறு இடங்களில் காணமுடிகின்றது. அவர்தம் சொந்த வாழ்க்கை நிகழ்வுகளிலும் பார்க்க முடிகின்றது. மு.வ. சுட்டுகின்ற கடவுள் நம்பிக்கை கூட ஏன் எதற்கு எனும் காரண காரிய அடிப்படையில் அமைந்த, மனஒருமைப்பாட்டிற்காக வலியுறுத்தப் பெற்ற ஒன்றாகத் திகழ்கின்றதே தவிர, வரம்தரும் தன்மை வாய்ந்ததாக குறிப்பிட்ட மக்களை மட்டுமே முன்னிறுத்துவதாக, விதிக் கொள்கையோடு தொடர்புடையதாக அமையவில்லை. சொர்க்கம், நரகம், அற்புதங்கள் என்பன எல்லாமும் வெறுத்து ஒதுக்கப் பெற்ற சமயக் கொள்கைதான் மு.வ.வின் சமயக் கொள்கை. எனவே மு.வ. வாழ்ந்த காலத்தில் அன்றைய தமிழ்ச் சமூகத்தில் நிலவிய சராசரிக் கடவுள் - சமயக் கொள்கை மு.வ.விடம் இல்லை எனலாம். எனவே, மு.வ.வை ஓர் ஆத்திகராக அர்த்தப் படுத்திக் கொள்வதில் இடர்ப்பாடுகளே மேலோங்கி நிற்கின்றன எனலாம்.

'அஞ்சாமல் அறிவுடைமையோடு ஆண்மையோடு நன்றாக அலசி ஆராய்ந்து காலத்துக்கும் தேவைக்கும் ஏற்பத் திருத்தங் களை மேற்கொள்ளும் அறிவு படைத்தோரே பகுத்தறிவு உடையவர்' (குடி.20.01.1935) என்ற பெரியாரின் கருத்துவழி மு.வ.வைப் பகுத்தறிவுவாதி எனலாம். தம்கால ஆய்வு உலகிலும் பதிப்புலகிலும் நிலவிவந்த, பேசப்பட்டு வந்த *குறுந்தொகை* இரண்டாம் பாடலுக்கும் *திருவிளையாடல் புராண* நக்கீரர் வரலாற்றுக்கும் தொடர்பு உண்டு எனும் கருத்தியலை முதன் முதலில் தமிழ் ஆய்வுத் திறன்கொண்டு மறுத்தவர் மு.வ., அதுவும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் பதினோராம் ஆண்டு விழாவில் பழமைப் பற்றுமிக்க தமிழ் அறிஞர்கள் மத்தியில் தம் கருத்தை மிக விரிவாக எடுத்துரைத்துள்ளார். இந்த நிலைப் பாட்டுடன் இந்த நூலில் பல்வேறு இடங்களில் சுட்டப் பெற்றுள்ள மு.வ.வின் பல்வேறு கருத்தியலையும் உடன் வைத்துச் சிந்தித்துப் பார்த்தால் மு.வ. ஒரு பகுத்தறிவுவாதிதான் என்பதில் ஐயம் இல்லை. பெரியார் அளவிற்குப் பகுத்தறிவுச் சிந்தனைகள் மு.வ.விடம் வீரியத்துடன் வெளிப்படவில்லை என்றாலும் அரசுசார் கல்வித் துறையில் பணியாற்றியவர் எனும் அவர்தம் வாழ்வியல் முறையையும் கவனத்தில் கொண்டால் பகுத்தறிவு வெளிப்பாட்டு முறையில் காணலாகும் கடுமைக் குறைவிற்கான, மிதத்தன்மைக்கான காரணத்தை உய்த்துணரலாம். மேலும், பெரியாரியம் எனும் சிந்தனைக் கொள்தளத்திலிருந்து தான், திராவிட இயக்கப் பின்புலத்திலிருந்துதான் மு.வ. எனும் சிந்தனைத் தளம் உருவாகி உள்ளது; இயக்கம் இலக்கிய உருவாக்கத்திற்கு வித்திட்டுள்ளது என்பனவும் இங்கு நினைக்கத் தக்கன.

பெரியாரிய நோக்கில் மு.வ. (அ) மு.வ. படைப்புகளில் பெரியாரியம்

பெரியாரியம்

- கடவுள் மறுப்பு
- பார்ப்பன எதிர்ப்பு
- தீவிரத்தன்மை, போராடுதல், சிறை செல்லுதல்

மு.வ.இன் பகுத்தறிவு நிலைப்பாடு

பெண்ணுரிமை

மொழி உணர்வு	சடங்கு மறுப்பு
பயன்வழி இலக்கியக் கொள்கை	சாதி மறுப்பு
திருக்குறள் நேசிப்பு	புராண மறுப்பு
அறிவு முன்னிறுத்தம்	வன்முறை வறுப்பு
அறிவியல் நாட்டம்	கிராம மேம்பாடு ஒழுக்கம் போற்றல்
எளிமை	**தேவைக்கேற்ற கல்வி**

- அறமே இறைவன் - ஓர் இறைக் கொள்கை
- சிலப்பதிகார நேசிப்பு
- மிதத்தன்மை

பின்னிணைப்பு 1

காலநிரலில் மு.வ.வின் படைப்புகள்

1. 1939-குழந்தைப்பாட்டுக்கள்; *2. 1939*-சிறுவர்க்கான ஷேக்ஸ்பியர் கதைகள்; *3. 1939*-கழகத் தமிழ் இலக்கணம்-I; *4. 1939*-கழகத் தமிழ் இலக்கணம்-II; *5. 1940*-படியாதவர் படும்பாடு; *6. 1940*-சிறுவர்க்கான ஷேக்ஸ்பியர் கதைகள்-II; *7. 1941*-கழகத் தமிழ் இலக்கணம்-III; *8. 1945*-கண்ணுடைய வாழ்வு; *9. 1946*-ஓவச்செய்தி; *10. 1946*-செந்தாமரை; *11. 1947*-கி.பி. 2000; *12. 1947*-தமிழ் நெஞ்சம்; *13. 1947*-மொழிநூல்; *14. 1947*-கள்ளோ? காவியமோ?; *15. 1948*-விடுதலையா?; *16. 1948*-மணல்வீடு; *17. 1948*-திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்; *18. 1948*-அறிஞர் பெர்னார்ட்ஷா; *19. 1948*-காந்தி அண்ணல்; *20. 1948*-அறமும் அரசியலும்; *21. 1948*-அரசியல் அலைகள்; *22. 1948*-அன்னைக்கு; *23. 1948*-அந்தநாள்; *24. 1948*-பாவை; *25. 1949*-கவிஞர் தாகூர்; *26. 1949*-திருக்குறள் தெளிவுரை; *27. 1950*-மலர்விழி; *28.1950*-கண்ணகி; *29. 1950*-மாதவி; *30. 1951*-பச்சையப்பர்; *31. 1951*-மண்ணின் மதிப்பு; *32. 1951*-பெற்ற மனம்; *33. 1952*-குறட்டை ஒலி; *34. 1952*-அல்லி; *35. 1952*-இளங்கோ; *36. 1952*-மொழியின் கதை; *37. 1952*-எழுத்தின் கதை; *38.1952*-சொல்லின் கதை; *39. 1952*-மனச்சான்று; *40. 1952*-முல்லைத்திணை; *41.1953*-கரித்துண்டு; *42. 1953*-இலக்கிய ஆராய்ச்சி; *43. 1953*-தம்பிக்கு; *44. 1953*-தங்கைக்கு; *45. 1953*-நற்றிணை விருந்து; *46. 1954*-குழந்தை; *47. 1954*-காதல் எங்கே; *48. 1954*-நண்பர்க்கு; *49. 1954*-மொழி வரலாறு; *50. 1954*-நெடுந்தொகைச் செல்வம்; *51. 1954*-நெடுந்தொகை விருந்து; *52. 1954*-மொழியியற் கட்டுரைகள்; *53. 1954*-யான் கண்ட இலங்கை; *54. 1955*-குறுந்தொகைச் செல்வம்; *55. 1955*-பழியும் பாவமும்; *56. 1956*-கயமை; *57. 1956*-நெஞ்சில் ஒரு முள்; *58. 1956*-நடைவண்டி; *59. 1956*-குறுந்தொகை விருந்து; *60. 1956*-கொங்குதேர் வாழ்க்கை; *61. 1956*-கல்வி; *62. 1956*-நாட்டுப் பற்று; *63. 1956*-மொழிப்பற்று; *64. 1957*-The Treatment of Nature in Sangam Literature;*65. 1958*-அகல் விளக்கு; *66. 1958*-குருவிப்போர்; *67.1958*-நற்றிணைச் செல்வம்; *68. 1959*-பெண்மை வாழ்க; *69. 1959*-உலகப்பேரேடு; *70. 1959*-மூன்று நாடகங்கள்; *71. 1959*-இலக்கியத்திறன்; *72. 1959*-புலவர் கண்ணீர்; *73. 1960*-இளங்கோவடிகள்; *74. 1960*-வாடாமலர்; *75.1960*- இலக்கிய மரபு; *76. 1961*-மண்குடிசை; *77. 1962*-திரு.வி.க.; *78. 1962* - இலக்கியக் காட்சிகள்; *79. 1964*-பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை; *80. 1967*-Ilango Adigal; *81. 1968* - குறள் காட்டும் காதலர்; *82. 1970* - அரசியல் தொண்டு; *83. 1971*-உலகம் உய்ய; *84. 1972*-தமிழ் இலக்கிய வரலாறு; *85. 1973*-நல்வாழ்வு.

குறிப்பு

மு.வ.ஆய்வடங்கல் 1976-இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடாக வெளி வந்துள்ளது.

இந்நூலில் மு.வ.வின் நூல்கள் சிறுவர் இலக்கியம், படைப்பிலக்கியம், இலக்கிய ஆய்வு, இலக்கிய வரலாறு, மொழி யியல், சிந்தனை நூல்கள் எனும் தலைப்புகளில் 85 நூல்கள் பற்றிய குறிப்புகள் அளிக்கப்பெற்றுள்ளன. இப் பட்டியலாக்கத்தில் 1970-இல் அரசியல் தொண்டு எனும் நூல் வெளிவந்ததாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளது. இந்நூல் நாட்டுப்பற்று, உலகப்பேரேடு எனும் இரு நூல்களின் கருத்துகளைக் கொண்ட மறுஆக்கம் என்று குறிப்பு அளிக்கப்பெற்றுள்ளது.

அண்மையில் மு.வ. நூற்றாண்டை ஒட்டிப் பாரிநிலையம் மு.வ. நூல்களை மறுபதிப்புச்செய்து வெளி யிட்டுள்ளது. அந்நூல் களின் முகப்புப் பக்கங்களில் ‘டாக்டர் மு.வ.வின் பெருவாழ்வு’ எனும் கட்டுரை அளிக்கப் பெற்றுள்ளது. அக்கட்டுரையில் நாவல், சிறுகதை, சிந்தனைக்கதை, நாடகம், கட்டுரைகள், இலக்கியம், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், பயண இலக்கியம், இலக்கிய வரலாறு, மொழிஇயல், வாழ்க்கை வரலாறு, ஆங்கில நூல், சிறுவர் இலக்கணம், மொழிபெயர்ப்பு நூல் எனும் தலைப்பு களில் மு.வ.வின் 85 நூல்கள் பகிர்ந்து பட்டியலிடப் பெற்றுள்ளன.

இப்பட்டியலில் மு.வ. ஆய்வடங்கலில் இடம் பெற்றுள்ள *உலகம் உய்ய* (1970) எனும் நூல் இடம்பெற வில்லை. *அரசியல் தொண்டு* (1970) எனும் நூலும் விடுபட்டுள்ளது. *மு.வ. ஆய்வடங்கலில்* குறிப்பிடப் பெறாத *டாக்டர் அல்லி, இளைஞர்க் கேற்ற இனிய கதைகள்* எனும் இருநூல்கள் பேரா. திருநாவுக்கரசு அவர்களால் குறிக்கப்பெற்றுள்ளன. ஆனால், *டாக்டர் அல்லி* எனும் நூல் மு.வ. அவர்களால் எழுதப்பெற்றது அன்று.

இந்நூல்கள் தவிர மு.வ. எழுதி நூலாக்கம் பெறாத கட்டுரைகள் இருபெரும் தொகுதிகளாக *மு.வ. கட்டுரைக் களஞ்சியம்* எனும் பெயரில் 2011-இல் வெளியிடப் பெற்றுள்ளன.

பின்னிணைப்பு 2

சாதி ஒழிப்பு (மு.வ.வின் கட்டுரை)

பறவைகளுக்குள்ளே சாதி உண்டு. விலங்குகளுக்குள்ளே சாதி உண்டு. புழுப்பூச்சிகளுக்குள்ளே சாதி உண்டு; வேறு சாதிப் பறவையோ, விலங்கோ, புழுப்பூச்சிகளோ சேர்ந்து வாழவும் முடியாது; இனம் பெருக்கவும் முடியாது.

ஆனால் மனிதர்க்குள்ளே சாதியில்லை. எந்த மொழியினராயினும், எந்த நாட்டினராயினும், எந்த நிறத்தினராயினும் வேறுபட்ட மனிதர் சேர்ந்து வாழ முடியும். இனம் பெருக்கவும் முடியும்.

எந்தச் சமயவாதியும் மறுக்க முடியாத உண்மை இது. எவ்வளவு மூடநம்பிக்கை உடையவர்களும் இதை மறுக்க முடியாது.

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் வியக்கத்தக்க வகையில் வளர்ந்துவிட்டது. விஞ்ஞானத்தின் துணையால், மனிதரின் உடம்பில் உள்ளுறுப்புகளையும் கண்ணால் காணமுடிகிறது. அவற்றின் தன்மைகளைத் தெளிவாக ஆராய முடிகிறது. இரத்தம் முதலியவற்றின் இயல்பையும் தெளிவாகக் கண்டுணர முடிகிறது. இதுவரையில் விஞ்ஞானிகள் செய்துள்ள ஆராய்ச்சியில், மனித இனம் ஒன்று என்ற தெளிவு பிறக்கிறதே அல்லாமல், மனிதருக்குள் சாதி இரண்டு இருப்பதாக எண்ணுவதற்கு இடம் தரவில்லை. தென்னிந்தியாவின் தமிழரின் உடம்பில் உள்ள சூடு எந்த அளவினதோ, அதே அளவினதுதான் வடதுருவத்தில் வாழும் எஸ்கிமோக்களின் உடம்பிலும் உள்ளது. வெப்பம் மிகுந்த நாட்டில் வாழ்வோரின் உடற்சூடும், தட்பம் மிகுந்த நாட்டில் வாழ்வோரின் உடற்சூடும் வேறுபடுவதில்லை. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் நூற்றுக்கணக்கான சாதிகளாக மக்கள் பிரிக்கப்படுகிறார்களே? அது எவ்வளவு பெரிய தவறு! எவ்வளவு தீய கொடுமை!

மனிதரை ஆண், பெண் என்று இயற்கை பிரித்திருக்கிறது. அது இயற்கை.

ஆள்வோர் - ஆளப்படுவோர் என்று பழங்கால அரசியல் பிரித்திருந்தது, அது செயற்கை.

கற்றவர் - கல்லாதவர் என்று பழங்காலச் சமுதாயம் பிரித்திருந்தது. அதுவும் செயற்கை.

இட்டார் பெரியார், இடாதார் இழிகுலத்தார் என்று பண்பால் பிரிக்கும் முயற்சி தோன்றியது உண்டு. அதுவும் செயற்கை.

ஆள்வோர் ஆளப்படுவோர் ஆவதை உலகம் பலமுறை கண்டுவிட்டது. கல்லாதவரின் குடும்பத்தில் உயர்ந்த கல்வியாளர் பிறத்தலையும், உலகம் கண்டுவிட்டது. இட்டுவந்த வள்ளல் மரபில் ஈயாக் கையர் பிறத்தலையும் இடாதவர் ஒரு காலத்தில் உளம் உவந்து ஈதலையும் கண்டுவருகிறோம். செல்வர், வறியவர் ஆதலும், வறியவர் செல்வர் ஆதலும் அன்றாடக் காட்சிகள்.

இந்த நான்கு செய்கைப் பிரிவுகளையும் இன்று மதிப்பவர் இல்லை. வாழ்வில் நேரும் வாய்ப்புகளாலும், உள்ளத்தில் அமையும் பண்புகளாலும் ஏற்படும் பிரிவுகள் இவை. இவை மாறும். இவை கொண்டு மக்களைச் சாதி சாதியாகப் பிரிக்க முடியாது.

இவை நீங்கினால், இயற்கைப் பிரிவுகள் வேறு இரண்டு உள்ளன. ஒன்று நிறத்தால் அமைவது; மற்றொன்று மொழியால் அமைவது.

நிறத்தால் சாதி பிரிக்கலாம் என்றால், தமிழ் நாட்டில், சிவப்பு, மஞ்சள் கலந்து சிவப்பு, கருமை கூடிய மஞ்சள், சிறு கருமை, மிகக் கருமை என்ற நிறமுடைய மக்கள் இருக்கிறார்கள். இந்த அடிப்படையில் சாதி பிரிந்ததாகத் தெரியவில்லை. இப்போது உள்ள ஒரே சாதி மக்களில் பல நிறம் இருக்கின்றனவே. கணவன் ஒரு நிறம், மனைவி ஒரு நிறம், தந்தை ஒரு நிறம், மக்கள் ஒரு நிறம், அண்ணன் ஒரு நிறம், தங்கை ஒரு நிறம் என்று இப்படி ஒரே குடும்பத்தில் நிற வேறுபாடுகளைப் பார்க்கிறோமே. இந்த வேறுபாட்டை யாரும் சாதி என்று எண்ணுவதே இல்லையே. ஆகவே நிறவேறுபாடு இயற்கை யாக இருந்தாலும் அதைத் தமிழர்களும் பொருட் படுத்துவதில்லை; அறிவுலகமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

மொழி வேறுபாடு இளமை, பயிற்சியால் அமைவது. குழந்தையாக இருக்கும்போதே தமிழ்க் குழந்தையைப் பிரித்துக் கொண்டுபோய்ச் சிங்களவரிடையே வளர்த்தால், அது சிங்கள மொழி கற்றுச் சிங்களச் சிறுவனாக வளரும். ஆகவே, மொழி இளமையில் மூளைக்குத் தரும் பயிற்சியை ஒட்டியதே அல்லாமல் உடம்பை ஒட்டியதல்ல.

இந்நிலையில் மனிதரிடையே சாதி ஏது? அறிவு சொல்கிறது இல்லை என்று; பழக்க வழக்கம் சொல்கிறது உண்டு என்று.

பழங்காலத்தில் சாதி தொழிலுலகத்தில் இருந்தது; பிறகு திருமணம் முதலியவற்றில் புகுந்தது; காலப்போக்கில் உட் கார்ந்து உண்பதில் சாதி நுழைந்தது. பிறகு கோயில் முதலிய பொது

இடங்களில் வந்தது; எப்படியோ சுடு காட்டிலும் சாதி இடம் பெற்றது. இன்று இந்தச் சாதிக் கொடுமை அரசியலிலும் தேர்தல் களத்திலும் வந்து விட்டது. அதனால்தான் அது ஆபத்து உள்ளதாக ஆகிவிட்டது.

இன்றேனும் அதை ஒழிக்க முனையாவிட்டால், நாடு உருப்படாது. இந்த நோக்கங்கொண்டு முப்பத்தைந்து ஆண்டு களாக உழைத்து வருபவர் பெரியார் ஈ.வெ.ரா. அந்தக் காலத்தில் அவர் செய்த சீர்திருத்தத் தொண்டால் முதலியார், பிள்ளை, அய்யர், செட்டியார் என்று ஒருவரை ஒருவர் அழைக்கும் பழக்கம் குறைந்தது. தம் பெயரோடு இந்தச் சாதியின் வால் சேர்த்து எழுதும் வழக்கம் பெரும்பாலும் ஒழிந்தது. சாதியில் நம்பிக்கை உடைய வைதீகர்களும் இன்று சாதியின வாலைப் பெயரோடு சேர்த்துக் கொள்வதில்லை.

இப்படிப்பட்ட சாதியின் அறிகுறி உணவு விடுதிகளின் தலைப்பில் கொட்டை எழுத்துக்களில் இருப்பது வேறு எந்த நாகரிக நாட்டிலும் காணமுடியாத மாசு ஆகும்.

இந்த மாசைப் போக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார் பெரியார் ஈ.வெ.ரா.. நாகரிகமான மக்கள் வாழும் இந்த நாட்டில் சாதியின் வாலை ஒழித்தது போலவே, உணவு விடுதிகளின் பெயரில் உள்ள 'பிராமணர்' என்ற சொல்லையும் எடுத்து விடுவார்கள் என எதிர்பார்த்தேன்; எதிர்பார்த்தவாறு நடக்க வில்லை.

உணவு விடுதிகளில் பிராமணரே இருந்து நடத்தும் விடுதிகள் சில. பிராமணரல்லாதார் பிராமணரைக் கொண்டு உணவு சமைக்கச் சொல்லி, தான் தலைவராய் உட்கார்ந்து சீட்டுப்பெற்று, பணம் பெற்று வரவு செலவுக் கணக்குப் பார்த்து நடத்தும் விடுதிகள் பல. அந்தச் சில விடுதிக்காரரும் திருந்த வில்லை. இந்தப் பல விடுதிக்காரரும் திருந்தவில்லை. சொல்லாமலே செய்யவேண்டிய சீர்திருத்தக் கடமைகளைச் சொல்லியும் செய்யவில்லை தமிழர்.

ஆயினும் ஒரு காலம் வரும். சாதி வேறுபாட்டை ஒழித்தால் அல்லாமல் நாட்டில் அமைதி ஏற்படுத்த முடியாது என்ற காலம் வந்தால், அப்போது எல்லாரும் சேர்ந்து வருந்த நேரும். அன்று பெரியார் ஈ.வெ.ரா.வின் தொண்டு எல்லார் உள்ளத்திலும் வாழும்.

நன்றி : பேரா. இராமர் இளங்கோ பதிப்பித்த
மு.வ. கட்டுரைக் களஞ்சியம்.

பின்னிணைப்பு 3

சுருக்க விளக்கம்

அந். - அந்த நாள்; *அர.* - அரசியல் அலைகள்; *அல்.* - அல்லி; *அற.* - அறமும் அரசியலும்; *அன்.* - அன்னைக்கு; *இள.* - இளங்கோவடிகள்; *உல.* - உலகப்பேரேடு; *எழு.* - எழுத்தின் கதை சொல்லின்கதை மொழியின் கதை; *கட்.* - மு.வ. கட்டுரைக் களஞ்சியம்; *கய.* - கயமை; *கரி.* - கரித்துண்டு; *கல்.* - கல்வி; *கள்.* - கள்ளோ? காவியமோ?; *காத.* - காதல் எங்கே?; *கால.* - காலந்தோறும் தமிழ்; *கி.பி.* - கி.பி. 2000; *குடி.* - குடிஅரசு; *குரு.* - குருவிப்போர்; *குழ.* - குழந்தை; *குற.* - குறள்காட்டும் காதலர்; *குறட்.* - குறட்டை ஒலி; *செந்.* - செந்தாமரை; *தங்.* - தங்கைக்கு; *தம்.* - தம்பிக்கு; *தமி.* - தமிழ்நெஞ்சம்; *தாயு.* - தாயுமானவர்; *தொ.* - தொகுதி; *நடை.* - நடைவண்டி; *நண்.* - நண்பர்க்கு; *நல்.* - நல்வாழ்வு; *நெஞ்.* - நெஞ்சில் ஒரு முள்; *ப.* - பக்கம்; *பக்.* - பக்கங்கள்; *பகு.* - பகுத்தறிவு; *பழி.* - பழியும் பாவமும்; *புல.* - புலவர் கண்ணீர்; *பெண்.* - பெண்மை வாழ்க; *பெண்.ஏ.அ.* - பெண் ஏன் அடிமையானாள்?; *பெற்.* - பெற்ற மனம்; *மண்.* - மண் குடிசை; *மண்ணி.* - மண்ணின் மதிப்பு; *மண.* - மணல் வீடு; *மல.* - மலர்விழி; *மன.* - மனச்சான்று; *மூன்.* - மூன்று நாடகங்கள்; *மொழி.* - மொழிப்பற்று; *வாடா.* - வாடாமலர்; *வாழ்.* - திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்; *விடு.* - விடுதலையா?; *விடுத.* - விடுதலை.

பின்னிணைப்பு 4

திருமணம் : பெரியாரின் கருத்து நிலை

திருமணம் தொடர்பாகத் தந்தை பெரியார் தெரிவித்துள்ள கருத்துகளின் சாரம் வருமாறு :

- திருமணத்திற்குரிய ஆண், பெண் ஆகிய இருவர் மட்டுமே முடிவு செய்தல் வேண்டும். மற்றவர்க்கு இதில் இடமில்லை. நடத்திக் கொடுக்க என யாரும் தேவையில்லை.
- தாய் தகப்பன் பார்த்து ஒருவனுக்குப் பிடித்துக் கொடுப்பது என்பது இல்லாமல் பெண்ணே தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்ட பிறகு ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது ஏற்புடையது.
- சாதி, வகுப்பு, கோத்திரம், குலம் முதலானவை கவனிக்கப் பெறாமல் மணமக்களுடைய 'யோக்கியதையே' கவனிக்கப் பெற வேண்டும்.
- திருமணத்திற்கு 5 நாள் ஒதுக்குவது, செலவிடுவது, வீண், நேரக்கேடு, தொந்தரவு - தொல்லை - அலைச்சலுக்குரியது.
- குப்பை செத்தைப் போட்டுப் புகைத்தல் வேண்டாம்.
- நமக்கு விளங்காத விசயத்தைப் பற்றிப் பேசுவதிலும் ஓதுவதிலும் பயனில்லை.
- திருமணப்பதிவை - ஒப்பந்தத்தை ஊர் கணக்குப் பிள்ளை, மணியக்காரரிடம் பதிவு கொண்டால் போதும். உறுதிமொழி தேவைப்பட்டால் பத்திரப் பதிவு இருக்கலாம்.
- வீட்டிலேயே நடத்திப் பின்னர் விளம்பரம்வழி திருமணச் செய்தியை அறிவிக்கலாம்.
- மக்களின் சராசரி வருமானத்தில் 10 நாள் அல்லது 15 நாள் வரும்படியையே செலவு செய்ய வேண்டும்.
- பந்தல், மேளம், சங்கீதம், ஊர்வலம், வாணவேடிக்கை வேண்டாம்; வீண் காரியங்கள். அடுத்தவர்களுக்காக, 2, 3 நாட்களுக்காக, மற்றவர் புகழ வேண்டும் என்பதற்காகக் கடன்பெற்றுச் செலவு செய்துவிட்டு வருந்தும் நிலை வேண்டாம்.
- வாழ்த்துரை வேண்டாம்; கருத்துரை அறிவுரை வழங்க அறிஞரை அழைக்க.
- தாலிகட்டும் திருமண முறையைக் கிரிமினலாக்க வேண்டும். தாலி அடிமைச் சின்னம். நாய்க்கு முனிசிபாலிட்டி பட்டை போன்றது.
- நாலுபேருக்கு அறிவிப்பதுதான் திருமணம் எனில் பார்ப்பான், பானை, சட்டி, அம்மி, அரசாணைக்கால், பட்டப்பகலில் குத்துவிளக்கு, மாட்டுமூத்திரம், சாணி இவை எதற்கு.
- திருமணம் மகிழ்ச்சியைத் தரவேண்டுமே தவிர, கவலையைத் தரக்கூடாது.
- உண்மையான திருப்தியும், காதலும், ஒழுக்கமும் ஏற்பட வேண்டுமென்றால் கல்யாண ரத்துக்கு இடமளிக்க வேண்டும்.
- திருமணத்துடன் நாட்டு முன்னேற்றம் தொடர்புடையது. எனவே, அறிவு வளர்ச்சிக்குத்தக நடத்துதல் வேண்டும்.

துணைநூல்கள்

- அறவாணன், க.ப., 2006, *இளைஞரை மாற்றும் எழுத்து*, தமிழ்க்கோட்டம், சென்னை - 29.
- அறவேந்தன், இரா., 2010, *பெரியாரிய நோக்கில் குறுந்தொகை*, தாயறம், திருச்சி - 17.
- ஆனைமுத்து, வே. (பதி.), 1974, *பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்*, தொ. 1, 2, 3, சிந்தனையாளர் கழகம், திருச்சி - 2.
- இராசாங்கம், முருகு., 1998, *முதல் குடிஅரசு சில பிரச்சினைகள் விமர்சனங்கள்*, செங்குயில் பதிப்பகம், கும்பகோணம்-612 002.
- இராமர் இளங்கோ, ச.சு. (பதி.), 2011, *மு.வ. கட்டுரைக் களஞ்சியம்*, தொ. 1,2, பாரி நிலையம், சென்னை - 8.
- கல்யாணசுந்தரனார், திரு.வி. 1969, (ம.பதி.), *திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்*, 1,2, கழகம், சென்னை - 1.
- சிதம்பரனார், சாமி., 2001 (12.பதி.), *தமிழர் தலைவர் - பெரியார் ஈ.வெ. ரா. வாழ்க்கை வரலாறு*, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை - 7.
- நன்னன், மா., 1998 (இ.ப.), *பெரியார் கணினி*, தொ.1,2, ஞாயிறு பதிப்பகம், சென்னை - 15.
- தந்தை பெரியார், 1934, *பெண் ஏன் அடிமையானாள்?* பகுத்தறிவு நூற் பதிப்புக் கழகம், ஈரோடு.
- …………, 1943, *இனி வரும் உலகம்*, குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு.
- …………, 1949, *திருக்குறளும் திராவிடர்கழகமும்*, வள்ளுவர் பதிப்பகம், பவானி.
- மங்கள முருகேசன், ந.க., 2009, *திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113.

- மகாலிங்கம், ப., 1999, *திரு.வி.க.வின் சமுதாய நோக்கு*, செல்லம் பதிப்பகம், சென்னை - 600 083.
- மணி, தா.செ. கொளத்தூர் (பதி.), 2008, *பெரியாரின் எழுத்தும் பேச்சும்*, தொ.1-30, பெரியார் திராவிடர் கழகம், சென்னை - 41.
- *மு.வ. நூற்றாண்டு விழா மலர்*, 2011, பாரி நிலையம், சென்னை - 8.
- ராஜதுரை, எஸ்.வி. - கீதா, வ., 2009, *பெரியார் சுயமரியாதை சமதர்மம்*, விடியல்பதிப்பகம், கோயம்புத்தூர் - 15.
- ரகுநாயகன், கா.அ.ச., 1985, *மு.வ. எங்கள் ஆசிரியர்*, (பதி.வி.இல்லை.)
- வீரமணி, கி., (பதி.), 2009, 2010, *பெரியார் களஞ்சியம்*, குடிஅரசு, தொ.1-15 - பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை - 7.
- வீரமணி, கி., 2002 *பெரியாரியல் ஆய்வுரைகள்*, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை - 7.
- வரதராசன், மு., 2012-இல் பாரி நிலையம் வெளியிட்ட நூல்கள் எண்பத்தைந்தும் (விவரம் பின்னிணைப்பு ஒன்றில்).
- *விடுதலை* - தந்தை பெரியார் 100வது ஆண்டு பிறந்தநாள் மலர், 1978, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை - 7.
- *விடுதலை*, 23.5.2012.
- வேங்கடராமன், சு., 1976, *மு.வ. ஆய்வடங்கல்*, தமிழ்த் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

பொருளடைவு

அடக்குமுறைக்கு
இறையாக கூடாது 24
அதிர்ஷ்டம் 49
அம்மைநோய் 51
அல்லி 15
ஆடம்பர மூடநம்பிக்கை 21
ஆண் மறுமணம் 12
இங்கிலாந்து 17
இசுலாம் 41
இந்தி கற்றல் 79
இயக்கத்தாக்கம் 3
இராமாயணம் 85
இலக்கியம் 82
இலக்கியத்தின் நோக்கம் 82
இன்றைய
வாழ்க்கைக்குரிய நூல் 89
இறைஉணர்வு 80
இனஉணர்வு 80
ஈரோடு திட்டம் 93
உடம்பால் உழைப்பு 23
உடல் உழைப்பு 19
உண்மையான காதல் 19
உரிமை வாழ்விற்கு
அறிவுத்தொடர்பு தேவை 16
உருவ வழிபாடு 46
உழைப்பின்மை 93
உற்பத்தி முறையும் சாதியும் 99
உற்பத்தியில் பெண்கள் 95
ஊழ் 62,51
எதிர்த்தல் 47
எளிய திருமணம் 21
எளிய வாழ்க்கை 17
எழுத்துச் சீர்திருத்தம் 80
ஏழைகளை எண்ணிப் பார்க்க 26
ஐன்ஸ்டீன் 49
ஒரு பிறவிக்கு ஒரு நீதி 13
ஒழுக்கச் சிதைவு 97
ஒழுக்கத்தில் சமஉரிமை 11
ஒழுக்கப் பிறழ்வு 12
கடமைகள் 28
கடமை தவறுதலும் 60
கடவுள் நம்பிக்கையும்
கடவுள் நம்பிக்கையும் 1
பெண்ணடிமைத்தனமும்
கடவுள் மறுப்பு 38
கடவுள் எனும் சொல் 38
கண்ணகி மனம் 23,25
கணவன் மனைவி உறவு 8
கணவன் தெய்வமன்று 23
கரித்துண்டு 11,49
கலப்பு மணம் 20
கலியாணம் 20
கள்ளோ காவியமோ 16
கற்பித்தல் முறை 67
கற்பு : உண்மையான
வாழ்க்கை 11
கன்னிகாதானம் 20
காட்டுமிராண்டி மொழி 76
காதல் மணம் 20
காமத்துப்பால் திருமண
மந்திரமாதல் வேண்டும் 21
கி.பி. 2000 51,67
கிராம வாழ்க்கை 95
குரங்கு ஒரு விலங்கே 51
குழந்தை வளர்ப்பு 29
குறையை உணர்க 28
குன்றக்குடி அடிகளார் 47
கைவல்ய சாமி 47
கோவில்
- சாதி 55
- தமிழ் 56
கோவிலும் தீங்கும் 35
சடங்குகள் அற்ற மணம் 22
சமகாலப் பெண் 6
சமதர்மம் 95
சமதர்மத்திட்டம் 95
சமநீதி 95
சமயம் 37
சமயச் சான்றோர் 45
சமுதாய வழிகாட்டுப்பாடு 20
சாத்திரம் பார்த்தல் 50
சாதியால் விளையும் தீங்கு 35
சாதி வேறுபாடு
பொய்யானது 34
சாமியார்கள் 47
சிங்கார வேலர் திட்டம் 93
சிலப்பதிகாரம் 48
சுதந்திரக்கற்பு 12
சுயமரியாதைக்காரர்களும் 67
கல்வியும்
சுயமரியாதை மாநாடு 7
செந்தாமரை 48
செபமாலை உருட்டுதல் 47
சேமிக்கும் பழக்கம் 98
சொத்துரிமை 8
சோதிட நம்பிக்கை 49
ஞானியர் அடிகள் 47
தங்கைக்கு மடல் 25
தமிழர்க்குரிய 85
இலக்கியம் அல்ல
தலைவிதி 51
தவம் செய்தல் 47
தன்மான உணர்ச்சி 40
தனிமனித மேம்பாடு 99
தாரா முகூர்த்தம் 20

தாய்மொழிக் கல்வி 77
திராவிடர் கழகம் 2
திருக்குறள் 90
திருக்குறள் நேயம் 87
திருமணம் 19
திருமண வயது 8
திருவள்ளுவர் 15
தீண்டாமை ஒழிப்பு 31
தீயவன் நல்லவனாக முடியும் 1
துணைவிக்கு அழகு மட்டும் போதாது 19
தெய்வமணம் 25
தேர்வு முறை 66
தேவநாகரி 79
தொடக்கப்பள்ளிக்கல்வி 72
நம்பிக்கை 48
நாணம் :
கற்றுக்கொள்ளும் பண்பு 14
நாள் பார்த்தல் 49
நெஞ்சில் ஒரு முள் 13,48
பட்டப்படிப்பு பயனற்றுப் போதல் 99
படித்த பெண்களும் படிக்காத பெண்களும் 16
படித்த பெண்ணைத் திருமணம் செய்க 18
படைப்பாளியின் தனித்தன்மை 5
பண்பாட்டு மரபு 7
பணியாற்ற வேண்டும் 19
பள்ளிகளில் பெண்களே வேலைபார்க்க வேண்டும் 71
பாலின வளர்ச்சி 17
பிற்போக்குத் தன்மை 13
பெண் : ஆராய்ச்சி
- போராட வேண்டும் 9
- மனவளர்ச்சி 15
- இயல்பு 14
- உடைமுறை 17
- உரிமை 6
- கல்வி 15
- கற்பு 10
- தொழில் 15
- பொருளீட்டும் திறன் 15
- போராட வேண்டும் 9
- மறுமணம் 8
பெண் உயிரினத்திற்கு நாணமில்லை 14
பெண்ணடிமைத்தனமும் கடவுள் நம்பிக்கையும் 7
பெண்ணியம் :
பெரியாரின் தனித்தன்மை 9
பெண்ணுக்கான கடமைகள் 28
பெண் விடுதலை பற்றி ஆண் பேசுவது பாசாங்குத் தனமானது 7
பெரியாரின் இளம்பருவம் 37
- கடவுள் மறுப்புக் கொள்கை 32
- தொண்டு 3
- மொழிப் பற்று 73
பெற்றோர் வழி திருமணம் 20
பொது சமையலகம் 29
பொது வசிப்பிடம் 3
போலி சமயத்துறவி 47
பொருள் 93
பௌத்த சமயம் 45
மக்களின் அறியாத்தனம் 46
மணமக்களுக்கான அறிவுரை 22
மதக்கொள்கை 9,40
மதமாற்றம் 41
மரபு ரீதியான பெண் 15
மன்னிக்கத்தக்க ஒழுக்கப் பிறழ்வு 13
மனித இழிவு 43
மனைவியால் கணவனைத் திருத்த முடியும் 23
மின்சார இயக்கம் 46
மு.வ. ஆய்வடங்கல் 105
- கட்டுரைக் களஞ்சியம் 106
- கடவுள் நம்பிக்கை 43
- பகுத்தறிவு நிலைப்பாடு 103
- படைப்புகள் 104
- படைப்பில் பெண்கள் 10
மூடநம்பிக்கையை வெல்லுதல் 10
மூடப்பழக்க வழக்கங்கள் 48
மேடைப்பேச்சு 84
மொழி 73
வடிவாம்பிகை தாமோதரன் 7
வர்ணாசரம முறை 60,94
வழிபாட்டில் சடங்கு 44
வழிபாட்டு முறைகள் 56
வறுமைக்கான காரணங்கள் 98
வறுமையைப் போக்குதல் 98
வாடாமலர் 48
வாழ்க்கைத் துணை 20
விட்டுக் கொடுத்துச் செல்லுதல் 23
விஞ்ஞானமும் அறநெறியும் 26
விஞ்ஞானப் படிப்பு 14
விதிப்பயன் 15
விதவைக்குச் சொத்துரிமை 8
விபச்சாரம் 12
வைக்கம் 41

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
படைப்பு நெறிமுறைகள்	150.00
Comparative Studies in Literary Cultures	100.00
Sangam Classics : New Perspectives	105.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள்	100.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம்	170.00
கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை	45.00
தமிழ் நாடக வகையும் வரலாறும்	110.00
வா.செ.கு.என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1	85.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2	75.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1	125.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல்	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல்	95.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல்	190.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல்	90.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல்	55.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல்	120.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.)	65.00
வல்லம் புராணம்	200.00
இதழியல் உலகம்	120.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	60.00
படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு	100.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும்	85.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	115.00
பெயரியல்	55.00
தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை	45.00
தலித் அறம்	45.00
பொதுவுடைமை இயக்க இதழ்கள்	115.00
தமிழில் இதழியல்	270.00
மொழிஞாயிறு தேவநேப் பாவாணரின் பன்முக ஆளுமை	50.00

....

739 பெரியாரிய நோக்கில் மு.வ.	55.00